www.tamilarangam.net

# எரிமலை

ஏப்ரல் 2000




## நெஞ்சுநெகிழ ஓர் ஆனந்த அவஸ்தை

பக்கம் 8



## மண்ணை துண்டாடிய ஆனையிறவுச் 'சதியை' மண்மேடாக்கிய கரிகாலன்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கறைப் பூக்கள்



**மதிப்பிற்குரிய எரிமலை ஆசிரியருக்கு,**

தங்களின் எரிமலைப் பத்திரிகை நண்பர் வீட்டில் தற்செயலாகப் படிக்க நேர்ந்தது. தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகைகளில் ஈழப்போராட்டத்தை பற்றி தெரிவித்த கருத்துக்களுக்கு முற்றிலும் மாறாகவும் உண்மை யாகவும் உள்ளதை என்னால் தெளி வுபடுத்திக் கொள்ளமுடிந்தது, ஆகை யால் தொடர்ந்தும் எரிமலை பத் திரிகை படிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள நானும் எனது நண்பர்களும் விரும்புகின்றோம். தொடர்ந்தும் எரிமலை பத்திரிகை படிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பீர்கள் எனஎதிர்பார்க்கிறோம்.

*சீனு*
*குவைத்*

✉ ✉ ✉

**அன்பின் ஆசிரியருக்கு,**

சென்ற இதழில் மலையகத் தமி ழர்கள் பற்றிய கட்டுரையில் அவர் கள் படும் அவலத்தைப் படித்தேன். போராட்டத்தில் அதிலும் நேரடியாக அரச பயங்கரவாதத்தினால் பாதிக் கப்படும் உறவுகளான, காலங்கால மாக ஒடுக்கப்பட்டுவரும் எம் மலையக சகோதரர்கள் பற்றிய மேலும் பல ஆக்கங்கள் வெளிவர வேண்டும்.

மேலும் வங்காளதேச மாணவர் புரட்சி பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள் அங்கு முன்பு முக்திவாகினி என்ற புரட்சி அமைப்பும் வங்க விடு தலைக்காகப் போராடியதாகவும் அது பின்னர் இந்தியப் படைகளால் ஒழிக்கப்பட்டதாகவும் அறிந்தேன். இனிவரும் இதழ்களில் முக்திவாகினி பற்றிய ஆக்கங்களை எதிர்பார்க்கி றோம்.

*குமார்*
*ஓஸ்லோ*
*நோர்வே*

✉ ✉ ✉

**தாய்மண் வெளியீட்டாளர்களுக்கு,**

பெப்ரவரி இதழ் கிடைக்கப் பெற் றேன். தமிழீழத்தில் ஓயாத அலைக ளென விடுதலைப் புலிகள் திரண்டு வடபுல தாயகத்தை மீட்டு வருகின்ற இவ்வேளையில். மீட்கப்பட்ட தென் தமிழீழ நிலைமைகளை தெளிவுபடுத் தும் விதமாக, தடைகள் தகர்க்கும் மட்டக்களப்பு என்ற விவரணக் கட்டுரை அமைந்துள்ளது. இலட் சியத்தால் ஒன்றுபட்ட மக்களே வரலாற் றைப் படைப்பார்கள் என்ற எமது தேசியத் தலைவரின் சிந்தனை தமி ழீழ மீட்பிற்கான காலத்தைக் கட்டியங் கூறுவது போன்று அமைந்தது.

நோர்வேயின் சமாதான முயற்சிக ளுக்கு இனவாதிகள் சம்மதிப்பார்களா என்பதும் சந்தேகமே.

*த.பாரி*
*பெங்களூர்*
*இந்தியா*

✉ ✉ ✉

**எரிமலை ஆசிரியருக்கு,**

கடந்த எரிமலையில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை சம் மந்தமாக விடுதலைப் புலிகளின் நியா யமான நிலைப்பாட்டை எடுத்து விளக் கியிருந்தார். மிகத் தெளிவான இலகு தமிழிலில் அமைந்த அவருடைய பேட்டி அனைவராலும் விளங்கக்கூடியதாக அமைந்தது. தமிழீழ விடுதலைப் புலி களின் போராட்டத்தின் நியாயத்தை அனைத்துத்தரப்பினரும் ஏற்றுக் கொள் ளக் கூடியதாகவும் இருந்தது.

மேலும் சந்திரிகா அரசின் அடுத்த கபட நாடகமான சந்திரிகா ரணில் சந்திப்பின் உண்மைத்தன்மையை சுட்டிக் காட்டுவதாக சுப்புவின் கட் டுரை அமைந்திருந்தது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாக வடிவமைப்பில் மெருகேறி வரும் எரிமலைக்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

*மணிவண்ணன்*
*லியோன்*
*பிரான்ஸ்*

✉ ✉ ✉

**ஆசிரியருக்கு,**

மத்திய கிழக்குப் பகுதியில் வாழ் கின்ற எங்கள் தாயகக் கண்ணாடியாக விளங்கும் எரிமலையின் பங்குனி மாத இதழ் கிடைத்தது. பெண்கள் சிறப் பிதழாக தேசியத் தலைவரின் மகளிர் தின செய்தியோடு கனமாய் வந்திருந் தது. சிறப்பான விடயங்கள் பல தாங்கி சீரோடும் சிறப்பாகவும் வெளிவந்த எரிமலை தாயகத்தை விட்டு பல மைல் தூரம் வாழும் எங்களுக்கு தாயக உணர்வை ஊட்டுவதாகவும் உள்ளது. மாவீரனைப் பெற்ற பெற் றவர்களின் உணர்வலைகளைத் தாங்கிய இலக்கியாவின் ஓ வீரனே எம் கண்களில் நீர் வரவழைத்தது.

*த.வேலாயுதம்*
*கட்டார்.*

✉ ✉ ✉

**மதிற்பிற்குரிய எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,**

நீண்ட நாட்களின் பின்னர் எழுத் துருவோடு உங்களுடன் தொடர்பு கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி. கண்கள் கூறும்வார்த்தைகளாக என் அறிவுக்கெட்டியவரையில் எழுத முயன்றுள்ளேன். தவிரவும் எரிம லையின் இன்றையநிலை சிறப் புக்குரியது. புதுமைப் பொலிவுடன் வெளிவரும் எரிமலை நாளைய தமிழீ ழத்தின் கடந்த காலத்தை ஆவணப் படுத்தும் ஓர் சஞ்சிகையாகும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. தங்கள் பணிதொடர மனமுவந்த வாழ்த்துக்கள்.

*ஞானி*
*நூறன்பேர்க்*
*ஜேர்மனி*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

எரிமலை
ஏப்ரல் 2000

## கட்டுரை


| | |
|---|---|
| தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசம் | பக்கம் - 16 |
| தியாகி அன்னை பூபதி ஒரு தனித்துவமான போராளி | பக்கம் - 20 |
| மாதம் ஒரு துளி | பக்கம் - 22 |
| பண்டைய கோட்டை இராச்சியத்தின் ஆட்சி மொழி தமிழ் மொழியே | பக்கம் - 30 |
| ஈழத் தமிழ் மாணவர் களின் தேசியப்பற்றும் கல்வியும் | பக்கம் - 36 |
| சுதந்திர கிழக்குத் தீமோரும் வழி நடாத்தும் சனான குஸ்மாவும் | பக்கம் - 34 |
| கிள்ளிக் கொடுத்தாக் காணாது... அள்ளிக் கொடுக்க வேணும் | பக்கம் - 40 |
| தென்பகுதியில் தலை காட்டும் இனவாதம் | பக்கம் - 46 |
| தமிழீழ எல்லைப்புறப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் | பக்கம் - 46 |


## அணையாத தீபங்கள்


| | |
|---|---|
| கப்டன் லிங்கம் | பக்கம் - 33 |


## சிறுகதை


| | |
|---|---|
| வானம் சிவக்கும் –வல்வை. ந. ஆனந்த ராஜ்– | பக்கம் - 42 |


## கவிதை


| | |
|---|---|
| விடிவை நோக்கி விரையும் கரங்கள் | பக்கம் - 19 |
| நல்லையல்லை நெடுவெண்ணிலவே -பண்டிதர் பரந்தாமன்- | பக்கம் - 32 |
| கிட்லரின் எச்சம் -ஆறுமுகம்- | பக்கம் - 38 |
| சந்தை நிலவரம் -சடையர்- | பக்கம் - 39 |


## தொகுப்பு


| | |
|---|---|
| மீள்பார்வை மார்ச் 2000 | பக்கம் - 43 |



**04** "தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் சிறீலங்கா அரசிற்கு அக்கறையில்லை" திரு. அன்ரன் பாலசிங்கம்





**12** இது எமது யுகம்!! ஐ.நாவை நோக்கி.........





**24** மூன்றாம் கட்ட ஈழப்போரும் ஐந்தாண்டு காலமும்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்றைய பின்னடைவே நாளைய வெற்றியாக மாறும்



மக்கள் வெளியேறிய நிலையில் இடிபாடுகளுடன் சுடுகாடாய்க் கிடக்கும் யாழ்ப்பாணத்தில் சிங்கள இராணுவப் பேய்கள் வெற்றிக்கொடியைப் பறக்கவிடலாம். தமிழரின் இராச்சியத்தை கைப்பற்றிவிட்டதாக நினைத்து தென்னிலங்கையில் சிங்களப் பேரினவாதக் கும்பல்கள் பட்டாசு கொளுத்திக் குதூகலிக்கலாம். இராணுவ மேலாதிக்க நிலையை எட்டிவிட்டதாக எண்ணி சந்திரிகா அரசு சமாதானப் பேச்சுக்கான சமிக்ஞைகளையும் விடலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றை தெட்டத் தெளிவாக எடுத்தியம்ப விரும்புகிறோம். அதாவது யாழ்ப்பாண மண்ணை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்து நிற்கும்வரை சமாதானத்தின் கதவுகள் இறுக்கமாக மூடப்பட்டிருக்கும். இராணுவ அழுத்தத்திற்கு பணிந்து துப்பாக்கி முனையில் திணிக்கப்படும் சமரசப் பேச்சுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பொழுதும் பங்குபற்றப் போவதில்லை. இதுதான் சந்திரிகா அரசிற்கு நாம் விடுக்கும் செய்தி. பாரிய இராணுவப் படையெடுப்பை முடுக்கிவிட்டு பல லட்சம் மக்களை இடம்பெயரச்செய்து, வரலாற்றுப் பெருமைமிக்க யாழ்மண்ணை ஆக்கிரமிப்பதன் மூலம் சமாதான சூழ்நிலையும் சமரசத் தீர்வும் ஏற்பட்டுவிடும் என சந்திரிகா அரசு எண்ணுமானால் அதைப் போல அரசியல் அசட்டுத்தனம் வேறேதும் இருக்க முடியாது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கையானது சந்திரிகாவின் ஆட்சிபீடம் இழைத்த மாபெரும் வரலாற்றுத் தவறாகும். இதன் விளைவாக சமாதானத்திற்கான சகல பாதைகளையும் கொழும்பரசு மூடிவிட்டதுடன் முழுத்தீவையுமே பெரியதொரு யுத்த நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. யாழ்ப்பாணச் சமரில் புலிகள் இயக்கம் பேரிழப்பைச் சந்தித்து விட்டதென்றும், பலவீனப்பட்டு விட்டதென்றும் அரசு பிரச்சாரச் சாதனங்கள் உரிமை கொண்டாடுவதில் எவ்வித உண்மையும் இல்லை. இந்தச் சமரில் புலிகள் பலவீனப்படவுமில்லை. பெரிய உயிரிழப்பைச் சந்திக்கவுமில்லை. யாழ்ப்பாணச் சமரில் புலிகைளவிட இராணுவத்தினருக்கே பெரிய அளவில் உயிரிழப்பும் தளபாட இழப்பும் ஏற்பட்டிருக்கின்றது. பெரிய அளவிலான ஆட்பலத்துடன் பெரிய அளவிலான ஆயுத சக்தியைப் பிரயோகித்து தனக்குச் சாதகமான நிலப்பரப்பு வழியாக முன்னேற முயன்ற பெரும் படையணிகளை எதிர்த்து எமது சக்திக்கு ஏற்ற வகையில் நாம் சாதுரியமாகப் போராடினோம். பெரும் இடர்கள், ஆபத்துக்கள் மத்தியில் போராடியபோதும் பெருமளவில் உயிரிழப்புக்களை நாம் சந்திக்கவில்லை. இதனால் எமது படைபல சக்திக்கும் படையணிக் கட்டமைப்புக்கும் பாதிப்பு நிகழவில்லை. மரபுவழிப் போர் முறைக்கு புலிகளை ஈர்த்து எமது படைபலத்தை அழித்து விடலாம் என எண்ணிய இராணுவத்திற்கு இது ஏமாற்றைத்தையே கொடுத்திருக்கின்றது. ஒட்டு மொத்தத்தில் யாழ்ப்பாணச்சமர் எமக்கு ஏற்பட்ட பின்னடைவே தவிர தோல்வியல்ல. அதுவும் ஒரு தற்காலிகப் பின்னடைவேதான். இந்திய ஆக்கிரமிப்புக் காலத்திலும் இதைவிட பெரிய பின்னடைவுகளைச் சந்தித்தோம். ஆனால் அந்தப்போரில் நாம் தோற்றுவிடவில்லை. இந்திய இராணுவமே இறுதியில் தோல்வியைச் சந்தித்தது. எனவே இன்றைய பின்னடைவே நாளைய வெற்றியாக மாறுவது திண்ணம்.

சிங்கள இராணுவம் யாழ்ப்பாண மண்ணில் அகலக்கால் பதித்திருக்கிறது. பெரும்படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பதுதான் கடினம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர் எதிர்கொண்ட வரலாற்று உண்மையிது. இந்த வரலாற்றுப் பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக்கொள்ளுவதற்கு வெகுகாலம் செல்லாது.

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே.பிரபாகரன்**

(1995ஆம் ஆண்டு மாவீரர்நாள் செய்தியிலிருந்து )



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு
ஏப்ரல்
*2000*

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*
*Fax: 01 - 43 58 11 91*

# தலைவாசல்

## வெளியேறிவிடுங்கள்! இல்லையேல் வெளியேற்றப்படுவீர்கள்!

ஆனையிறவு - இயக்கச்சிப் படைத்தளங்களை நொருக்கி தமிழர் விடுதலைப் போரில் பெரும் வரலாற்றுச் சாதனை புரிந்துள்ள ஓயாத அலைகள் 3 போர் நடவடிக்கையானது உலகெங்கும் பரவி வாழும் தமிழீழ மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. சிங்களத்தின் அதியுச்ச இராணுவ பலத்தை மிக திட்டமிட்ட விதத்தில் சுற்றிவளைத்து வியூகத்தில் வீழ்த்திய புலிகளின் போரிடும் ஆற்றல் உலகை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இராணுவ ஆய்வாளர்களும், கோட்பாட்டாளர்களும் புலிகளின் மரபுவழிச் சமரின் இரகசியம் என்ன என்ற வியப்பை பகிரங்கமாகவே வெளிக்காட்டி வருகின்றனர்.

இப் போர்க்களச் சாதனையானது சிங்களப் பேரினவாத அமைப்பினுள் பெரும் பீதியையும் கேள்விகளையும் ஏற்படுத்தியுள்ளது. தமது கதாநாயகர்களாகத் திகழ்ந்த இராணுவத்தை பகிரங்கமாகவே விமர்சிக்கின்றனர். இந்த இராணுவத்தால் ஒன்றுமே செய்யமுடியாது எனவே வெளிநாட்டு இராணுவ உதவி தேவையென ஆசிரியர் தலைப்புரைகளை சிங்கள இனவாத ஏடுகள் எழுதுகின்றன.

இவ்வாறான பல்வகை அபிப்பிராயங்களையும், விவாதங்களையும் தோற்றுவித்த ஓயாத அலைகள் 3 நடவடிக்கை ஒரு தெளிவான செய்தியை சிங்களத்திற்கு இடித்துரைத்துள்ளது. தமிழீழ மண் இனி சிங்கள ஆக்கிரமிப்பை விரட்டிடும் பலத்துடன் எழுந்துவிட்டது. தயவு செய்து எமது மண்ணைவிட்டு வெளியேறிவிடுங்கள், அல்லது வெளியேற்றப்படுவீர்கள் என்பதை ஆனையிறவுப் பாச்சல் மூலம் புலிகளும் தமிழ் மக்களும் எடுத்துரைத்துவிட்டனர்.

ஒருஅங்குல மண்ணைவிட்டும் வெளியேறமாட்டோம் என பாராளுமன்றத்தில் சவால்விட்ட சிங்களத் தலைமைக்கும் உயிர்போனாலும் விலகுமாறு உத்தரவிடமாட்டேன் எனக் கூறிய சந்திரிகாவுக்கும் இச்செய்தி இடித்துரைக்கப்பட்டுள்ளது.

ஆயினும், சிங்கள அமைப்பினுள் ஆழவேரூன்றியுள்ள பேரினவாதச் சிந்தனைகளும், பண்பாடும் தொடர்ச்சியாக அழிவையே வேண்டிநிற்கின்றன. தமிழீழத்தை ஆக்கிரமிப்பதற்காக தமது இறைமையையும் இழக்கச் சிங்களம் தயாராக இருப்பதை அதன் அறிவிப்புக்களில் காணமுடிகின்றது. இணக்கமுயற்கிகளை ஆதரித்ததிற்காக நோர்வேயை புலிகளின் கையாளகவும், பிரித்தானியாவை புலிகளின் ஆதரவு நாடாகவும் சிங்களம் கூறுகின்றது. ஆனால் மேற்குலக நாடுகளின் ஆயுத - இராணுவ உதவிகளுக்கு செங்கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது. இந்தியாவுக்கும் தமிழீழத்திற்கும் இடையேயுள்ள உறவை தமது இலாபத்திற்குப் பயன்படுத்தலாம் என எண்ணும் சிங்கள அரசு பாக்கிஸ்தானுடனான நல்லுறவையும் சீனாவுடனான நல்லுறவையும் பேணும் ஒரு செப்படி வித்தையைக் கையாண்டு வருகின்றது. இத்தகைய வெட்கங்கெட்ட சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பை முழுதாக விரட்டிவிடுவதே தமிழீழத்தின் தவிர்க்க முடியாத அரசியல் - இராணுவ தேவையாகிவிட்டது. உலக நல்லெண்ண இணக்க முயற்சிகளை வரவேற்கும் நாம், சிங்களப் பேரினவாதத்தின் இராணுவ ஆக்கிரமிப்பை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்ற ஓயாத அலைகளின் செய்தி பலம்பெற புகலிடத் தமிழர்கள் உழைத்திட வேண்டும். ஆனையிறவு வெற்றிச் செய்தியால் துள்ளிக்குதித்த ஒவ் வொரு புகலிடத் தமிழர்களும் சிங்களப் படைகள் முற்றுமுழுதாக தமிழர் தாயகத்தைவிட்டு வெளியேறுவதை உறுதிப்படுத்த உழைத்திட வேண்டும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் பிரச்சனைக்கு தீர்வுகாண்பதில் சிறீலங்கா அரசிற்கு அக்கறையில்லை

**"பொருளாதார, மற்றும் தடைகளை நீக்கி, போர்நெருக்கடியைத் தணித்து, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்தஅழைப்பை அரசாங்கம் நிராகரித்திருக்கிறது. இந்த இறுக்கமான கடும்போக்கு ஒரு உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது. அதாவது விடுதலைப் புலிகளுடன் கருத்தொற்றுமை கண்டு சமாதான வழியில் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு உண்மையான அக்கறையில்லை," என்று திரு.பாலசிங்கம் சுட்டிக்காட்டினார்.**

கடந்தமாதம் விடுதலைப்புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைபாடு குறித்து விடுத்த செவ்விக்கு பதிலாக சிறீலங்கா வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளித்து அவர் "தமிழ் கார்டியன்" பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

"பொருளாதார, மற்றும் தடைகளை நீக்கி, போர்நெருக்கடியைத் தணித்து, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்த அழைப்பை அரசாங்கம் நிராகரித்திருக்கிறது. இந்த இறுக்கமான கடும்போக்கு ஒரு உண்மையைச் சுட்டிக்காட்டுகிறது. அதாவது விடுதலைப் புலிகளுடன் கருத்தொற்றுமை கண்டு சமாதான வழியில் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு உண்மையான அக்கறையில்லை," என்று திரு.பாலசிங்கம் சுட்டிக்காட்டினார்.

போர் நெருக்கடியைத் தணித்து, இயல்பு நிலையை தோற்றுவிப்பதற்கு தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் தடைகளை அரசாங்கம் அகற்றவேண்டும் எனக்கோரி திரு. பாலசிங்கம் விடுத்த அறிக்கையை சிறீலங்கா வெளிவிவகார அமைச்சு கடுமையாக கண்டித்திருக்கிறது. தமிழ் மக்களின் நலன் கருதியே சில பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் இவற்றை ஒடுக்குமுறை வடிவங்களாக சித்தரிக்க முயல்வது தவறு என்றும், பாலசிங்கத்தின் அறிக்கையானது மிகைப்படுத்தப்பட்ட மிரட்டல் என்றும் வெளிவிவகார அமைச்சு சாடியிருக்கிறது. புலிகள் இயக்கம் மீது வெளிவிவகார அமைச்சு சுமத்தியுள்ள பல குற்றச்சாட்டுகளுக்கு திரு. பாலசிங்கம் தமது பேட்டியில் விபரமாக பதிலளித்தார்.

"எனது அறிக்கையை மிகைப்படுத்தப்பட்ட மிரட்டல் பேச்சு என அரசாங்கம் வர்ணித்திருப்பது மிகவும் தவறானது, நான் தெளிவான மொழியில், தர்க்கீகமாக தமிழர் தாயகத்தில் நிலவும் யதார்த்த நிலைமைகளை விளக்கியிருந்தேன். சிங்கள அரசு எமது மக்கள் மீது திணித்திருக்கும் ஒடுக்குமுறை வடிவங்களின் தன்மையை அம்பலப்படுத்தியிருந்தேன். நான் போர்க் குணம் கொண்டு மிரட்டல் பேச்சு பேசவில்லை. சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னதாக, போர் நெருக்கடியைத் தணித்து, போர் நிறுத்தம் செய்து, இயல்பு நிலையையும் நல்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லெண்ண சூழ்நிலையையும் ஏற்படுத்த வேண்டும் என்றே நான் வலியுறுத்தினேன். எனது அறிக்கையில் கூறப்பட்ட யோசனைகளுக்கு சர்வதேச ராஜதந்திர வட்டாரங்களில் வரவேற்பு இருந்தது. இதனால்தான் என்னை கண்டித்து ஒரு அறிக்கையை வெளியிட்டு, தமிழர் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் சிறீலங்கா அரசிற்கு ஏற்பட்டது," என்று திரு. பாலசிங்கம் சொன்னார்.

தமிழர்கள் மீது தடைகளையும் ஒடுக்குமுறைகளையும் திணிக்கவில்லையென்றும், புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவே பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அரசு கூறியிருப்பதாக பத்திரிகையாளர் சுட்டிக்காட்டியதற்கு திரு. பாலசிங்கம் கூறியதாவது.

"தமிழர் மீது திணிக்கப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்களை பாதுகாப்பு நடவடிக்கைகளென அரசாங்கம் திரிக்க முனைகிறது. இதனால் எமது மக்கள் எதிர்கொள்ளும் பாரிய துன்பங்களையும் இடர்பாடுகளையும் அரசாங்கம் மூடி மறைக்கப் பார்க்கிறது. இந்த ஒடுக்குமுறையான தடைகள் எமது மக்களின் சமூகப்பொருளாதார வாழ்நிலையை ஆழமாகப் பாதித்திருக்கிறது. மீன் பிடித்துறை ஒருகாலம் எமது மக்களுக்கு வளம் சேர்க்கும் தொழிலாக அமைந்தது. ஆனால் இன்று மீன்பிடித்தொழில் மீது இடப்பட்ட தடைகளால் மீன்பிடித்துறை முற்றாகச் செயலிழந்து கிடக்கிறது. இதனால் பல்லாயிரக்கணக்கான மீனவக்குடும்பங்கள் வாழவழியின்றி வறுமையின் பிடிக்குள் சிக்குண்டு அவலப்படுகிறார்கள். உரவகைகள் மீது போடப்பட்ட தடைகளால் தமிழ் விவசாய சமூகம் பெரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்து நிற்கிறது. எமது மக்களின் சுதந்திரமான நடமாட்டங்களுக்கு எதிராகவும், பயணங்களைக் கட்டுப்படுத்தியும், விதிக்கப்பட்ட தடைகள், பாஸ் முறைகள் தென்னாபிரிக்காவில் நிலவிய இனக்குரோதத்தை விடக்கொடுமையானது, அத்தோடு காவற்சாவடிகளில் மறித்து சோதனையிடுவது, கைதுசெய்வது, தடுத்துவைப்பது, கொடுமைப்படுத்துவது போன்ற பல்வேறு ரகமான ஒடுக்குமுறைகள் எமது மக்கள் மீது பெரும் துன்பத்தை ஏற்படுத்திவருகிறது. இந்த ஒடுக்குமுறை வடிவங்களின் கொடுமையான தன்மையை எமது மக்கள்தான் நன்கறிவார்கள். ஏனென்றால் அவர்கள்தான் தமது சொந்த கௌரவத்தையும் சுதந்திரத்தையும் இழந்து இத்தகைய அவலங்களை அனுபவித்து வருகிறார்கள். பாதுகாப்பு நடவடிக்கைகளால் தமிழர்கள் மட்டுமன்றி எல்லா இனமக்களுமே சிறிய "இடையூறுகளுக்கு" ஆளாகி வருகிறார்கள் என அரசாங்கம் கூறுகிறது. இது முற்றிலும் தவறானது. இது எமதுமக்களின் பெரும்துயரை சிறுமைப்படுத்தும் ஒரு கேலிக்கூத்தான முயற்சி. இந்த ஒடுக்குமுறைகளால் வேறு இனத்தவர்கள் பாதிக்கப்படவில்லை. தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக எமது மக்கள் மீது வழங்கப்பட்ட கூட்டுத் தண்டனை இது. இதில் இனக்குரோதம் ஒளிந்துகிடக்கிறது" என்று புலிகளின் ஆலோசகர் எடுத்துக்கூறினார்.

"பாதுகாப்புப் படைகளை தமிழ் மக்களின் காவற்தெய்வங்களாக அரசாங்கம் சித்தரிக்கமுயல்கிறது. யாழ்ப்பாணம் போன்ற தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் கடமையாற்றும் பாதுகாப்பு படையினர் தமிழ்மக்களை பாதுகாக்கும் தமது கடமைகளில் சிறந்த பொறுப்பாற்றல் மிக்கவர்களாக நடந்துகொள்கிறார்கள் என்றும் அரசாங்கம் ஒரு விசித்திரமான கருத்தையும் முன்வைக்கிறது. தமிழ்ப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் இழைத்த கொடுமைகளை எடுத்துக்காட்ட ஒரு நீண்ட பட்டியலே இருக்கிறது. அதாவது சட்டத்திற்கு புறம்பான கொலைகள், பாலியல் வன்முறைகள், உடல்வதைகள் மற்றும் பல கொடூரச் செயல்களில் பாதுகாப்புப் படையினர் எத்தகைய பொறுப்பாற்றல் மிக்கவர்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு எமக்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. இடம்பெயர்ந்த யாழ்ப்பாண மக்கள் பாதுகாப்புப் படையினரை நம்பி மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியபோது அவர்கள் மீது எத்தகைய கொடுஞ்செயல் இழைக்கப்பட்டது என்பதை நிரூபிப்பதற்கு இன்னும் தோண்டப்படாத புதைகுழிகள் செம்மணியில் இருக்கின்றன. அங்கு காணாமற்போன ஆயிரம் அப்பாவிகளின் சோகவரலாறு புதையுண்டு கிடக்கிறது,"

விடுதலைப் புலிகள் இயக்கம் தனது வன்முறைப் பாதையையும் பயங்கர வாதச் செயல்களையும் கைவிடும்வரை தடைகள் நீக்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்திருக்கிறது என "தமிழ் கார்டியன்" பத்திரிகையாளர் விடுத்த கேள்விக்கு பதிலளிக்கையில் திரு. பாலசிங்கம் கூறியதாவது,



"எமது ஆயுதம்தரித்த விடுதலைப் போராட்டத்தையே வன்முறைப் பாதையென்றும் பயங்கரவாதம் என்றும் சிங்கள அரசு வர்ணித்துவருகிறது. பழைய பாராளுமன்றத் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட அகிம்சைப் போராட்டங்கள் தோல்வியுற்றதைத் தொடர்ந்து ஆயுதம்தரித்த விடுதலைப் போராட்டமானது தமிழீழ மக்களின் அரசியற் போராட்டமாக வடிவம்பெற்றது. கடந்த 25 வருடங்களுக்கு மேலாகத் தொடரும் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் ஒரு நீண்ட வரலாற்றுப்போக்கையும் வளர்ச்சியையும் கொண்டது. இன்றைய வரலாற்றுக் கட்டத்தில் புலிகளின் ஆயுதப் போராட்டமானது சிங்கள அரசுக்கு எதிரான முழு அளவிலான போராகப் பரிமாணம் பெற்றிருக்கிறது. இந்தப் போரில் இருதரப்பினருமே பெரும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படைகளுடன் மரபு வழிப்போரை நடத்தி வருகின்றன. சிங்கள ஆயுதப்படைகளினது ஆக்கிரமிப்பிலிருந்து அடக்குமுறையிலிருந்தும் எமது மக்களையும் எமது மண்ணையும் மீட்டெடுப்பதே எமது ஆயுதப்போராட்டத்தின் குறிக்கோளும் இலட்சியமும் ஆகும். இன்று வடகிழக்குப் பிரதேசமமான எமது தாயகத்தின் 70 விகிதமான பெருநிலப் பரப்பு எமது விடுதலை வீரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. தமிழர்கள் செறிந்து வாழும் பல பட்டினங்கள் இன்னும் சிங்கள ஆயுதப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இப்போது சிங்கள இராணுவம் ஆக்கிரமிப்பு படையெடுப்புக்களை கைவிட்டு தன்னையும் தான் காலுன்றி நிற்கும் நிலைகளையும் பாதுகாக்கவே போர் புரிந்துவருகிறது. தமிழரின் பாரம்பரிய பட்டினங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து சிங்கள இராணுவம் பின்வாங்கி ஓடவேண்டிய காலம் கனிந்து வருகிறது. இக்காலத்தில் எமது தாயகமண் அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து முற்றாக விடுதலை பெறும் என திரு. பாலசிங்கம் குறிப்பிட்டார்."

"சிறீலங்கா அரசின் சர்வதேசப் பிரச்சார அலகான வெளிவிவகார அமைச்சு விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றி உலகெங்கிலும் விசமத்தனமான பொய்களை கூறிவருகிறது. புலிகள் இயக்கமானது குழந்தை இராணுவத்தைக் கொண்ட ஒரு சிறிய ஆயுதக்குழுவென்றும், குறிக்கோளற்ற பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவது எமது நோக்கமென்றும் புரட்டுக்களை கட்டவிழ்த்து விடுகிறது. வெளிவிவகார அமைச்சு அந்தப் பொய்களை ஒரு சில உலக நாடுகளுக்கு சந்தைப்படுத்தியும் இருக்கிறது. ஆனால் இன்றைய சர்வதேச சமூகம் இலங்கையில் நிகழ்ந்துவரும் ஆயுதப்போராட்டத்தின் தன்மை பற்றியும், உண்மை நிலைபற்றியும் அறிந்துவருகிறது. சிறீலங்கா அரசு உருவகித்துக் காட்டுவதுபோல தமிழரின் சுதந்திரப்போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்தரிக்க முடியாது என்பதையும், இப்போராட்டம் வெகுசன இயக்கமான பரிமாணத்தைக் கொண்டது என்பதையும் உணர்ந்து வருகின்றன. ஆனால் சிறீலங்கா அரசு தொடர்ந்தும் "பயங்கரவாதம்" என்ற பதத்தையே பாவித்து வருகிறது. இந்தச் சொல்லுக்கும் புலிகள் இயக்கம் முன்னெடுத்துவரும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்திற்கும் எதுவித தொடர்புமில்லை. விடுதலை போரின்புறநிலை யதார்த்தத்தை இந்தச் சொல் எந்தவகையிலும் பிரதிபலித்துக் காட்டவில்லை.

அரசமைப்பு சீர்திருத்தம் பற்றி கொழும்பில் நடைபெறும் பேச்சுக்களை நீங்கள் கேலி செய்துள்ளதாக அரசாங்கம் உங்கள் மீது குற்றம் சுமத்தியிருக்கிறது. சமாதான முயற்சியில் புலிகளுக்கு நம்பிக்கையில்லை என்பதையே உங்களது கருத்துக்கள் சுட்டிக்காட்டுவதாகவும் சொல்கிறது. அரசின் இந்தக் குற்றச் சாட்டிற்கு உங்களது பதில் என்ன என்று பத்திரிகையாளர் திரு. பாலசிங்கத்தைக் கேட்டார். அதற்கு திரு. பாலசிங்கம் சொன்னதாவது,



**சிங்கள ஆயுதப்படைகளினது ஆக்கிரமிப்பிலிருந்து அடக்குமுறையிலிருந்தும் எமது மக்களையும் எமது மண்ணையும் மீட்டெடுப்பதே எமது ஆயுதப்போராட்டத்தின் குறிக்கோளும் இலட்சியமும் ஆகும். இன்று வடகிழக்குப் பிரதேசமமான எமது தாயகத்தின் 70 விகிதமான பெருநிலப் பரப்பு எமது விடுதலை வீரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.**

"அரசமைப்பை உருவாக்குவது சம்பந்தமாக தென்னிலங்கையில் கருத்தொற்றுமைக்காக நிகழும் பேச்சுக்களை நான் கிண்டல் செய்யவில்லை. பேச்சுக்களை நடத்தும் இருபெரும் சிங்களக் கட்சிகளும் பேரினவாதக் கட்சிகள் என்பதாலும் இரண்டுமே இரத்தம் தோய்ந்த வரலாற்றைக் கொண்டிருப்பதாலும் இவர்கள் மத்தியில் ஏற்படும் கருத்தொற்றுமை தமிழரின் தேசிய அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை உருவாக்கும் என்றே சந்தேகப்பட்டேன். அத்தோடு தமிழ் மக்கள் இன்று பாரிய வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு திணறுகிறார்கள். அரசமைப்பு மாற்றம் பற்றி இழுபட்டுக்கொண்டிருக்கும் விவாதங்களுக்கும் எமது மக்களின் அன்றாட அவலங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதையே சுட்டிக்காட்டினேன். புதிய அரசமைப்பை உருவாக்கும் அரசாங்கத்தின் முயற்சி கடந்த 5 ஆண்டுகளாக இழுபட்டுவருகின்றது. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு வடிவத்தில் திட்டவரைபுகள் வெளியாகி வருகின்றன. இறுதியாக வெளிவந்த வரைவில்கூட தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகள் ஆராயப்படவில்லை. சமீபத்தில் அரசாங்கமும் யு.என்.பி யும் ஆறு தடவைகள் கூடிக் கதைத்துள்ளன. இந்த நீண்ட கலந்துரையாடல்களில் தமிழரின் தேசியப் பிரச்சினை சம்பந்தமாக எதுவுமே விவாதிக்கப்படவில்லை. தனிப்பட்ட விவகாரங்களும் கட்சிப் பிரச்சினைகள் பற்றியுமே நீண்ட நேரம் பேசப்பட்டிருக்கின்றது. இது ஒருபுறமிருக்க, பௌத்த மகாசங்கத்தினர் அண்மையில் பொரளையில் ஒரு மாநாடு கூட்டி "ஏழு கோட்பாடுகளை" அல்லது "ஏழு கட்டளைகளை" பிரகடனப் படுத்தியுள்ளனர். புதிய அரசமைப்பில் இணக்கம் காணமுடியாத நிபந்தனைகளாக இவை பிரகடனமாகியுள்ளன. இந்தப் பொரளைக் கோட்பாடுகள் தமிழரின் திம்புக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரண்பட்டவையாக அமைந்திருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் தென்னிலங்கையில் ஏற்பட்டு வருவதாக கூறப்படும் கருத்தொற்றுமை எந்த அளவிற்கு தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வை வழங்கும் என்பதில் புலிகள் இயக்கத்திற்கும் தமிழ் மக்களிற்கும் பெரும் சந்தேகம் எழுந்திருக்கின்றது.

போருக்குப் பயன்படுத்தக்கூடிய பொருட்கள் தவிர உணவு, மருந்துவகைகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் வன்னிக்கு அனுப்புவதாக அரசாங்கம் கூறியிருப்பதை திரு. பாலசிங்கம் வன்மையாகக் கண்டித்தார்.

"உணவு வகைகளையோ, மருந்து வகைகளையோ மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையோ அரசாங்கம் ஒழுங்கான முறையில் தேவையான அளவிற்கு அனுப்புவதில்லை. யானைப் பசிக்கு சோளப்பொரி போட்டது போல எப்பொழு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாவது இடைக்கிடையே பற்றாக்குறையாகவே பொருட்கள் அனுப்பப்படுவது வழக்கம். சில காலங்களில் ஒன்றுமே வருவதில்லை. சில சமயங்களில் எல்லையில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் உணவு, மருந்துப் பொருட்களை உள்ளே அனுமதியாது தடுத்துவிடுகிறார்கள். இதனால் பல சந்தர்ப்பங்களில் வன்னியில் வாழும் மக்கள் பட்டினிக்கும் சாவின் விளிம்பிற்கும் தள்ளப்படுவதுண்டு. உணவையும், மருந்தையும் போராட்டமாக பாவிக்கும் இந்தக் கொடுஞ்செயலைக் கண்டித்து வன்னிமக்கள் எத்தனையோ தடவைகள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்பாக ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்களை நடத்தியிருக்கிறார்கள். கடந்த பல மாதங்களாக வன்னிக்கு மருந்துப் பொருட்களை செல்லவிடாது இராணுவம் தடுத்துவருகிறது. இதனால் வன்னிப் பெருநிலத்தில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள். மருத்துவ மனைகளே மூடப்பட்டு வரும் மோசமான நிலை அங்கு தோன்றியிருக்கிறது. சிங்கள இராணுவத்தினரின் இந்த மனிதாபிமானமற்ற செயலை வன்மையாக கண்டித்து அண்மையில் எம்.எஸ்.எப் என்ற பிரெஞ்சு வைத்திய நிறுவனம் ஓர் பகிரங்கமான அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது. எமது மக்கள் எதிர்கொள்ளும் இந்த துன்பமான அவலநிலைமை பற்றி சர்வதேச சமூகம் அறியும். ஆனாலும் சர்வதேச நாடுகள் சிறீலங்கா அரசாங்கத்தைக் கண்டிக்காமல் மௌனம் சாதித்து வருகின்றன. இந்த மௌனமானது சிறீலங்கா அரசாங்கத்தின் இனக்கொலைத் திட்டத்திற்கு ஊக்கமளிப்பதாக அமைகிறது."

வடக்கிலும் தென்னிலங்கையிலும் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர் சிங்களப் பாதுகாப்புப் படைகளின் பாதுகாப்பிலும் நிர்வாகத்தின் கீழும் வாழ்ந்து வருகின்றார்கள் எனச் சுட்டிக்காட்டும் அரசாங்கம் இப்படியான சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னைத் தானே தமிழர்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்று உரிமைகோர முடியாது எனக் கூறுகிறது. ஆகவே எந்த அடிப்படையில் உங்களது இயக்கம் தமிழரின் உண்மையான ஏகப்பிரதிநிதிகள் என உரிமைகோர முடியும் எனப் பத்திரிகையாளர் ஒரு கேள்வியை எழுப்பினார். திரு. பாலசிங்கம் இதற்குப் பதில் அளிக்கையில் பின்வருமாறு கூறினார்.

"தமிழ்க் குடிசனச் செறிவுள்ள பகுதிகளை சிங்கள ஆயுதப்படைகள் ஆக்கிரமித்து நிற்பதால் அந்த அடக்குமுறை ஆட்சியை தமிழ் மக்கள் ஆதரிக்கிறார்கள் என அரசாங்கம் கூறுவது மிகவும் அபத்தமானது. சமீபத்தில் நிகழ்ந்த ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கிலும் தெற்கிலும் வசிக்கும் தமிழ் மக்கள் சந்திரிகாவுக்கு எதிராக வாக்களிக்கவில்லையா?

**தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக கடந்த 25 ஆண்டுகளாக திடமான, உறுதியான போராட்டத்தை நடத்திவருகிறது. பரந்துபட்ட தமிழ் மக்களின் பேராதரவு எமக்கு இருப்பதால்தான் நாம் சிங்கள அரசிற்கு எதிராகவும் மற்றும் பலம் வாய்ந்த சக்திகளுக்கு எதிராகவும் எத்தனையோ இன்னல்கள் மத்தியிலும் ஒரு நீண்ட வரலாற்றைக்கொண்ட ஆயுதப்போராட்டத்தை நடத்தமுடிகிறது.**



விடுதலைப் புலிகள் இயக்கம்தான் தமிழீழ மக்களின் உண்மையான ஏகபோக பிரதிநிதிகள் என நாம் உரிமை கொண்டாடுவதற்கு பல மதிப்பீடுகள், அடிப்படைகள் உள்ளன.

முதலாவதாக, எமது விடுதலை இயக்கம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக கடந்த 25 ஆண்டுகளாக திடமான, உறுதியான போராட்டத்தை நடத்திவருகிறது. பரந்துபட்ட தமிழ் மக்களின் பேராதரவு எமக்கு இருப்பதால்தான் நாம் சிங்கள அரசிற்கு எதிராகவும் மற்றும் பலம்வாய்ந்த சக்திகளுக்கு எதிராகவும் எத்தனையோ இன்னல்கள் மத்தியிலும் ஒரு நீண்ட வரலாற்றைக்கொண்ட ஆயுதப்போராட்டத்தை நடத்தமுடிகிறது. வெகுசனத்தின் நல்லாதரவின்றி எந்தவொரு ஆயுதம்தரித்த விடுதலைப்போராட்டமும் நிலைத்து நிற்க முடியாது என்பது வரலாறு பகரும் உண்மை.

இரண்டாவதாக, தமிழ்மக்களின் உண்மையான அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் கொள்கைகளை இலட்சியமாகவரித்தே நாம் போராடிவருகிறோம். கடந்த கால்நூற்றாண்டு காலத்துக்கு மேலாக எத்தனையோ சவால்களையும், எத்தனையோ ஆபத்துக்களையும் எத்தனையோ அழுத்தங்களையும் எதிர்கொண்டாலும் நாம் எமது கொள்கையையும் இலட்சியத்தையும் உறுதி தளராது கடைப்பிடித்து வருகிறோம்.

மூன்றாவதாக, எமது போராளிகள் மகத்தான தியாகங்கள் புரிந்து, மாபெரும் அர்ப்பணிப்புக்களைச் செய்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். இதனால் விடுதலைப் புலிகள் இயக்கமானது தமிழ் மக்களின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்ற விடுதலை அமைப்பாகத் திகழ்கிறது.

நான்காவதாக, எமது ஆயுதப்போராட்டமே தமிழ்மக்களின் தேசியப்பிரச்சினைக்கு சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது. எமது போராட்டமே தமிழரின் சுதந்திரப்போரை சமகால உலகவரலாற்றின் பக்கங்களில் பதித்திருக்கிறது.

ஐந்தாவதாக, விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே வடக்கிலும் தென்னிலங்கையில் வாழும் தமிழர்கள் மத்தியில் மட்டுமன்றி உலகெங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலும் நல்லாதரவைப் பெற்ற இயக்கமாகும். கிட்டத்தட்ட பத்துலட்சம் மக்களைக்கொண்ட புலம்பெயர்ந்த தமிழ் சமூகமானது தமிழ்தேசிய இனக்கட்டமைப்பின் இணைபிரியாத அங்கமாகும்.

ஆறாவதாக, எம்மைவிட எந்தவொரு தமிழ் அரசியல் அமைப்பும் தமிழர்களின் பிரதிநிதிகளாக உரிமைகொண்டாட அருகதையற்றவை. அரசாங்கத்துடன் ஒட்டிநிற்கும் தமிழ்க் கட்சிகளும், ஆயுதக்குழுக்களும் அரசு வழிசெய்து கொடுக்க ஏமாற்றுவித்தையான தேர்தல்களைப் பயன்படுத்தியே பாராளுமன்றத்தினுள் நுழைந்திருக்கின்றன. ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கியிருப்பதாக கூறிக்கொள்ளும் தமிழ் ஆயுதக்குழுக்கள் தத்தமது குட்டி இராணுவங்களுடன் அரசாங்கத்தின் கூலிப்படைகளாகவே செயற்படுகின்றன. ஆயுதப்படைகளுக்கு தொண்டுபுரிந்து சிங்கள அரசிற்கு தமிழினத்தை அடிமைப்படுத்துவதே இவர்கள் செய்துவரும் சேவை.

நான் குறிப்பிட்ட இந்த ஆறு அடிப்படைகளையும் மதிப்பீடாகக்கொண்டு பார்த்தால் விடுதலைப் புலிகள்தான் தமிழீழ மக்களின் உண்மையான ஏகபோக பிரதிநிதிகள் என்பது புலனாகும். இவ்வாறு புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் விளக்கினார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ஆனையிறவு வீழ்ந்ததா?!

# நெஞ்சுநெகிழ ஓர் ஆ


சில மணித்தியாலங்களுக்குள், உலகத்தின் எல்லா மூலைகளுக்கும் அந்த இனிய செய்தி பரவியது. நெஞ்சை நிமிர்த்தி, முகம் மலர்த்தி தெருவில் இறங்கி, இந்த உலகத்தை உரிமையுடன் பார்த்தனர் தமிழர்கள். உலகம் தம்மை வியப்புடன் பார்ப்பதாய் உள்ளுணர்வு கொண்டனர். பெருமிதம் பொங்கும் விழிகளால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். எதிர்பட்ட தமிழர்களை கட்டியணைத்து முத்தம் தந்தனர். வெடி கொழுத்திக் கொண்டாடினர். தேசத்தின் வீரர்கள், வெற்றி கொண்டதாய் மகிழ்ச்சி. தேசியத் தலைவரின் படத்தை அச்சடித்து வீதிகளிலும் வீடுகளிலும் கடைகளிலும் ஒட்டி நெகிழ்ந்து போயினர்.

இது சற்று மிகையான வெளிப்படுத்தல் அல்ல. உண்மை இதுதான். உலகத்தில் இங்குமங்குமாய் சிதறி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ...ந்த அவஸ்தை

வாழும் தமிழர்கள் மெய்சிலிர்த்துப் போனது முற்றிலும் உண்மை. எத்துணை பெரும் சாதனை. உலகத்தில் எங்கேனும் இப்பெரும் சாதனை படைக்கப்பட்டிருக்குமா? என்றே ஒவ்வொரு தமிழனின் இதயமும் வரலாற்றைப்புரட்டிப் பார்த்திருக்கும்.

பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட படையினரைக் கொண்ட பெரும் படைத்தளத்தை நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள், தாக்கி கைப்பற்றியிருப்பது, உலக மகா சாதனையன்றி வேறென்ன.

கடந்த ஆண்டு இறுதியில், வன்னி மண்ணில் சிங்களப்படை பெற்ற மோசமான அவமானகரமான தோல்விகளுக்கு, ஏழு இராணுவ அதிகாரிகளை பொறுப்பாக்கி, அவர்களுக்கு கட்டாய பணிஓய்வை சந்திரிகா அரசு வழங்கியிருக்கின்றது. வன்னித் தோல்வி எப்படி ஏற்பட்டது எனக் கண்டறிய, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவால் அமைக்கப்பட்ட, மூன்று இராணுவ அதிகாரிகளைக் கொண்ட விசாரணைக் குழுவால், ஏழு அதிகாரிகள் தோல்வியின் பொறுப்பாளிகளாக்கப்பட்டுள்ளனர். இந்த விசாரணை முடிவின் பிரகாரம், அந்த ஏழு அதிகாரிகளுக்கும் சந்திரிகாவால் மார்ச் இறுதியில் கட்டாய பணிஓய்வு வழங்கப்பட்டது.

இப்படி ஒரு தீர்ப்பை வழங்கி, அதற்காக சிலரது தலையை உருட்டி விடுவதன் மூலம் தன் தலையைக் காப்பாற்ற சந்திரிகா முயற்சித்திருப்பது தெளிவானது. இந்த வரலாற்றுத் தோல்விக்கு பதில் சொல்ல வேண்டியவர், முப்படைக்கும் பொறுப்பான சந்திரிகா என்பதன் திசையை மாற்றி, பழி யார்மீது வீழ்த்தப்பட்டிருக்கின்றது.

அடுத்து வரும் மாபெரும் தோல்விகளை உணராமல், இத்துடன் தோல்வியால் வந்த தொல்லைகள் தொலைந்தது என சந்திரிகா நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

ஆனால், சந்திரிகாவின் நிம்மதியின் ஆயுள் கம்மி. யாவும், சிலநாட்கள்தான். ஓயாத அலைகள் மூன்றின் அடுத்தகட்டத் தாக்குதல்கள், குடாநாட்டுக்குள் சிங்கள அரசின் ஆக்கிரமிப்புக் கனவின் மையநிலை அருகே ஆரம்பித்துவிட்டது.

வடமராட்சி கிழக்கில் அமைந்திருந்த சிங்களப்படையின் பலம் பொருந்திய வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு படைத்தளங்கள், அழிக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட குடாநாட்டு மீட்புப்போர், இன்று அதன் முக்கியமான கட்டத்தில் நிற்கின்றது.

நிதானமாகவும் மெதுவாகவும் ஒவ்வொரு அடிகளையும் உறுதியாக வைத்தபடி, ஆனையிறவை முழுமையான முற்றுகைக்குள் கொண்டுவரும் நகர்வை மேற்கொண்டிருந்த விடு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைப் புலிகள், இன்று, ஆனையிறவு இயக்கச்சிப் பெருந்தளத்தை இரண்டு நாட்கள் நடத்திய உக்கிரமான தாக்குதலின் பின்னர் முற்றுமுழுதாக கைப்பற்றிக்கொண்டனர்.

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் குவிக்கப்பட்ட பெருந்தொகை நவீன ஆயுதங்கள், ஆட்லறிகள், பீரங்கிகள், டாங்கிகள், கவச வாகனங்கள் என, ஒரு இறுக்கமான, பலம்பொருந்திய இராணுவ அரக்கன் குந்தியிருப்பது போல் அமைந்திருந்த பெரும் தளமே, விடுதலைப் புலிகளால் வீழ்த்தப்பட்டுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டில், ஒல்லாந்தர்களால் ஆனையிறவில் அமைக்கப்பட்டிருந்த இத் தடைமுகாம், ஒவ்வொரு ஆக்கிரமிப்பாளர்களின் காலகட்டங்களிலும் பத்தாகி நூறாகி ஆயிரமாகி தற்போது பல்லாயிரமாகிப் பலம் பெற்ற தளமாக இருந்த நிலையிலேயே, தமிழர் சேனையால் அழிக்கப்பட்டிருக்கின்றது. அகற்றப்பட்டிருக்கின்றது.

மெதுவாக, அதேவேளை உறுதியாக, சரியாகத் திட்டமிட்டு, உரிய தந்திரோபாயங்களுடன், தமது இலக்கு நோக்கி நாட்கள், வாரங்கள், மாதங்களாக நகர்ந்த விடுதலைப் புலிகளின் விசேட கொமாண்டோப் படையணிகள், ஏப்பிரல் இருபதாம் திகதி, பெரும் தளத்தை தமது பூரண முற்றுகைக்குள் கொண்டு வந்தனர்.

மதர்ப்போடு, திமிர்காட்டி நின்ற சிங்களப்படையின் ஆனையிறவுப் பெரும் பூதத்தை, பட்டினி போட்டு பணிய வைக்கின்ற முன்னைய தந்திரோபாயத்தை கைவிட்டு, நேரடியாகவே களம் இறங்கினர் விடுதலைப் புலிகள். தற்போதைய விடுதலைப் புலிகளின் ஆயுத வளமும் படைப்பலமும், ஒரு மரபுப் போர்ப் பாணியில், இராணுவ அதிரடித் தாக்குதலை மேற்கொள்ளவும், மழை போன்று ஆட்லறி எறிகணைத் தாக்குதல்களை நடத்தவும் விடுதலைப் புலிகளுக்கு கைகொடுத்தது.

சிங்களப் படையின் வழங்கல் பாதையை முற்றாக துண்டாடி, ஆனையிறவுக்கும் பளைக்கும் இடைப்பட்ட பெரும் பிரதேசத்தை மீட்டெடுத்து பலப்படுத்தி, இறுதிக் கட்டத் தாக்குதலைத் தொடுத்தனர் விடுதலைப் புலிகளின் சிறப்புக் கொமாண்டோக்கள்.

ஆனையிறவு வீழ்ச்சி, யாழ் குடாநாட்டில் சிங்களப்படை நிலைகொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது என்பது தெட்டத் தெளிவானது. ஆனையிறவு வீழ்ச்சியுடன், சிங்களப் படையினர், தெற்கு நோக்கி தமது பெட்டிகளைக் கட்ட வேண்டிவரும் என்பது சிங்கள அரசிற்கு நன்கு தெரியும்.

அதனால்தான் ஆனையிறவை எப்பாடுபட்டாவது காப்பாற்றியாக வேண்டும் என்று, சிங்களப் படைத் தலைமையும் அரச தலைமையும் படாதபாடுபட்டன. பெருந்தொகைப் படையினரைக் குவித்தும், நவீன ஆயுத தளபாடங்களைக் கொண்டு சேர்த்தும் அது கடும் முயற்சிகளை மேற்கொண்டது. வெளிநாட்டு இராணுவ நிபுணர்களின் பயிற்சியைப் பெற்றும், ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தியும் பார்த்தது. ஆனால் யாவும் விழலுக்கிறைத்த நீராயின.

ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்றோராம் ஆண்டும், ஆனையிறவுப் பெரும் தளத்தை விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டிருந்தனர். முப்பத்தியொரு நாட்களாகத் தொடர்ந்த அந்த முற்றுகைச் சமர், இறுதியில் தன் இலக்கை அடையவில்லை என்றபோதும், விடுதலைப் போராட்டத்தை, அது இன்னுமொரு படிநிலைக்கு முன்னகர்த்தியது. இலங்கைத் தீவில் இரு இராணுவங்கள் இருக்கின்றன





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற உண்மையை அது உலகிற்கு சொல்லியது. கரந்தடிப்போர் அணிகளாக தாக்குதல்களை நடத்திய விடுதலைப் புலிகளை, ஓர் மரபுப் படையணியாக இனங்காட்டிய சமராகவும் அமைந்தது. குறைந்த வளத்துடன், பலம்பொருந்திய எதிரியை பல நாட்கள் நேருக்கு நேர் சந்தித்து, ஒரு இராணுவச் சாதனையையே விடுதலைப் புலிகள் படைத்திருந்தனர்.

ஆனால், இன்று நிலைமையோ வேறானது. ஒவ்வொரு யுத்த களங்களிலும், பட்டறிந்து போரியல் கலையில் மெருகேறிப்போயுள்ளது விடுதலைப் புலிகளின் அணிகள். யுத்த தந்திரோபாயங்கள், படைநடத்துகைகள், படை நகர்த்துகைகளை நுணுக்கமாகவும் ஒரு நீண்ட களமுனை அனுபவங்களோடு கற்றுத்தேர்ந்த தளபதிகள், பட்டை தீட்டிமிளிர்கின்ற போராளிகள், இவற்றிற்கு மேலாக விடுதலைப் புலிகளின் கைகளைப் பலப்படுத்தியுள்ள சிங்களப்படைகளின் நவீன ஆயுதங்கள், ஆட்டிலறிகள் என விடுதலைப் புலிகள் முன்னெப்போதையும்விட பலம்பொருந்திய நிலையில் இருக்கின்றனர். இவற்றை எல்லாம் விட, எதிரியின் பலம், பலவீனங்களை துல்லியமாக எடைபோட்டு, நுண்ணியமாக, அதியற்புதமாக இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, நெறிப்படுத்தும் எமது தேசியத் தலைவரின் உலகம் வியக்கின்ற போராற்றல்.

தொண்ணூற்றோராம் ஆண்டு,



ஆனையிறவை மீட்க சிங்களப்படை, கடல்வழித் தரையிறக்கத்தை மேற்கொண்டது. அதனை ஒத்தவகையில், அதேபாதையில் கடல்வழித் தரையிறக்கத்தை மேற்கொண்டே தற்போது விடுதலைப் புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றியுள்ளனர்.

ஆனையிறவு வீழ்ச்சியுடன் யாழ் குடாநாட்டு மீட்சியும், உறுதியாகி விட்டது.

கட்டளையதிகாரியை மாற்றி, படை நடத்துகைகளை மேற்கொண்ட போதும், முப்படைத் தளபதிகளை பலாலியில் தங்கவைத்து படையினரைப் போரிடப் பணித்த போதும் வெற்றி சாத்தியப்படவில்லை . விடுதலைப் புலிகளின் நகர்வை சிங்களப் படையினரின் எந்த முயற்சிகளாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இறுதிக்கட்டமாக, சந்திரிகாவின் விசேட பணிப்பின்பேரில், சிங்களத்தின் நம்பிக்கை நட்சத்திரம் ஜானக பெரேரா யாழ் சென்ற மறுநாளே, அவர்களின் மோசமான தோல்விச் செய்தியைத்தான் அவரால் கொழும்புக்கு அனுப்ப முடிந்திருக்கின்றது. ஆயிரத்தித் தொளாயிரத்து தொண்ணூற்றைந்தாம் ஆண்டு, யாழ்பாணத்தைக் கைப்பற்றும் நடவடிக்கையில் முன்நின்று வெற்றிகளைக் குவித்தவர் என்பதற்கு மாத்திரம், ஜானக பெரேரா யாழ் அனுப்பப்பட்டுள்ளார் எனக் கொள்ளப்பட வாய்ப்பில்லை. மாறாக, படுகொலைகளுக்கும் புதைகுழிகளுக்கும் பெயர் பெற்றவர் இவர் என்பதே இதன் பிரதான காரணமாக இருக்கும். செம்மணிப் புதைகுழிகளின் நாயகன் ஜானக பெரேரா தற்போது யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டிருப்பதன் நோக்கம் மிகப் பயங்கரமானதாகவும் கொடூரமானதாகவும் இருக்கும் என்றே அஞ்சப்படுகின்றது.

யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்த போது மேற்கொண்ட கொடுமையை, யாழ் குடாநாட்டை விட்டுச் செல்லுகையிலும் சிங்களப்படை செய்யப் போகின்றதா? விதைத்தால் எங்கேனும் அறுக்க வேண்டிவரும்.

**-சுப்பு-**





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ஜெனிவா

# இது எமது யுகம்

**ஐ.நா.வை நோக்கி ஓயாத அலையென எழுந்த புலம்பெயர்ந்த தமிழீழத்தவர்கள்**

சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனிவாவிலுள்ள ஐ.நா மன்றத்தை நோக்கிய ஐரோப்பா வாழ் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் அமைதிப்பேரணி இம் மாதம் மூன்றாம் திகதி வெகு சிறப்பாக நடைபெற்று முடிந்தது. ஜெனிவாவில் கரைபுரண்டோடிய உணர்வுகள் எண்ணற்றவை.

தாயகத்தின் விடுதலைக்காய் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கைகோர்த்து நின்றனர். துயருறும் மண்ணின் மக்களுக்காக அவர்களின் குரல்கள் ஓங்கி ஒலித்தன.

உலகில் மனிதம் இருப்பது உண்மையானால், மனித நேயத்தை மதிக்கும் மானிடர்கள் வசிப்பது உண்மையானால், மனித உரிமை மீறல்களை தட்டிக்கேட்கும் தயாளர்கள் இருப்பது உண்மையானால் தமிழீழத்தின் பக்கம் உங்கள் பார்வையைத் திருப்புங்கள்.

சிறீலங்கா அரசினால் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் ஒன்றா இரண்டா.

ஒன்றை ஒன்று மிஞ்சும் அளவிற்கு கொடுமைகள் மலிந்துவிட்டன. தமிழர்கள் என்பதற்காக எமது மக்கள் சிறீலங்கா அரசின் பாதுகாப்புப் படைகளினால் கொலை செய்யப்படுகின்றார்கள். தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்படுகின்றார்கள். காரணமின்றி கைதுகள், நியாயமற்ற விளக்கமறியல்கள், விசாரணையின்றி வருடக்கணக்கில் சிறைவாசம், பாரம்பரிய பிரதேசங்களைப் பறிக்கிறார்கள், சொத்துக்களை கொள்ளையடிக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் உடன் நிறுத்தவும், அல்லலுறும் தமிழ் மக்களுக்கு உணவும் மருந்தும் அனுப்புக என்பதையும் வலியுறுத்தி நீதி கேட்டு சென்றார்கள் எம் மக்கள்.

ஜெனிவாவிலுள்ள ஐ.நா மன்றத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கின்ற இவ்வேளையில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளின் கவனத்திற்கு எமது பிரச்சனை பற்றி உணர்த்தும் விதமாக அமைதிப் பேரணி சிறப்பாக ஐ.நா மன்றத்தின் முன்றலை அடைந்தது.

ஜெனிவா நகரின் தொடரூந்து நிலையத்திலிருந்து பேரணியை தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த தமிழீழ விடுதலை உணர்வாளரான திரு வைகோ அவர்கள் ஆசி கூறி ஆரம்பித்து வைத்தார். ஐ.நா மன்றம் நோக்கி பி.ப 2.30 மணிக்கு அலையெனத் திரண்ட தமிழ் மக்கள் நகரத் தொடங்கினர். தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களும் கூடவே நடந்து வருவது போன்று அவரின் உருவப்படம் ஊர்வலத்தின் முன்னே உணர்வாளர்களால் எடுத்து வரப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் நியாயமானது. தமிழர்கள் கொடுமைகளிலிருந்து மீளவேண்டுமானால் தமிழீழம் உருவாக வேண்டும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதும் நீதியானதே இதனை சர்வ தேசம் அங்கீகரிக்க வேண்டும் என்ற கோசம் வானைப் பிளந்தது.

இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, டென்மார்க், இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் விசேட தொடரூந்துகள், பேரூந்துகள், மற்றும் கார்களிலும் வந்து குவிந்ததனால் ஜெனிவா நகரே நிரம்பி வழிந்தது. திரண்ட மக்களை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தினர் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள். தவில் நாதஸ்வர தமிழிசை முழங்கப் பின்னே அவலங்களைச் சுட்டும் அலங்கார ஊர்திகள் அணிவகுக்க அணைகடந்த வெள்ளம்போல தமிழரெல்லாம் ஆடவர், பெண்டிர், சிறியவர், பெரியவர் என்ற பேதங்களைக் கடந்து இது எமது யுகம் என்பதைச் சித்தரிக்கும் ஓவியத்தையும் தாங்கியவாறு, விசேடமாக ஐ.நா முன்றலில் அமைக்கப்பட்ட மேடையின் முன் கூடினர்.

பொதுக் கூட்டம் பி.ப.4.00 மணியளவில் ஆரம்பமானது தொடக்கவுரையை முன்னாள் யாழ்.மாவட்ட விகார் ஜெனரல் இம்மானுவல் அடிகளார் நிகழ்த்தினார். தமிழீழத்தில் நடைபெறும் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகள் அடக்குமுறைகள் அனைத்தும் உடன் நிறுத்தப்படும் வரை நாம் ஓய்ந்திருக்க முடியாது. எமது வருங்காலத்தினருக்கு சுபீட்சமான வாழ்வை வழங்க நாம் அனைவரும் உழைக்க வேண்டும் என்று எம் எல்லோரதும் கடமையை உணர்த்தினர். அவரைத் தொடர்ந்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஓங்கிக் குரல் கொடுக்கும் இத்தாலியப் பேராசிரியர் எமிலியோ அஸ்ரி அவர்கள் உரையாற்றுகையில் சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் அடக்குமுறைகளை உடன் நிறுத்த வேண்டும் அல்லாவிடில் தமிழர்களது பகுதிகளைப் பிரித்துவிட வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறினார்.

சமூகவியல் பேராசிரியரும் புகழ் பெற்ற மனித உரிமைவாதியுமான திரு. நீல்சன் அவர்கள் தமது நெருங்கிய சகாவான திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவுகூரலோடு தொடங்கி சிறீலங்கா அரசு அவரைப் படுகொலை செய்தமைக்கும் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொண்டதோடு, தமிழர்கள் மீதான சிறீலங்கா அரசின் இனவாத

# நம்முடைய கரங்களையெல்லாம் உயர்த்துவோம். மலரட்டும் தமிழீழம்.

எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு. வரலாற்றின் வைகறைக் காலத்தில் இருந்து கொற்றம் அமைத்து அரசு வைத்து நடாத்தி சரித்திரம்கண்ட ஓர்இனம் இன்று நாடற்றவர்களாக இருக்கின்றனர். நூற்றாண்டின் நுளைவாயிலில் உங்கள் முன் நான் நிற்கின்றேன். இந்த புத்தாயிரம் நல்லாயிரமாய் தொடங்கட்டும். அடிமை இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்ற காலம் தமிழீழம் மலரப் போகின்றகாலம். தமிழ் மக்களின் உறவுகளைப்பிரிந்து ஆண்டுக் கணக்கில் துன்பங்களைத் துயரங்களைச் சுமக்கிறார்கள். எண்ணற்ற இளவயதினர் வாழ்க்கையின் வசந்தத்தை எண்ணிப் பார்க்காமல் இலட்சியதாகம் கொண்டவர்களாக தங்கள் தாயக விடுதலைக்காக தங்கள் பங்களிப்பைத் தருகின்றார்கள்.



நாங்கள் எட்டுத்திக்கிலும் இருந்து வந்திருக்கின்றோம். என்ன தொலைவாக இருந்தாலும் தொப்புள்க்கொடி உறவான நம் தமிழ் உறவை எந்தச்சக்தியாலும் பிரிக்கமுடியாது. தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதற்கு முனையும் சிங்களப்பேரினவாத அரசு, இட்டுக்கட்டுப்பொய்களைப் புனைந்து அப்பட்டமான, அபாண்டமான பழியை அவிழ்த்துவிட்டு, அங்கு நடைபெறும் கொடுமைகளைத் திரைபோட்டு மூடி மறைத்து உண்மையை உலகின் கண்களுக்குத் தெரியவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கிறதே அந்த முயற்சியை முறியடிப்போம். இந்தோனேசியாவின் பிடியிலிருந்து கிழக்குத்தீமோர் விடுபட்டு தனி நாடாகிவிட்டதை ஐ.நாவின் பொதுச்செயலாளர் கோபி அனான் தெரிவித்தார். கிழக்குத் தீமோருக்கு என்ன நியாயம் இருக்கிறதோ, அதைவிட ஆயிரக்கணக்கான நியாயம் தமிழீழத்துக்கு உண்டு.

காலத்தின் வஞ்சகத்தால் இலங்கைத்தீவு சுதந்திரம் அடையும்போது நியாயமான உரிமைவாழ்வு, சமத்துவவாழ்வு, மானத்தோடும் கௌரவத்தோடும் வாழும் வாழ்வு கிடைக்குமென சிலர் கொடுத்த உத்தரவாதத்தை தமிழர்கள் நம்பி ஏமாந்தார்கள். அன்று தொடங்கிய வஞ்சிக்கும் அவலம் இன்றுவரை நிற்கவில்லை. வேலை வாய்ப்பு, கல்வி, மொழி, குடியேற்றம் போன்றவற்றில் ஆரம்பித்து இன்று எங்குமே நடக்காத பாலியல்க்கொடுமைகள், கைதுகள், காணாமல்போதல் என்பன நடைபெறுகின்றன. அதுவும் எமது தமிழ்ப் பெண்கள் மீது தொடரும் பாலியல்வல்லுறவுகள் வேறெந்த நாட்டிலாவது நடந்தேறி உள்ளதா. அதேநேரம் அகிலம் சாதிக்காத ஒரு வீரவரலாற்றைப் படைத்துக்கொண்டிருப்பவர்களும் ஈழத்துப் பெண்களே.

சிறீலங்கா அரசின் கொடுமைகளைத் தட்டிக்கேட்பது தவறு என்றால், மனித உரிமைச்சாசனம் தவறு. அடிவயிற்றைக் கிழித்து சிசுக்களை துப்பாக்கி முனையால் குத்திக் கொலைசெய்த கொடுமைகளும் அங்குதான் நடந்தது. ஏன், இந்த வயிறுதானே வேங்கைகளைத் தாங்குகின்றது. இந்த வயிறுதானே இளம் புலிகளைச் சுமக்கின்றது. பெருமழை பெய்தால் என்ன? இடி இடித்தால் என்ன? பிரளையமே பொங்கிவந்தால் என்ன? அனைத்தையுமே எதிர்க்கக்கூடியதுணிச்சலுள்ள பெரும் படை அங்கு ஈழத்திலே பிரபாகரன் தலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. உலக வரலாற்றில் நிகழாத ஒரு நிகழ்வாக 5 நாட்களில் 10 முகாம்கள் வீழ்ந்தனவே. இந்த நிலை ஏற்படுவதற்காக இரத்தம் சிந்தினார்களே, உயிர்களைத் ந்தார்களே அந்த மாவீரர்களின் கல்லறைக்கு நான் வணக்கம் செலுத்துகின்றேன்.

ஈழமக்கள் வரலாற்றில் இது ஒரு மகத்தான மகோன்னதமான காலகட்டம். இது ஒரு பெரும் திருப்பத்தைத் தரப் போகின்ற காலகட்டம். கோடிக்கரங்கள் உயரட்டும். தமிழீழம் மலர்வதற்காக நம்முடைய கரங்களையெல்லாம் உயர்த்துவோம். மலரட்டும் தமிழீழம். வெல்லட்டும் தமிழீழத் தாயகத்தின் தலைவர் பிரபாகரன்.

இவ்வாறு ஜெனிவா நகரில் ஐ.நா வளாக முன்றலில் கூடிஇருந்த பலஆயிரக் கணக்கான தமிழர் மத்தியில் உரைநிகழ்த்திய தமிழீழப் போராட்ட பேராதரவாளரான திரு.வைகோ அவர்கள், உலகில் நடைபெற்ற பலவிடுதலைப் போராட்டங்கள் பற்றியும், அப் போராட்டங்கள் சந்தித்த இன்னல்கள், அவற்றினைத் தாண்டி வெற்றிகொண்டவிதம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




யிட்டு வைக்க திரு. ஓந்திரே துபாக்கியே அவர்கள் பெற்றுக்கொண்டார். இவ்வெளியீட்டு வைபவத்தோடு வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணிச் சோலையின் பணிப்பாளரும் தமிழின உணர்வாளருமான வண பிதா ஜெகத்கஸ்பார் அடிகளாரால் உருவாக்கப்பட்ட உயிரைப்பிழியும் உண்மைகள் என்ற இசைத்தட்டும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இசைநிகழ்ச்சியாக அமெரிக்க செவ்விந்தியர்கள் ஆங்கிலமொழி விடுதலைக் கானங்களை இசைத்து தமிழீழ விடுதலையோடு தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டனர்.

இறுதியாக நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்

அடக்கு முறைகள் மிக மோசமானவை எனவும் அனைத்துலக நாடுகள் இவற்றைக் கண்டித்து அல்லலுறும் தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். சர்வதேச விசுவாச சபையைச் சேர்ந்த திருவாளர் சாள்ஸ் கிறேவ் அவர்கள் தமதுரையில் பல்லின சமுதாயம் வாழ்கின்ற நாட்டில் பிரச்சனைகள் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்கப்படவேண்டுமே தவிர சண்டையின் மூலம் அல்ல என்று சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். அதனைத் தொடர்ந்து நீண்ட காலமாக தமிழினத்தின் விடிவிற்காக குரல் கொடுத்துவரும் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த சட்டத்தரணி கரன் பாக்கர் அம்மையார், தமது சர்வதேச கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் சார்பில் பேசுகையில் தமிழீழ விடுதலைக்காக போராடும் பெண் புலிகளின் வீரத்தைப் பாராட்டியவர் இன்றைய காலகட்டத்தில் தமிழ்ப்பெண்கள் தேச விடுதலைக்காக இரு மடங்கு பாடுபட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். தமிழர் மனித உரிமைகள் மையத்தின் சர்வதேசப்பிரிவின் செயலாளர் செல்வி. டியற்றி மக்கொனால் தமதுரையில் சர்வதேச சமூகம் இதுவரை காலமும் தமிழர்கள் மீதான அடக்குமுறையில் கண்கள் மூடியே இருந்து வந்துள்ளது. இனியும் அவ்வாறு இருக்கக்கூடாது என்று ஆக்குரோசமாக முழங்கியதோடு, ஆங்கிலேயப் பெண்மணியான இவர் தமிழில் உரையாற்றி, தமிழ்ச் சகோதரிகளின் அதியுச்ச பங்களிப்பையும் வலியுறுத்தினார்.

இப்பேரணியை ஒட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் விடுத்த செய்தியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பணியக நிர்வாகப் பொறுப்பாளர் வழங்கினார்.

இந் நிகழ்வின் சிகரமாக தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த தமிழீழ ஆதரவாளரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைவருமான இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வைகோ அவர்களின் உணர்ச்சிகரமான உரை இடம்பெற்றது. ஒரு மணித்தியாலங்களுக்கு மேல் இடம்பெற்ற அவரது உரையில் தமிழின விடுதலையின் வரலாற்றுத் திருப்பத்தை ஆணித்தரமாக விளக்கியிருந்தார்.

நிகழ்வின் இறுதியில் இம்மானுவல் அடிகளாரின் எனது மக்களை வாழ விடுங்கள் என்ற நூலின் பிரெஞ்சுப் பதிப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது. நூலின் முதற் பிரதியை சுவிற்சர்லாந்து நாட்டின் மனித உரிமையாளரும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் செல்வி. மடலின் அக்கர்மான் வெளி







தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




என்ற பாடலை உணர்வுப் பிழம்பாக தமிழர்கள் ஓங்கிக் கீதமிசைத்தனர். மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் புலம்பெயர்ந்து வாழ் தமிழர்கள் திரண்டு வந்தமை தமிழீழ விடுதலைப்போராட்டம் இருபத்தியோராம் நூற்றாண்டில் அங்கீகாரத்தை நோக்கி வீறுநடை போடுவதை வலியுறுத்துவதாக அமைந்தது.

சுவிற்சர்லாந்தை மையமாகக் கொண்டு இயங்கும் ஜேர்மனிய, பிரான்சிய, இத்தாலிய மொழி வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்கள் பேரணிபற்றிய செய்தி களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளி, ஒலிபரப்பியி ருந்தனர். ஈரோ நியூஸ் என்ற சர்வதேச ஊடகமும் தமிழரின் உரிமைப் பேரணியை தொகுத்து ஒளிபரப்பி யிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். இதை விட சுவிற்சர்லாந்தை தளமாகக் கொண்டு இயங்கும் பல சர்வதேச பத்திரிகைகளும் இதனை பிரதான செய்தியாக முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்திருந்தன.



சிறீலங்கா அரசு செய்தித் தணிக் கைகளைச் செய்து உண்மைகளை மறுத்து உலகிற்கு சமாதான வேடத் தினை முன்வைத்துள்ளது. தமிழர் களின் போராட்டம் பயங்கரவாதம் என்றும் பிரச்சாரம் செய்துவரும் சிறீ லங்கா அரசின் பொய்ப்பரப்புரையை கிழித்தெறிந்து தமிழீழ விடுதலைப் போராட்டம் மக்கள் விடுதலைப்போராட் டம் என்பதையும் மக்கள்வேறு புலி கள்வேறு அல்ல என்பதையும் இப் பேரணி மீள ஒரு தடவை உலகிற்கு அறிவித்துள்ளது. தமிழீழத் தேசியத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட இது எமது யுகம் என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு தமிழீழ விடுத லையின் விரைவை முன்னறிவிக்கும் முழக்கமாகவும், அதற்கான சர்வதேச அங்கீகாரத்தையும் கோரும் உரிமைக் குரலாகவும் இவ் அமைதிப்பேரணி அமைந்துள்ளதையும் எவரும் மறுக்கார்.

இலட்சியத்தால் ஒன்று பட்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள் என்ற எமது தேசியத் தலைவரவர்களின் கூற்றிற்கமைய தமிழீழ விடுதலை என் பதையே தாகமாகக் கொண்டு திரண்டு வந்த தமிழர்களின் கோரிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் செவிசாய்த்து தமிழர் தரப்பு நியாயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.தமிழின அழிப்பு ஒன்றையே நோக்கமாகக் கொண்டியங்கும் சந்தி ரிகா அரசிற்கு எதுவித ஆயுத தளபாட உதவிகளையும் வழங்கக்கூடாது. சிறீ லங்கா அரசு அபிவிருத்திக்கென உலக நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ளும் அனைத்து நிதி வளங்களையும் திரட்டி தமிழர்களை வதைக்கும் யுத்தத்திற்கே பயன் படுத்துகின்றது. சிறீலங்கா அரசின் இனவாதப் போக்கினை சர்வதேச சமூகம் இன்னமும் தட்டிக்கேட்காமல் இருப்பது ஏன்? இனியும் சிறீலங்கா அரசின் விடயத்தில் இப்படித்தான் சர்வதேச மக்கள் நடந்து கொள்ளுவார் களா? என்பதே பேரணியில் கலந்து கொண்ட அனைத்து தமிழ் மக்களின தும் ஆதங்கமாகும்.

ஓயாத அலைகளாக தாயகப்பிரதேசம் தொடர்ந்தும் மீட்கப்பட்டுக்கொண்டிருக் கும் இவ்வேளையில், புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் மீண்டுமொரு தடவை தமது தேசத்துக்காற்ற வேண்டிய வரலாற்றுக்கடமைகளில் ஒன்றை செவ் வனே செய்து நிறைவேற்றியுள்ளனர்.







தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்.



கலாநிதி சி.க.சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறை, யாழ் /பல்கலைக்கழகம்)

(முன்னிதழ் தொடர்ச்சி)

தேசாதிபதியாக இருந்த நோத் பிரபுவின் காரியதரிசியாக விளங்கிய கிளைகோன் கூற்றினை நோத்பிரபுவின் பின்னர் தேசாதிபதியாக வந்த சேர் றெபேட் பிரவுன்றிக் பிரபுவின் கூற்றும் அங்கீகரித்துள்ளமை அவதானிக்கத்தக்கது. அவர் சென்னையிலுள்ள பிரித்தானிய நிருவாகத்தின் தலைமைச் செயலாளருக்கு 1813ஆம் ஆண்டு யூலாய் மாதம் 10ஆம் திகதி எழுதிய கடிதத்தில் தமிழ்மொழி புத்தளம் தொடக்கம் மட்டக்களப்பு வரை வழக்கிலிருந்ததைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். (59)


புத்தளம் மட்டக்களப்பு வரையுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பேசும் மொழியாக இது இருப்பதனால் இப்பகுதிகளில் ஏனைய பகுதிகளில் சிங்கள மொழிக்கு இருக்கின்ற வழக்குரிமை போலத் தமிழுக்கும் அவ்வழக்குரிமை இருக்க வேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளேன். இதற்குத் தங்களுடைய எதிர்ப்பு இருக்காது என நம்புகிறேன் .



இக்காலத்தில் பிரதம நீதியரசராக விளங்கியவர் சேர் அலெக்சாண்டர் ஜோன்சன் ஆவர். அவர் தமிழ் மக்களின் தனித்துவமான நீதி, பாரம்பரிய சட்ட வழக்காறுகள் பற்றி நன்கறிந்தவர். அவர் சேர் றெபேட் பிறவுன்றிக் தேசாதிபதியின் கூற்றை அங்கீகரித்துப் பின்வருமாறு கூறியுள்ளமை அவதானிக்கத்தக்கது. (60)

வடமேற்கிலுள்ள புத்தளத்திலிருந்து தென்கிழக்கேயுள்ள குமணை ஆறுவரையிலுள்ள நிலப்பகுதி சிங்கள மக்களின் குடியிருப்பு ஆகும். மேற்கே சிலாபத்திலிருந்து தென் மேற்கே உள்ள குமணை ஆறுவரையிலுள்ள நிலப்பகுதி சிங்கள மக்களின் குடியிருப்பு ஆகும்.

இவ்வாறு தமிழ்மக்கள், சிங்கள மக்கள் வாழ்ந்தபிரதேசங்கள் தனித்துவமான கலாச்சாரப்பின்னணியையும். நீதித்துறைப் பின்னணியையும் கொண்டிருந்ததை, ஆங்கிலேயர் தமது ஆட்சியை இங்கு நிலைநாட்டிய காலத்தில் அங்கீகரித்ததையே மேற்கூறிய குறிப்புக்கள் எடுத்துக்காட்டுகின்றன. எனினும் இத்தகைய போக்கு நெடிதுகாலம் நீடிக்கவில்லை. இலங்கையில் எவ்வாறு பிரித்தானியர் ஆட்சியை வலுப்படுத்த முடியும் என்பதனை ஆராய 1829இல் கோல்புறூக் தலைமையில் ஓர் ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இவ்வாணைக்குழு 1832இல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இவ்வாணைக் குழுவினருக்கு ஈழத்தின் மத்திய பகுதியில் கண்டியரின் பாரம்பரியமும் மேற்கு தெற்கு கரையோரப்பகுதிகளில் கரைநாட்டுச் சிங்களவரின் பாரம்பரியமும் வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் பாரம்பரியமும் நிலைத்திருந்தமை வியப்பாக இருந்தது. இப்பகுதிகளின் தனித்துவமான பாரம்பரியத்தை ஒழித்து ஒரே நிருவாக அமைப்பில் கொண்டுவருவதன் மூலம்தான் ஈழத்தில் பிரித்தானியர் ஆட்சி வலுவடையும் என நம்பினர். பிரித்தானியாவின் ஒற்றையாட்சி அமைப்பில் பழக்கப்பட்டவர்கள் ஜரிஷ் ஸ்கொட்டிஸ். சிறுபான்மை மக்களின் தனித்துவத்தினை அமிழ்த்தியவர்களான ஆங்கில ஆட்சியாளர் இத்தகைய ஒரு நடவடிக்கையை வரவேற்றதும் ஆச்சரியமில்லை. இதன்படி ஈழம் முதலில் ஐந்து மாகாணங்களாகவும் பின்னர் கடந்த நூற்றாண்டின் இறுதி



17ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரின் தலைமன்னார்க் கோட்டை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


யில் தற்போதைய ஒன்பது மாகாணங்களாகவும் பிரிக்கப்பட்டது. இவை எல்லாவற்றிலும் ஒருமுகப் படுத்தப்பட்ட நிருவாக அமைப்பு புகுத்தப்பட்டது. இத்தகைய நிருவாக அமைப்பு புகுத்தப்பட்டாலும்கூட இவர்கள் கண்டியர் கரையோரச் சிங்களப் பிரதேசங்களை ஒன்றிணைத்தது போல் தமிழர் பிரதேசங்களையும் ஒருங்கிணைத்தனர். இவர்களால் பிடிக்கப்பட்ட வடகிழக்கு மாகாண எல்லைப் பிரிவுகள் மட்டுமன்றி இவர்கள் அறிமுகப்படுத்திய குடிசன மதிப்பீடுகளும் வடக்கு கிழக்கு மாகாணங்களை இவர் ஆக்கும்போது இப்பகுதிகளில் நிலவிய தமிழ் மக்களின் செறிவையும் கலாச்சாரப் பாரம்பரியத்தினையும் மையமாகக் கொண்டே இவை ஆக்கப்பட்டதை எடுத்தியம்புகின்றன. தொடர்ந்து வந்த பிரித்தானியர் நிருவாக அமைப்பில் மட்டுமன்றி சுதந்திர இலங்கை பிரித்தனியரிடமிருந்து பெற்றுக் கொண்ட நிருவாக அமைப்பிலும் இப்பகுதிகளுக்கெனத் தனித்துவமான முறையில் தமிழ் மொழிவாரியாக லிகிதர்கள், கிராமசேவையாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டமையும் ஈண்டு அவதானிக்கத்தக்கது. இத்தகைய ஓர் பாரம்பரியத்தினை *1972, 1977* ஆகிய ஆண்டுகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியற்திட்டங்களாலும் சிதறடிக்கப்பட முடியாதிருந்ததும் ஈண்டு நினைவுகூரற்பாலது.

நிற்க, இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும், தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் வடகிழக்கு மாகணங்களே என்பதனைச் சிங்கள மக்களும் அங்கீகரித்தமைக்கான சான்றுகளும் உள. கண்டியர் நலன்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட கண்டியர் மகா சபை *1925* இல் முன்வைக்கப்பட்ட கோரிக்கையில் இந்நாட்டின் வடகிழக்குப் பகுதிகள் தமிழ் மக்களின் பாரம்பரியமான பிரதேசமே என்பதை அங்கீகரிக்கத் தவறவில்லை. ஈழத்திற்கு ஒரு சமஸ்டி ஆட்சி முறையை விரும்பிய இவர்கள் இதில் மூன்று கூறுகள் அமைதல் வேண்டும் எனவும் விரும்பினர். அவையாவன கரையோரச் சிங்களவர் பகுதி, கண்டிச் சிங்களவர் பகுதி, தமிழ் மக்கள் வாழும் வடகிழக்குப் பகுதி ஆகியன வாகும். அக் கோரிக்கையை அவர்கள் நமது நாட்டுக்குச் சுதந்திர அரச அமைப்பை நல்க வந்த சோல்பரிக் குழுவினர் முன்னிலையிலும் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

கண்டிச்சிங்களவர் மட்டுமன்றி அக்காலத்தில் கரைநாட்டுச் சிங்களத் தலைவர்களில் ஒருவராக விளங்கிய எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவும் ஈழத்தவர் பிரச்சனைக்குப் பரிகாரம் முறையே என்பதனை வலியுறுத்தியதும் அவதானிக்கத்தக்கது. *1926* ஆம் ஆண்டு யூலை மாதம் யாழ்ப்பாணத்தில் அன்றைய மாணவ காங்கிரசின் அழைப்பை ஏற்று எங்கள் அரசியற் பிரச்சனைகளுக்கு ஒரே தீர்வு சமஷ்டி ஆட்சியமைப்பே என்ற தலைப்பில் உரையாற்றிய இவர் பின்வருமாறு குறிப்பிட்டார் — *(61)*

பழைய வரலாற்றைப் பார்ப்பார்களேயானால் இந்த மூன்று இனங்களாகிய தமிழரும், கரைநாட்டுச் சிங்களவரும், கண்டிச்சிங்களவரும் ஆயிரம் ஆண்டுகளாக ஈழத்தில் வாழ்ந்தும் ஒன்றிணையும் போக்கு எதையும் கொண்டிருக்கவில்லை என்பதை இவர்கள் காண்பார்கள். இவர்கள் தங்கள் மொழியையும் பழக்கவழக்கங்களையும் மதத்தையும் பேணியிருந்தனர். இந்த வேறுபாடுகள் மெல்ல மறையும் என்பதில் நம்பிக்கை வைக்கும் எவனும் சிந்தித்துச் செயலாற்றாத ஒருவனாகும்...... ஈழத்தில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் முழுத்தன்னாதிக்கம் வேண்டும். இந்த நாட்டின் விசேடமான வருமானத்தைக் கவனித்துக் கொள்ள ஒன்று அல்லது இரண்டு பேரவைகள் இருத்தல் வேண்டும். இந்த முறைக்கு எதிராக ஆயிரத்தொரு மறுப்புக்களை எழுப்பலாம். ஆனால் அந்த மறுப்புக்கள் நீங்கியதும், ஏதோ ஒரு வகைப்பட்ட சமஷ்டி அரசாங்கமே ஒரே ஒரு தீர்வாக அமையும் என்பதில் நம்பிக்கை உண்டு என்றார்.

மேற்கூறிய கருத்தைத் தெரிவித்த திரு. பண்டாரநாயக்காதான் *1956* இல் தனிச்சிங்களச் சட்டத்தை



16ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரின் யாழ்க்கோட்டையும் நகரப்பகுதியும்



17ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரின் மன்னார் வரைபடம்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ் நகர சந்தை வீதியை சித்தரிக்கும் ஓவியம் (கி.பி16)

உருவாக்கியவராவார். எனினும் அடுத்த ஆண்டிலே தமிழ் மக்களின் தலைவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் அவர் செய்துகொண்ட ஒப்பந்தம் பிரதேச சுயாட்சியில் இவர் கொண்டிருந்த அக்கறையை எடுத்தியம்புகின்றது எனலாம். எவ்வாறாயினும் சிங்கள மக்கள் பிரதேச ரீதியாக தமது தனித்துவத்தினைப் பாதுகாக்க முனைந்தபோது தமிழ் மக்களின் தலைவர்கள் 1949இல் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் ஓர் சமஷ்டி அமைப்பே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் என்ற கருத்தினை முன்வைக்கும்வரை ஒற்றை ஆட்சிப் பாராளுமன்ற அமைப்பில் தமது அங்கத்துவத்தின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கலாம் என நம்பினர்.

1929 இல் ஈழத்திற்குப் புதிய அரசியல் யாப்பை வழங்க வந்த டொனமூர் கமிஷனரும் வடகிழக்குப் பிரதேசங்கள் தமிழரின் பிரதேசங்களென அங்கீகரித்துள்ளனர். எனவே பிரதேச ரீதியான சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழரின் நலனைப்பா துகாப்பதற்குப் பதிலாக ஒற்றைஆட்சி அமைப்பில் சமமான பிரதிநிதித்துவத்தினைப் பெறுவதன் மூலமே தமிழர் நலன்கள் பாதுகாக்கப்படும் எனத் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் விரும்பினார். இதுதான் அவர்கள் வைத்த 50க்கு 50 வாதமாகும். இதன்படி பாராளுமன்றத்தில் சிறுபான்மையினரும், பெரும்பான்மையினரும் சமனான பிரதிநிதித்துவத்தைப் பெறுவர். இது ஓர் நடைமுறைச்சாத்தியமற்ற கோரிக்கை என ஈழத்திற்குப் புதிய அரசியல் யாப்பை வழங்க வந்த சோல்பரிக் கமிஷனரினால் நிராகரிக்கப்பட்டது.



வடகிழக்கு மாகாணங்கள் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்கள். இவை சமஷ்டி அமைப்பில் சிங்கள அரசின் கீழ் இயங்கவேண்டுமென 1949 இல் உருவாக்கப்பெற்ற, இலங்கைத் தமிழரசுக்கட்சி கோரியது. 1952 இல் திருகோணமலையில் நடைபெற்ற இதன் முதற் தேசிய மாநாட்டிலும் இக்கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டது. 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது, வடகிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் (முஸ்லீம்கள் உட்பட) இதற்கெதிராக ஏகோபித்த முறையில் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஓரளவுக்காவது பூர்த்தி செய்ய முற்பட்ட பண்டாரநாயக்கா — செல்வநாயம் ஒப்பந்தத்திலும் வடகிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய வசிப்பிடம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1957ஆம் ஆண்டு யூலை மாதம் 26ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இவ்வொப்பந்தம் பின்னர் ஒரு தலைப்பட்சமாகப் பண்டாரநாயக்காவினால் கிழித்தெறியப்பட்டாலும் ஓர் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த ஒன்றே என்பதனை இதன் பின்னர் வரும் சரத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன. (62) அவையாவன,

1. பிரதேச சபைகளின் எல்லைகள் சட்டத்திலேயே அட்டவணைகளாகச் சேர்க்கப்பட்டு வரையறுக்கப்பட வேண்டும்.

2. வடமாகாணம் ஒரு பிரததேச சபையாகவும், கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது கூடிய பிரதேச சபைகளாகவும் அமையும்.

3. மாகாண எல்லைகளையும் தாண்டி இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேசசபைகள் இணைவதற்குச் சட்டத்தில் விதி இடம்பெறும். பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு அமைவாக ஒரு பிரதேசசபை தன்னைப் பிரித்துக் கொள்ளவும் இடம் இருக்கும். இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேசசபைகளுக்கும் பொதுவான குறிப்பிட்ட நோக்கங்களுக்கு அவை சேர்ந்து செயற்படச் சட்டத்தில் இடம் இருக்கும்.

4. பிரதேசசபையினர் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுவர். அதற்கான தொகுதிகளை மேற்பார்வை வகுப்பதற்குத் தொகுதிநிர்ணயக் குழுவோ, குழுக்களோ அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். பிரதேச சபைகளின் எல்லைக்குள் அமைந்த மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர் பிரதேச சபைத்தலைவர் ஆவதற்கு தகுதி பெறுவதுபற்றி ஆலோசிக்கப்படும். அரசாங்க அதிபர்கள் பிரதேச ஆணையாளர்களாக நியமிக்கப்படுவது பற்றி, ஆலோசிக்கப்படும். பெரிய பட்டினங்கள், கேந்திர நகரங்கள், மாநகரசபைகள் ஆகியவற்றை மேற பார்வை செய்யும் அதிகாரங்கள் ஆராயப்படும்.



யாழ் இராச்சிய சேது நாணயம் (கி.பி 1000)


தொடரும்...



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடிவை நோக்கி விரையும் கரங்கள்...



வெற்றுக் குழல் கொண்டு
அடுப்பூதிய கைகள்
இன்று
துப்பாக்கிக் குழல்களினால்
எதிரியைத் தாக்கும்
புலி வீராங்கனைகள்
குடும்பம் நடத்த மட்டும்
கற்றுக் கொடுக்கப்பட்டவள்
இன்று........
எதிரியின் பாசறை
தகர்ப்புக்காய்
படை நடத்தப்
பழக்கப்பட்டவர்களாய்
கணவனின் வரவையும்
குடும்பத்தின் செலவையும்
மனதில் கொண்டு
வாழ்வுக்காகத் திட்டம்
போட்டவள்
இன்று..........
எம் தேசத்தில்
அத்துமீறி நிலை கொண்டுள்ள
எதிரியின் முகாமை
சிதறடிக்கத்
திட்டம் போடுவது..
நிச்சயம் நாளை
விடிகின்ற தேசத்தில்
இவள் விலங்குகள் தகர்ந்து
விடுதலை பிறக்கும்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தியாகி அன்ன
# ஒரு தனித்துவ

ஈழத்தமிழர் வரலாற்றில் சிறீலங்கா அரசாங்கத்துடன் நடைபெற்றுவருகின்ற ஆயுதப் போராட்டம் மூன்றாவது கட்டத்தில் இருக்கின்றது. இந்த மூன்று கட்டங்களிலிருந்தும் வேறுபட்டு தனித்துவமான ஒரு காலகட்டமாக இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான தர்மயுத்தம் ஒன்றை ஈழத்தமிழர் வரலாறு சந்தித்தது.

சிறீலங்கா அரசாங்கத்திடம் நீதி கேட்டு ஆரம்பகாலத்தில் அகிம்சை வழிப்போராட்டங்களை நடத்தி அவை தோல்வி கண்டபோது ஆயுதப்போராட்டம் ஆரம்பமானது போலவே, இந்திய அதிகாரவர்க்கத்துக்கு எதிராக ஆரப்பத்தில் அகிம்சை வழிப்போராட்டங்கள் நடத்தப்பட்டு அவை எல்லாம் பயனற்றுப் போன நிலையில் ஆயுதப்போராட்டம் நோக்கி ஈழத்தமிழர் வலிந்துதள்ளப்பட்டனர்.

இந்த ஆயுதப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் இந்திய அதிகாரவர்க்கம் தன்னிடமிருந்த பிரச்சார பலத்தைப் பயன்படுத்தி ஈழத்தமிழர் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கியிருந்தது. தமிழர்கள் ஆரம்பத்தில் நடத்திய அகிம்சை ரீதியான போராட்டங்களையே — குறிப்பாக தியாகி திலீபன் காந்தியத்தைப் பின்பற்றி மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தையே இந்தியாவில் இருக்கும் சில காந்தியவாதிகள் எனக் கூறிக்கொள்வோர் பிரச்சார சாதனங்களூடாக இழிவுபடுத்தி வந்தனர். இவ்வாறான நிலையில் ஆயுதப்போராட்டம் வெடித்ததும், ஒருபுறம் தமது பிரமாண்டமான ஆயுதபலத்தால் அதனை ஒடுக்கி விடவும், அதேவேளை தமிழ்மக்களின் போராட்டத்தின் தார்மீக வலுவை பிரச்சாரபலத்தால் ஒடுக்கி விடவும் இந்திய ஆளும்வர்க்கம் பகீரதப் பிரயத்தனம் செய்தது.

இவ்வேளையில்தான் அன்னை பூபதி தனது போராட்டத்தின் மூலம் தனியொருவராக தான் நடத்திய அகிம்சைப்போராட்டத்தின் மூலம் இந்திய ஆளும்வர்க்கத்தின் பிரச்சாரத்தை முறியடிக்க முன்வந்தார்.

காந்தியின் நாட்டுக்கு எதிராக காந்தியத்தையே அவர் தெரிவு செய்தபோதும் அந்த காந்தியநாடு பலாத்காரத்தைப் பிரயோகித்துக் கூட அப்போராட்டத்தை முறியடித்துவிடத்துடித்தது.

தனது போராட்டத்திற்காக அவர் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சிறிதும் அக்கறை காட்டாத இந்தியஅரசு அவர் போராட்டத்தைக் கைவிடவேண்டும் என்பதற்காக பலவகை அழுத்தங்களையும் மேற்கொண்டது. இந்த அழுத்தங்கள் எவற்றாலும் அன்னை பூபதி அவர்களை மாற்றமுடியவில்லை. ஒரு மாதகாலமாக ஈழத் தமிழ் மக்களின் விடிவுக்காகத்தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்தவர் தியாகி அன்னைபூபதி அவர்கள்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் ஆரம்பமான காலம்தொட்டே ஆயுதப்போராட்டத்திலாயினும் சரி, அகிம்சை ரீதியிலான போராட்டத்திலும் சரி வரலாறுகள் பலவற்றை படைத்திருக்கிறது. ஆயுதப்போராட்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# னை பூபதி
# மான போராளி

**வேலவன்**

டத்தில் பல்வேறு போராட்ட வடிவங்களைக் கடைப்பிடித்து அதனை உயர்நிலைக்குக் கொண்டு வருவதில் 14ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்கள் உயிர்த்தியாகம் செய்திருக்கின்றனர். இவர்களின் தியாகங்கள் உலகையே ஆச்சரியத்துக்கு உள்ளாக் கியிருக்கின்றன. இவர்கள் புரிந்த தன்னலமற்ற தியாகங் களே உலகில் நடைபெறும் விடுதலைப் போராட் டங்களில் தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முதன்மை நிலைக்குக்கொண்டு சென்றிருக்கிறது.

இந்தவகையில் அன்னைபூபதி அவர்கள் மேற் கொண்ட போராட்டவடிவம் தனித்துவமானதாக அமைந்துள்ளது என்றே கொள்ளலாம். மக்கள் மத்தியிலிருந்து தனித்து ஒருபோராளியாக தானே முன்வந்து 31 நாட்கள் தன் முடிவில் உறுதி யாகநின்று, அணு அணுவாக தன்னை உருக்கியவர் அன்னைபூபதி அவர்கள். அவருடைய கோரிக் கைக்கு அந்திய ஆளும்வர்க்கம் செவிசாய்க் காவிட்டாலும்கூட அவர் எந்த மக்களுக்காக போரா டினாரோ, அம்மக்களின் உள்ளத்தில் எழுச்சியை அவருடைய தியாகம் இன்றும் ஏற்படுத்தி வருகிறது என்பதே அவருடைய போராட்டத்தின் வெற்றியை வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

அன்னைபூபதி நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட பல்வேறு வகையான போராட்டங்கள் இந்திய ஆளும்வர்க்கம் தமிழீ ழத்தில் தான் நினைத்ததைச் சாதிக்க முடியாது அவ மானத்துடன் வெளியேறவேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

எனவே அன்னைபூபதி அவர்களின் போராட்ட மானது எவரும் எந்த வயதிலும், எந்த உடல்நி லையிலும் தனது இனத்தின் உரிமைக்காகப் போராட முடியும், போராடி வெற்றிபெறமுடியும் என்பதை வெளிப்படுத்திநிற்கிறது.

விடுதலைப் போராட்டம் தொடர்ந்துகொண்டி ருக்கும் இவ்வேளையில் அன்னைபூபதி அவர்களுக்கு நாம்செலுத்தும் அஞ்சலி அவர் அன்பு, பாசம் வைத் திருந்த மக்களின் விடுதலையை விரைவுபடுத்த அனைவரும் கைகோர்த்துக்கொள்வதே.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாதம் ஒரு துளி

இருபத்தியோராம் நூற்றாண்டு, அதிவேகமான தொழில்நுட்ப வளர்ச்சி. விஞ்ஞானத்தின் விந்தைகளால் நாள்தோறும் வியத்தகு சாதனைகளைக் கண்டவண்ணம் புலரும் மேலைத்தேய விடியல்கள், நாகரிக வளர்ச்சியின் உந்துதலால் நாளுக்கு நாள் நவீன தோற்றப்பாடுகள், அளவுக் கதிகமான வாழ்க்கை வசதிகள், எது எது தேவையோ தேவைகள் உடனடியாகப் பூர்த்தி செய்யப்படும் பொருளாதாரப் பெருக்கங்கள் என மொத்தத்தில் வாழ்க்கைக்குரிய வசதி வாய்ப்புக்கள் நிறைந்து பரந்துள்ள ஒரு பூமியாய் நாம் புலம்பெயர்ந்து வாழும் பூமி திகழ்கிறது.

எங்கள் நிலம் எதிரியின் சுவடுகளால் தழும்புற்று, கண்டல் காயங்களோடு, எரிந்து சிதைந்து சிவந்து நிற்க, அங்கு எம் மக்கள் படும் துன்பம் தொடர்கதையாக நீள்கிறது. இடம் பெயர்ந்து இடம்பெயர்ந்து இருக்கும் இடம் விட்டகன்று வந்தபின்னர் தங்கியிருப்பதெல்லாம் வீடு என ஆயிற்று. மரநிழல்கள் "மனை" ஆகி நிற்க, தான்உண்ட நீரைத் தலையாலே தருகின்ற தென்னைபோல சாலையோர மரமெல்லாம் சத்திரங்களாயின. இருக்கும் இடம் தேடித் தன்னகத்தே வந்தவர்களைத் தாங்கி நிழல் கொடுத்து மரங்கள் ஆதரவுகாட்ட வீதியோரமெல்லாம் வீடுகளாயின. சாலையோர வாழ்க்கையும், மரநிழலின் தொடர்ச்சியும் என நீளும் வாழ்க்கை அவலம் பூமிப் பந்தின் ஓரத்திலுள்ள சிறிய சிறிய கிராமங்களில் தொடர இந்த நிலைமை எங்களது கண்களுக்குக்கூடவா எட்டாமற் போகப் போகின்றது? எங்களது கண்ணோட்டம்கூடவா இந்த மண்ணை நேசிக்கும் மக்களுக்குக் கிட்டாமல் போய்விடப் போகின்றது?

இல்லை. ஒரு நாளும் இல்லை. நாங்கள் வாழ்ந்த நிலம். நாளை நாங்கள் மீண்டும் பார்க்வும் ஆளவும் போகும் பூமி. எங்களது சொந்தங்கள் வாழும் தேசம். எங்கள் பந்தம் விட்டகலாத் தேசம். எனது தாயகபூமி. எனது மக்கள் வாழும் மண். அங்கே கிடைக்கும் நன்மைகளுக்கு மட்டும் நாட்டை நாடாமல் நாட்டுக்குத் தேவையான தேவைகளையும் பூர்த்தி செய்யும் தேசாபிமானிகளாக நாம் திகழவேண்டும்.

நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம் என்பது ஒரு பழமொழி. இந்தப் பழமொழியின் கருத்தாழம் நடைமுறை அனுபவங்களால் எம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. நோய்நொடிகளற்ற ஒரு சுக வாழ்வுக்கு விருப்பப்படுவது எல்லோரதும் வழக்கமாகும். அதனால்தான் வருமுன் காக்கவேண்டும் என்று நோயிலிருந்து விடுபடுவதற்குத் தற்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுகிறோம். ஆனால் திறந்தவெளி, வெய்யில், மழை, காற்று, சூழல் என்ற எல்லாவித தாக்குதல்களாலும் பாதிப்புற்று உணவு, உடை, உறையுள் என்ற அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழும் மக்களை நோய் தின்னும் அவலம் கண்டும் நாம் பேசாதிருப்பது பேதமையன்றோ?

இளந்தளிர்களாய் நிற்கின்ற எங்களது தமிழீழக் குழந்தைகளின் உயிர்கள் ஒழுங்கான போசாக்குணவு இன்மையினாலும் தகுந்த வைத்திய வசதிகளின்மையினாலும் உடனடியாக சிகிச்



-இலக்கியா-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சைகள் இன்மையினாலும் பரிதாபகரமான முறையிலே பறிக்கப்படுகின்றன. உண்ண உணவு இல்லை. இருக்க இடமில்லை. உடுக்க உடையில்லை. நோய்க்கு மருந்தில்லை. ஒழுங்கான மருத்துவ வசதியில்லை. இல்லை.... இல்லை...... இல்லை!

இந்த ஒலி மட்டும் இருந்து கொண்டிருக்க எமது மக்கள் படுகின்ற துயர் துடைக்க நாம் இன்று என்ன செய்யப் போகின்றோம்?

"தடை" என்ற பெயரிலே சிறீ லங்கா அரசு அத்தியாவசியமான பொருட்கள் அனைத்தையும் தடை செய்து தமிழ் மக்களை எல்லா வழிகளிலும் அடக்கி, தனது இன அழிப்பைப் பல வழிகளிலும் செயற்படுத்தி வருகின்றது. இப் பெரும் அபாய அடக்குமுறைக்குள் அகப்பட்டு அழியும் எமது எதிர்காலச் சந்ததிகளைத் திடகாத்திரமான நாளைய நிமிர்வுகளாக நிமிரவைக்கவேண்டியது எமது இன்றைய கட்டாய கடமையாகும்.

"போர்" — தமிழீழ விடுதலைக்காகப் போராடும் வீரர்களின் போர்க்களக்காயங்கள், தழும்புகளாக நின்று அவர்களின் வீரத்தை விசாலப்படுத்தும். இந்த வீரர்கள் ஒவ்வொருவரும் விலைமதிக்க முடியாத மாணிக்கங்கள். பெருஞ்சமரின்போதும் எதிர்பாராத விதமாக ஏற்படுகின்ற பெருங்காயங்களின்போதும் தகுந்த சிகிச்சையளித்து இவர்களின் இன்னுயிரை இயன்ற வரை காப்பாற்ற வேண்டும். தகுந்த முதலுதவிச் சிகிச்சையளித்து தற்காப்பு முறைகளினூடாக அவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும். தேசத்தின் புதல்வர்களின் போர்க்கள வெற்றிகளோடு, அவர்களது உயிரின் உன்னதமும் பேணப்படவேண்டும். எப்பாடுபட்டாயினும் ஒரு விடுதலை வீரனைக் காப்பாற்றியே ஆகவேண்டும். அந்தக் கடப்பாடு எங்களுடையது.

உயிர் ஒன்று ஓம்பப்பட வேண்டும். எந்த உயிரும் பாதுகாக்கப்பட வேண்டும். உயிர் உயர்வானது. எங்கள் கண்முன்னால் துடிதுடித்துப் போகும் ஒரு உயிரின் இழப்பைத் தாங்குவது என்பதும் அந்தக் கொடுமையை நினைத்து நினைத்து ஏங்குவது என்பதும் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒருவருக்கு எவ்வளவு துன்பமானது. வைத்திய சேவைகள் அனைத்தும் உள்ள வைத்தியசாலைகள் இன்மை, போதிய வைத்தியர்கள் இன்மை, எல்லாவித மான வைத்தியசேவைகளும் இன்மை, தகுந்த வைத்தியம் இன்மை, உடனடி வைத்திய சேவையின்மை, போதிய மருந்தின்மை, இரத்தமின்மை, நோய்க்குரிய சிகிச்சையின்மை, தகுந்தகவனிப்பின்மை என்று மருத்துவத்துறை சார்ந்த இயலாமைகளால், எங்களது தமிழ்ச்சமூகம் நொந்து விழுந்து மடிந்து அழியும் அபாய அறிவிப்பில் இருந்து மீண்டு எங்களை நாங்களே பலப்படுத்தி எங்களது மருத்துவத்துறையை விரிவாக்கி நலியும் பயிர்களை முளை விட்டுச் செழிக்கச் செய்வோம். செயலூக்கம் கொண்டு எங்களது பங்களிப்பை மாதாந்தம் நல்கி மலரும் தமிழ்ச் சமூகத்தை வளமுள்ள, நலமுள்ள சுகம்தரும் சுகமான சமூகமாக மலரச் செய்வோம்.

நாங்கள் கொடுப்பது ஒரு துளியாக இருக்கலாம் ஆனால் அந்தத் துளி, ஒரு உயிரைக்காக்கும் உதவியாக மாறுகின்றபோது அந்த உதவி உயர்ந்துவிடுகின்றது. ஒருவர் கொடுப்பது சிறு துளியாக இருக்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் தத்தமுக்குரிய பங்களிப்பைச்செய்கின்ற போது சிறுதுளி பெருவெள்ளமாகப் பெருகுமல்லவா?

பொருண்மியம் மேம்படவேண்டும். போராட்டம் வலுப்பெறவேண்டும். தமிழ் மறவர்கள் காப்பாற்றப்பட வேண்டும். விடுதலைப் போராட்டம் வெற்றியடைய வேண்டும் என்று ஒவ்வொரு ஈழத்தமிழனும் விரும்புவதைப் போல தமிழீழ மருத்துவமும் விரிவடைய வேண்டும் என்பதுவும் எமது விருப்பங்களுள் ஒன்றாக வேண்டும். தமிழீழ மக்களுக்குப் பசி ஒரு பிணி, அதற்கு மருத்துவம் தேவை. நோய் ஒரு பிணி, இந்தப் பிணிகளுக்கு ஆதரவு என்ற மருந்து தரும் மருத்துவராய் நாம் நின்று அவர்களது பிணி தீர்க்கப்பணி செய்வோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவ நலன்களைச் செழிக்கச் செய்வதற்கு உதவி செய்யும் உயிர்ச் சத்துக்களாய் எமது பங்களிப்பும் அமையட்டும். மாதம் ஒருமுறை எமது உயிர்ச்சத்துக்களாய் சென்றடையும் உதவிகள் தமிழீழ மருத்துவத்துறையை விரிவுபடுத்தும் ஊட்டச்சத்தாய் அமையட்டும்.

மாதம் ஒருமுறை நாம் செய்யும் மனமுவந்த அன்பளிப்பு "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்ற நிலைப்பாட்டிற்கு எமது மண்ணை மாற்றியமைக்கும் காப்பாக நிற்கும். மக்களைக் காக்கும் போராளிகள் என்ற அரணும், மக்கள் என்ற கவசமும் நாட்டிற்கு அவசியமான இரு ஆதாரங்கள். அரண்கள் நிலைபெறவேண்டும். கவசங்கள் காப்பாற்றப்பட வேண்டும். மாதம் ஒரு துளி மருத்துவ நிதியத்திற்காய் மனமுவந்து கொடுப்போம்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மூன்றாம் கட்ட ஈழப்போரும் ஐந்தாண்டு காலமும்!

மூன்றாம்கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி இம்மாதம் ஐந்தாண்டுகள் நிறைவுறுகின்றது. ஈழப்போராட்ட வரலாற்றில் இரத்தக்களரி நிரம்பிய பெரும் போர்க்களங்களைக் கொண்டதாக விரியும் இக்காலகட்டம் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகவும் முக்கியமானதும் பல பரிமாணங்களையும் கொண்டதாகும்.

இக் காலகட்டப் போர்கள் தரை, கடல்பிரதேசங்களில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு விரிந்தது. ஒரு இராணுவ நடவடிக்கையோ அன்றிப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கையோ அன்றிப் பதில் நடவடிக்கையோ ஒரு நாள், இருநாள் என்பதாக மட்டுமல்லாது பல நாட்கள் கொண்டவையாகவும், சில இராணுவ நடவடிக்கைகள் மாதக் கணக்கில் ஏன் வருடக் கணக்கில்கூட நீடித்ததானதாகவும் இருந்துள்ளன. வரலாற்றில் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் அந்நியர்களின் அரணாக விளங்கிய ஆனையிறவுப் பெரும்தளம் இக்கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்ற வேளையில் புலிகளின் கையில் வீழ்ச்சி கண்டுள்ளது

இதேவேளை, இராணுவ ஆளணி மற்றும் போர்த்தளபாட இழப்புகளும் மிகஉச்ச அளவினதாக இருந்தது. ஓரிரு நாள் தாக்குதலில்கூட ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் பலியாகும் அளவிற்கு சமர்க்களம் கடுமையானதாக இருந்தது. 15000 பேர் கொண்ட ஒரு டிவிசன் படையினர் இரு நாள் தாக்குதலில் விரட்டியடிக்கப்படுகின்ற உலக சாதனைச் சமர்களாக பல இராணுவ ஆய்வாளர்களின் மதிப்பீட்டிற்கு அப்பாற்பட்டவையாகவும் அவர்களின் எதிர்வுகூறுதலுக்கு மாறானவையாகக் கூட இருந்துள்ளன.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி திருமலைத் துறைமுகப் பகுதியில் ரணசுரு, சூரையா ஆகிய போர்க்கப்பல்கள் மீதான தாக்குதலுடன் ஆரம்பித்த இம் மூன்றாம்கட்ட ஈழப்போரின் ஐந்தாண்டு காலப்பகுதியில் முக்கால்ப் பகுதி அதாவது சுமார் மூன்றாண்டுகள் வன்னிப் பெருநிலப்பரப்பே முக்கியமான போர்க்களமாக விளங்கியது. இந்தக் காலத்தில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே இதுவரை சந்திக்காத பெரும் சமர்களை வன்னிச் சமர்க்களம் சந்தித்தது எனக்கூறினால் கூட மிகையாகாது.

இக் காலகட்டமானது பெரும் சமர்களைக்கொண்டது என்பது மட்டுமல்ல புதிய பரிமாணங்களையும் கொண்டதாக இருந்தது. இதன் தோற்றப்பாடானது இருநாட்டு இராணுவங்கள் மோதிக் கொள்வது போன்ற வடிவத்தை உலகிற்குக் கொடுக்குமளவிற்கு விரிவாக்கம் பெற்றதாகவும், உக்கிரமானதாகவும் இருந்தது.

மூன்றாம்கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டவுடனேயே அது ஒரு கால வரையறையைக் கொண்டதாகவே சிறீலங்கா அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனுருத்த ரத்வத்தவும் “இவ்வாண்டு — 1995 — இறுதிக்குள் யுத்தம் முடிவிற் குக்கொண்டுவரப்படும்” என எதிர்வு கூறினார். ஆனால், அதன் பின்னர் பல காலக்கெடுக்களை இவ் ஐந்தாண்டு காலத்திற்குள் சிறீலங்கா அரச தரப் பினர் அறிவிப்புச் செய்திருப்பினும், அவை எதுவுமே சாத்தியமானதாக இருக்கவில்லை.

மூன்றாம்கட்ட ஈழப்போர் ஆரம்பிக் கப்பட்டதுமே சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பாதுகாப்பு அமைச்சு தமது போர்த்திட்டங்களையும் தந்தி ரோபாயங்களையும் முற்றாகவே மாற் றியது. வடக்கில் மேற்கொள்ளப்படும் பாரிய நடவடிக்கைகளின் மூலம் விடு தலைப் புலிகளை தோற்கடித்து, தமிழீழ விடுலைப் போராட்டத்திற்கு ஒரு முடி வைக் கொண்டுவந்துவிடலாம் என அது திட்டமிட்டது.

அதேசமயம், சிறீலங்காவின் இரா ணுவ வரலாற்றில் என்றுமில்லாத அள விற்குப் போர்த்தளபாடங்களும் வாங் கிக்குவிக்கப்பட்டன. குண்டுவீச்சு ஜெட் விமானங்கள், பீரங்கிகள் பொருத்தப் பட்ட உலங்குவானூர்திகள், சிறியதும், பெரியதுமான சண்டைக்கப்பல்கள், டாங்கிகள், பீரங்கிகள் என ஆயுததள பாடங்கள் கனரகப்படுத்தப்பட்டதோடு, நவீனப்படுத்தவும்பட்டன. இதற்கென சிறீலங்கா அரசினால் பெரும்தொகை நிதியும் ஒதுக்கீடுசெய்யப்பட்டது.

இதேவேளை விடுதலைப் புலிகள் தரப்பினதும், போர்த்தந்திரோபாயங் களும், போர்யுக்திகளும் இக் காலப் பகுதியில் பெருமாற்றம் கண்டிருந்தது. சிறீலங்கா அரசின் போர்த்தந்திரோ பாயத்தை நீண்டகாலநோக்கில் எதிர் கொள்ள தந்திரோபாய ரீதியிலான பின்வாங்கல்கள், பெரும் எடுப்பிலான பதிலடி நடவடிக்கைகள், பெரும் படைத் தளங்களைத் தாக்கி அழிக்கும் பாரிய தாக்குதல்கள் எனப் புலிகள் நீண்ட காலத்திட்டத்தின் அடிப்படையில் சமர் களை நடத்திய அதேவேளை, சிறீலங் காவின் போர்த்தந்திரோபாயங்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் தமது நடவடிக்கைகளை விஸ்தரித்தனர்.

அத்தோடு, விடுதலைப் புலிகள் இக் காலப்பகுதியில் தமது ஆயுத தளபாடங் களில் கனரக ஆயுத தளபாடங்களையும் இணைத்துக்கொண்டனர். இவற்றில் கன ரக மோட்டார்கள், ஆட்லறிப் பீரங்கி கள், விமான எதிர்ப்புச் சாதனங்கள் போன்றவை இணைக்கப்பட்டன. அவ் வாறு இணைக்கப்பட்டவை யுத்தகளத் தில் கணிசமான பங்கும் முக்கியத்துவம் பெறத்தக்கவகையில் விடுதலைப் புலி களால் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டவையாகவும் இருந்தன.

## தரைச்சமர்



மூன்றாம்கட்ட ஈழப்போரின் தரைச் சமர்கள் முற்றிலுமாகவே முதலாம், இரண்டாம்கட்ட ஈழப்போர்த் தரைச் சமர்களைவிட மாறுபட்டவையாகவே இருந்தது. முதலாம்கட்ட ஈழப்போரின் போது பெரும்பாலும் கெரில்லாப் பாணியிலானதாக இருந்த களமானது இரண்டாம்கட்ட ஈழப்போரின்போது சற்று மாறுபட்டதாக விரிவாக்கம் கண்டிருந்தது. ஆயினும் அது மரபுவழிச் சமர்களின் வடிவத்தினைப் பெற்றுக் கொண்டிருந்ததாகக் கொள்ளமுடியாது.

ஆனால், மூன்றாம்கட்ட ஈழப் போரானது மரபுவழிச் சமர்களுக்குரிய பண்புகளைப் பெரும்பாலும் பெற்றுக் கொண்டிருந்தது என்றே கூறலாம். பாரிய படைநடவடிக்கைகள், கனரக ஆயுதங் களின் பிரயோகங்கள், அவற்றிற்கு எதி ரான மறிப்புச்சண்டைகள், பாரிய படைத்தளங்கள் மீதான தாக்குதல் என தரைச்சண்டை முற்றிலுமாக மரபுவழி சார்ந்தவை போன்றே இருந்தன.

எடுத்துக்காட்டாக இம் மூன்றாம் கட்டப் போரில் சிறீலங்கா இராணுவம்



19.04.1995 திருகோணமலைக் கடலில் ரணவிரு, சூர்யா ஆகிய இரு யுத்தக்கப்பல்கள் கடற்கரும்புலிகளினால் மூழ்கடிக்கப்பட்டன.



28/29.04.1995 சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரு அவ்ரோக்கள் அடுத்தடுத்து சுட்டு வீழ்த்தப்பட்டன.



14.07.1995 சந்திரிகா அரசினால் பெரும் எடுப்பில் ஆரம்பிக்கப் பட்ட முன்னோக்கி பாய் தல் நடவடிக்கைக்கு எதிரான புலிப்பாய்ச்சல் நடவடிக்கையில் A52A ரக புக்காரா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.



29.08.1995 முல்லைக்கடற்பரப்பில் இரு டோராக்கள் மூழ்கடிக்கப்பட்டன.



20.10.1995 கொழும்பு கொலன்னாவை உறுகொடவத்தை எண்ணைக் குதங்கள் மற் றும் சுத்திகரிப்புநிலையம் மீது தாக்குதல்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



22.01.1996 வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் M,I-24 ரக உலங்கு வானூர்தி சுட்டு வீழ்தப்பட்டது



31.01.1996 இலங்கை மத்திய வங்கி மீது நடத்தப்பட்ட பாரிய குண்டுத்தாக்குல்



18.07.1996 ஓயாத அலைகள் நடவடிக் கையால் முல்லை மண் மீட்கப்பட்டது.



10.01.1997 ஆனையிறவு பரந்தன் பெருந்தளத் தின் மையப்பகுதயை நோக்கிய மிகப் பாரிய ஊடுருவித் தாக்குதல். ஆட்லறி தளங்கள் அழிப்பு.



தென்னாசியாவிலேயே மிக நீண்டகாலம் நடை பெற்ற ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்கு எதிரான புலிகளின் முறியடிப்பு சமர். (13.05.1997 - 04.12.1998)

மேற்கொண்ட பெரும்படை நடவடிக் கைகள் யாவற்றிலும் குறைந்தது ஒரு டிவிசன் (10,000 துருப்புக்கள்) துருப்புக் கள் பங்குகொண்டன. அதாவது ரிவி ரசவில் இரண்டு டிவிசன், சத்ஜெயவில் ஒருடிவிசன், எடிபலவில் ஒரு டிவிசன், ஜெயசிக்குறுவில் இரண்டு டிவிசன் எனத் துருப்புக்கள் பயன்படுத்தப்பட்டன.

இதேசமயம் விடுதலைப் புலிகள் தமது தந்திரோபாயத்திற்கு ஏற்ப போரா ளிகளைப் பயன்படுத்திக்கொண்டனர். அதாவது இராணுவத்தை எதிர்கொள் வது எனத் தீர்மானிக்கப்பட்ட பகுதி களில் ஆயிரக்கணக்கில் போராளிகளைப் பயன்படுத்தினர். இவ்வேளைகளில் முற் றிலுமாக மரபுவழிச்சமர் அடிப்படை யான வழிமுறையைக்கொண்டே யுத் தத்தை நடத்தினர்.

1995, ஒக்டோபரில் ரிவிரச — 1 நட வடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது விடு தலைப் போராட்டம் விரைவிலேயே முடிவிற்குக் கொண்டுவரப்படும் என்ற தொரு கற்பிதத்தை சிறீலங்கா அரச தரப்பு கொடுக்கமுனைந்தது. ஆனால், யாழ் நகரை 50 தினங்களின் பின்னர் இராணுவம் கைப்பற்றியபோது போர் அடுத்தகட்டத்திற்கு நகர்த்தப்பட்டுவிட் டது என்பது தெளிவாகியது. இதன் பின்னர் 1996 ஏப்பிரலில் ரிவிரச 2, 3 என்பனவற்றை இராணுவம் மேற் கொண்டபோது புலிகள் குடாநாட்டில் இருந்து தந்திரோபாய ரீதியில் விலகிக் கொண்டனர்.

ஆனால், ரிவிரச நடவடிக்கைகளுக் கான பதிலடி முல்லைத்தீவில் விடு தலைப் புலிகளால் கொடுக்கப்பட்டது. 1996 யூலை 18இல் முல்லைத்தீவு படைத் தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தமை மட்டுமல்ல உதவிக்குத் தரையிறங்க முற்பட்ட படையணிகளுக்கு ஏற்படுத்திய பலத்த இழப்பானது ஈழப் போராட்டத்தின் போர்முறையில் புதிய பரிமாணம் ஒன்று தோற்றுவிக்கப் பட்டுள்ளதை வெளிக்காட்டியது.

இதேசமயம், புலிகளின் ஓயாத அலைகள் ஒன்று மூலம் மீட்கப்பட்ட முல்லைத்தீவு நடவடிக்கைக்கு எதிர் நவடிக்கைபோன்று மேற்கொள்ளப் பட்ட சத்ஜெய 1 நடவடிக்கையின்போது புலிகள் மேற்கொண்ட எதிர்நடவடிக் கையானது போர்முறையில் ஏற்பட்ட மாற்றத்தை தெளிவாகவே உறுதி செய் தது. இந் நடவடிக்கையை இராணுவம் எதிர்பார்த்த காலத்திற்குள் முடிக்காதது மட்டுமல்ல எதிர்பாராத இழப்புக்களை யும் சந்திக்க வேண்டியும் வந்தது.

ஆனால் 1997 மேயில், சிறீலங்கா இராணுவம் ஆரம்பித்த 'ஜெயசிக்குறு' நடவடிக்கையும், 1998 செப்ரம்பரில் ஓயாத அலைகள் —2 நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த கிளிநொச்சிப் படைத்தளம், மற்றும் 1999 எதிரியை எமது தாயகப் பிரதேசங்களிலி ருந்து முற்றாக வெளியேற்றும் நோக்கில் நவம்பரில் ஆரம்பிக்கப்பட்ட ஓயாத அலைகள் மூன்று அலையடிப்பில் ஒட்டு சுட்டான், நெடுங்கேணி, மடு, பள்ளமடு, மற்றும் மணலாற்றின் ஒரு பகுதியும், டிசம்பரில் வெற்றிலைக்கேணி, கட்டைக் காடு, பரந்தன் போன்ற பகுதிகள் மீட் கப்பட்டமையும் கடைசியாக மூன்றாம் கட்டப் போரின் ஐந்தாமாண்டு நிறை வில் தேசியத் தலைவரின் வழிகாட்ட லின் கீழ் ஆனையிறவுத்தளம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தமையானதும் மூன்றாம் கட்டப்போரின் பரிமாணத்தை முழு உலகிற்கும் சுட்டுபவையாக அமைந் தன. ஏனெனில், இச் சமர்கள் விடுதலைப் போராட்டத்தின் வலுவை, ஆற்றலை வெளிக்காட்டி நின்றன எனலாம்.

ஜெயசிக்குறு நடவடிக்கையானது, இறு திப் பெரும்போர் என்றரீதியில் சிறீலங்கா அரசினால் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் இச் சமரானது 18 மாதகாலங்கள் நீடித்து பல ஆயிரக்கணக்கான இராணு வத்தினரின் இழப்பிற்கும், ஆயுததளபாட அழிவிற்கும் வழிவகுத்ததொன்றாக இருந் ததேயொழிய வெற்றிபெற்ற நடவடிக்கை யாக அரசிற்கு அமையவில்லை.

இதேசமயம், விடுதலைப் புலிகள் பெரும்படை எடுப்புக்களை எதிர்கொள் ளும் வலுமிக்கவர்களாகவும், கனரக ஆயுத தளபாடங்களை வெகு நேர்த்தியாகக் கையாளும் வலுமிக்க ஒரு போராட்ட அமைப்பாகவும் ஏற்றுக்கொள்ளப்பட் டனர். அதாவது, தரைச்சமர்கள் எத் தகைய பெரியவையாக இருப்பினும், விடு தலைப் புலிகள் அவற்றை எதிர்கொள் ளத்தக்கவர்கள் என்பதைமட்டுமல்ல, அதைத்தீர்மானிக்கும் சக்தியுள்ளவர்கள் என்பதையும் இம் மூன்றாம்கட்ட ஈழப் போரின் ஐந்தாம் ஆண்டில் புலிகள் நிரூபித்துள்ளனர்.



09.10.1997 கனகராயன்குளத்துக்கு வடகிழக்குப் பகுதியில் "ஜெ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடற்சமர்



தரைச்சண்டைகள் எவ்வாறு புதிய பரிமாணத்தைக் காட்டியதோ, அதே போன்றே கடற்சண்டையும் புதிய பரிமாணத்தை வெளிக்காட்டி நின்றது. அத்தோடு, இவ் மூன்றாம்கட்ட ஈழப்போரின் தந்திரோபாயத்தின் ஓர் அங்கமாக கடற்சமர்களும் அமைந்தன.

மூன்றாம்கட்ட ஈழப்போர் ஆரம்பிப்பதற்கு முன்னரே, அதாவது இரண்டாம் கட்ட ஈழப்போரிலேயே கடற்புலிகள் விடுதலைப் போராட்டத்தில் தமது பங்களிப்பையும், முக்கியத்துவத்தையும் உறுதிசெய்திருந்தனர். இரண்டாம்கட்ட ஈழப் போரில் யாழ் குடாநாட்டை முற்று கையிட சிறீலங்கா ஆயுதப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையை கடற்புலிகளே முறியடித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேபோன்றே மூன்றாம்கட்ட ஈழப் போரிலும் கடற்புலிகளின் பங்களிப்பானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் தரையில் தோற்கடிக்கப்பட வேண்டுமானால் முதலில் கடற்புலிகள் கடலில் தோற்கடிக்கப்படவேண்டும் என்றவகையில் சிறீலங்கா இராணுவ ஆய்வாளர்கள் கருத்துக்களை வெளியிடும் அளவிற்குக் கடற்புலிகள் போராட்டத்தின் முதன்மைச் சக்தி ஆயினர்.

ரிவிரச நடவடிக்கைகளைத் தொடர்ந்து யாழ் குடாநாட்டிற்கான பிரதான விநியோகப் பாதையாக கடல்மார்க்கத்தையே சிறீலங்கா படைத்தரப்புக் கொண்டிருந்தது. ஆனால், கடற்புலிகள் வடகிழக்குக் கடற்பிராந்தியத்தில் பெற்ற செல்வாக்கானது சுதந்திரமாக கடற்பயணத்தை சிறீலங்கா கடற்படைக்கு இல்லாது ஒழித்தது. இதன் விளைவாக யாழ் குடாநாட்டிற்கான கடல்வழிப் பயணத்தை சர்வதேசக் கடற்பரப்பின் ஊடாகவே மேற்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது.

இதேசமயம், கடற்சண்டைகளும் புதிய பரிமாணத்திற்கு இட்டுச்செல்லப்பட்டிருந்தன. அதாவது, ஆரம்பத்தில் கடற்படையுடனான சண்டைகளின்போது அதிரடி நடவடிக்கை போன்றும், கரும்புலித்தாக்குதல்களை மையமாகவும் கொண்டு தாக்குதலை நடாத்திவந்த கடற்புலிகள் மூன்றாம்கட்ட ஈழப்போரில் பல கடல்மைல் தொலைவுகளுக்கப்பால், பலமணிநேரம் சிறீலங்காக் கடற்படையுடன் சண்டையிடும் ஆற்றலையும், சண்டைமூலமே கப்பல்களைத்தாக்கி அழிக்கும் ஆற்றல் பெற்றவர்களாவும் மாறியுள்ளனர்.

இந்த வகையில் 1998ம் ஆண்டு பருத்தித்துறைக் கடலில் விடுதலைப் புலிகள் நடத்திய பாரிய கடற்சண்டையும், அதே ஆண்டின் இறுதியில் டோராப் படகுகளுடன் முல்லைக் கடற்பரப்பில் வழி மறித்து நடத்திய கடற்சண்டையும், கடந்த வருடம் தொடங்கிய ஓயாத அலைகள் மூன்றின் வடக்கு நோக்கிய புலிகளின் பாய்ச்சலின் போது கடற்புலிகள் யாழ் கடனீரேரியை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து கிழக்கு அரியாலை, கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு, கேரதீவு ஆகிய இடங்களிலுள்ள இராணுவத்தினரை விரட்டியடிக்கின்ற ஈரூடகத் தாக்குதலிலும் ஈடுபட்டனர். மார்ச் மாத இறுதியில் நடைபெற்ற வடமராட்சி கிழக்கு மீட்பின் போதும் பெரும்பங்கு வகித்த கடற்புலிகளால் இம் மாத முற்பகுதியில் நாகர்கோவில் கடற்பரப்பில் இரண்டு டோராப்படகுகள் தாக்கி அழிக்கப்பட்டமையும், கடற்புலிகள் தமிழீழக் கடற்பரப்பில் செல்வாக்குப் பெறும் சக்தியாகவும் உருவாகியுள்ளதையே வெளிக்காட்டிநிற்கின்றது.

அதாவது மூன்றாம்கட்டப் போரில் கடற்புலிகளின் வளர்ச்சியாக கிழக்குக் கடற்பரப்பில் அதிகம் குறிப்பாக வடகிழக்குக் கடற்பிராந்தியத்தில் சிறீலங்காக் கடற்படையின் சுதந்திர நடமாட்டம் முடிவுக்குவந்துள்ள அதேவேளை இப்பிராந்தியத்தைக் கடந்து செல்ல சிறீலங்காக் கடற்படை சர்வதேசக் கடற்பரப்பை அண்டியும், தொடர்அணியாகவும் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை கடற்புலிகள் உருவாக்கியுள்ளனர். இனிவருங்காலங்களில் யாழ் மீட்புப் படையணிகளால் யாழ் குடாநாடு முற்றாக மீட்கப்படுகின்ற வேளையில் தமிழீழ வட கடற்பரப்பில் சிங்களக் கடற்படை உலா வருவதென் பதுசாத்தியமே இல்லை.



சிக்குறுய்" எதிர்ச்சமரின்போது கைப்பற்றப்பட்ட துருப்புக்காவி



02.01.1998 ஒலுமடுவில் MI-17 ரக உலங்கு வானூர்தி சுட்டு வீழ்தப்பட்டது.




27.09.1998 ஓயாத அலைகள் இரண்டு இராணுவ நடவடிக்கையினால் கிளிநொச்சி மாவட்டம் மீட்கப்பட்டது.



18.02.1999 கிளாலி கடற்படை கண்காணிப்புத் தளம்மீது கடற்சிறுத்தைகள் தாக்குதல். பெறுமதிமிக்க றாடார் சாதனங்கள் கைப்பற்றப்பட்டன.



02.11.1999 தாயக மீட்பினை நோக்கமாக கொண்ட ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது.



22.04.2000 தமிழீழத் தேசியத் தலைவரின் நேரடி வழிகாட்டுதலில் தொடரும் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை ஆனையிறவு பெரும் தளத்தையும் நிலப்பரப்பையும் மீட்டபடி தொடர்கிறது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வான்தாக்குதல்

கடற்சமர், தரைச்சமர்கள் போன்று வானில் மோதல்கள் இடம்பெறும் கட்டத்தை அடையாதுவிட்டாலும் வான் தாக்குதலுக்கு எதிரான தாக்குதலில் மூன்றாம்கட்ட ஈழப்போர் புதியவடிவத்தை வெளிக்காட்டியே உள்ளது.

சிறீலங்கா அரசைப் பொறுத்து தரைப் படை, கடற்படை என்பன எட்டமுடியாத தமிழ்ப்பிரதேசங்களை வான்படையின் உதவியுடன் எட்டுவதற்கு முனைந்தது. இதன் காரணமாக யுத்தமுனைகளில் மட்டுமல்ல இனப்படுகொலைகளிலும் சிறீலங்காவின் விமானப்படை முக்கிய இடத்தைப் பிடித்துக்கொண்டன.

அத்தோடு, இம் மூன்றாம்கட்ட ஈழப் போரிலேயே குண்டுத்தாக்குதலுக்கென கிபீர் குண்டுவீச்சு விமானங்களும், பீரங்கிகள் பொருத்தப்பட்ட உலங்குவானூர்திகளும் பரந்த அளவில் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டன. அத்தோடு இராணுவ நடவடிக்கையின் ஓர் அங்கமாகவும் விமானப்படை முழு அளவில் செயற்படவும் தொடங்கியது.

இதேவேளை விடுதலைப் புலிகளும் சிறீலங்கா வான்படைமீது தாக்குதலை நடத்தக்கூடிய ஆயுததளபாடங்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர். இது மூன்றாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய இரண்டாவது வாரத்திலேயே இரு அவ்ரோ விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதன் மூலம் உறுதிசெய்யப்பட்டது. இன்று வரை சிறீலங்கா விமானப்படையின் முப்பதுக்கும் மேற்பட்ட வான்கலங்களை விடுதலைப் புலிகள் அழித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து சிறீலங்கா வான்படை வடக்கு வான்பரபில் தனது கட்டுப்பாட்டையே இழந்ததெனலாம். கொழும்பிலிருந்து பலாலிப் படைத் தளத்திற்கான ஒரு மணிநேரப் பறப்பிற்குப் பதிலாக மூன்று மணிநேரத்திற்கும் அதிகமான பறப்பைக்கூட அது செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு புலிகளின் சிறீலங்கா விமானப்படைக்கு எதிரான நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்க விடுதலைப் புலிகள் 98ஆம் ஆண்டின் இறுதியில் வானூர்தியை பறப்பில் ஈடுபடுத்தியமை மூன்றாம்கட்ட ஈழப்போரில் மற்றொரு முக்கிய பரிமாணத்தை வெளிக்காட்டியுள்ளது என்பது மறுக்கமுடியாததொன்றாகும். இனி வருங்காலங்களில் தாயக மீட்பில் வான்புலிகளின் பங்கு பயன்படுத்தக் கூடிய நிலைமையும் மூன்றாம் கட்ட ஈழப் போரில் வாய்த்துள்ளது.

வடக்கு கிழக்கிற்கு வெளியில் நிகழ்ந்த தாக்குதல்கள்

மூன்றாம்கட்ட ஈழப்போர்க் காலத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் மட்டுமல்ல, அதற்கு வெளியிலும் இராணுவ அரசியல் முக்கியம் வாய்ந்த தாக்குதல்ச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவைகளில் 1995இல் இடம்பெற்ற கொலன்னாவ – கபுகஸ்கந்த எரி பொருள் நிலையங்கள் மீதான அதிரடித்தாக்குதல், 1996 ஜனவரியில் இடம்பெற்ற மத்தியவங்கிக் குண்டுவெடிப்பு, 1997இல் இடம்பெற்ற உலக வர்த்தக மையத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு, 1998இல் கண்டி தலதா மாளிகைக் கருகில் நடந்த குண்டுவெடிப்பு உட்பட தென்னிலங்கையில் நிகழ்ந்த வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்களும் மூன்றாம்கட்ட ஈழப்போரின் விளைவுகளே ஆகும்.

இந்த வகையில் மூன்றாம்கட்ட ஈழப்போரின் ஐந்தாண்டு காலமானது பெரும் இழப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தியதாக இருந்ததோடு மட்டுமல்லாது போராட்டத்தின் புதிய பரிமாணங்களையும் வெளிப்படுத்திய காலப்பகுதிகளாகவும் இருந்துள்ளது.

இன்று மூன்றாம்கட்ட ஈழப்போரானது ஓயாத அலைகளாக வீசியபடி யாழ் குடாநாட்டை மீட்பதற்காக குடா நாட்டின் வாயிலில் தனது தாக்குதல்களை வெற்றி கரமாக முடித்துக் கொண்டு மையப்பகுதி நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது.

**-ஜெயராஜ்**






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உண்மை

தாயின் மார்பில்
பாலுறிஞ்சும் அந்தப் பிஞ்சு
வானத்தில் வட்டமிடும்
கிபிருக்குக் கையசைக்கிறது.
அது தன் உயிரைக் குடிக்கும்
வல்லூறு என்பதறியாதோ
அல்லது
'கொஞ்சம் இரு
நாளை உன்னை
ஒரு கை பார்த்திடுவேன்'
என்று நினைத்தோ.

-முல்லை ரமணன்-

## துரோகிகள்

பிச்சாபாத்திரம் ஏந்தாத
பிச்சைக்காரர்கள்...
எச்சில் எலும்புக்காய் –
சுதந்திரத்தை
கொச்சைப்படுத்தும்
விசக்கணைகள்...
இலட்சியத் தீயை
வாயாலேயே...
ஊதி அணைத்து விடவெண்ணும்
பித்தர்கள்...
க(ா)ட்சிக்கேற்ப நிறமாற்றும்
பச்சோந்திகள்...
சுதந்திரத்தின் சுகம் தெரியாத
அடிமைப் புழுக்கள்...

–வேலணையூர் உஜிதன்–

## துண்டிப்பு

எங்கள் தோட்ட
நிலங்களில்
கொட்டப்பட்டு கிடக்கும்
மிதிவெடி!
பொறிவெடிப் பசளைகளில்
சிக்கி விளைந்த
எங்கள் கால்கள்
கழிவு சந்தைக்கு
ஏற்றுமதி!
செய்யப்படுகின்றன.

-ஆவரங்கால் சுதன்-

## உறைந்தகுருதி

தென்றல் எனைத் தழுவ
தனிமையில் வீதியில் நடந்தேன்
கவனம் என்றது காற்று
சுற்றிச்சுற்றிப் பார்த்தேன்
எதுவுமே எனக்குத் தெரியவில்லை
மீண்டும் அடியெடுத்து வைத்தேன்
ஆன்மா கலங்கி நடுங்கியது
எதுவுமே அறியாது இதயம் கலங்கியது
முயற்சி செய்து நகர்ந்தேன்
மீண்டும் பாதம் மண்ணில் பட்டது
உயிர்த் துடிப்பால் டப்டப் என
பூமி துடித்தது அப்போது
உணர்வுகள் ஒன்று சேர்ந்து
பூமியை நோக்கியது
நீர் நிறைந்து குளமானது விழி
வெஞ்சமர் ஆடிய வீரர்
சிந்திய குருதியில் ஈழமண்
உயிர்த் துடிப்பால் இருந்தது
ஈரவிழி வீரத்தை கண்டது
பூமியை கை தூக்கி வணங்கினேன்.

–க. சங்கீதன் –




## நம்பிக்கை

இருள் அகன்று
நிலம் வெளிப்பதற்கான
அறிகுறி கிழக்கு வானில்
அடிக்கடி கருக்கட்டும்.
துயர் சூழ்ந்த மனங்கள்
வெளிப்பினை தரிசிக்க
உவப்போடு உயிர்தெழும்
மின்னலினை இருள்
திரையாய் திரண்டெழும்
நம்பிக்கை சூழ்ந்த
மௌன மனங்கள் தம்முள்
இறுகி தவிக்கும்.
கிழக்கு வானின் சிவப்பு
விடியலிற்காய்
கதிர்கள் உருத்
தொடுக்கும்
விரைவில் விடியுமென
நம்பிக்கை மனங்கள்
ஒன்றாய்
அணிவகுக்கும்.

–அலையிசை–

## தளராதே...!

விதைப்பதும், முளைப்பதும்
விதை மட்டுமல்ல
வீரரும் தான்!
விழுவதும் பின்பு எழுவதும்
அலை மட்டுமல்ல
வாழ்க்கையும் தான்!

–சி. காண்டீபன் –

## தலைநிமிர்ந்து

அன்புள்ள நண்பா, நண்பி,
புத்தகம் தூக்கினால் போதாது
துப்பாக்கி தூக்க வேண்டும்
துப்பாக்கி தூக்கினால்போதாது
துணிவும் வேண்டும்.
துணிவு இருந்தால் போதாது
மன உறுதியும் வேண்டும்
இத்தனையும் இருந்தால்த் தான்
தமிழன் தலைநிமிர்ந்து வாழலாம்.

– க. குமரன்–

## வருக

குறுக்குவழி நகர்ந்து
செல்வாக்குதனை
இறுக்கி விட எண்ணியவர்
குண்டு வெடிகளின் பின்
குணங்களையே
மாற்றிவிட்டார்...!
குண்டுகள் தாம்
குவலயத்தை மாற்றுமானால்
குண்டுகளை ஏனும்
சுமப்போம் வாரீர்.

–அரியம்–



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பண்டைய கோட்டை இ
# ஆட்சிமொழி தமிழ்

"பேட்டை" என்பது ஒரு தமிழ்ப் பதமாகும். இதுவே "பெற்றா" என மருவி வழங்குகின்றது. கோட்டை என்பதும் அவ்வாறே. அதுவே "கொட்டுவா" எனத்திரிபடைந்துள்ளது. இன்றைய கோட்டையாகிய ஜெயவர்த்தனபுரத்தில் ஆட்சிமொழியாக வழங்குவது சிங்களமே. தமிழும் ஒரு ஆட்சிமொழியாகும் என அரசியல் திருத்தத்தில் கூறப்பட்டுள்ளதேயன்றி சிங்களமும் தமிழும் இலங்கையில் ஆட்சிமொழியாகும் எனக் குறிப்பிடப்படவில்லை. இது தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஏமாற்றமே. ஆயினும் பண்டைய இலங்கையில் தமிழ்மொழியே ஆட்சி மொழியாக இருந்தது. இலங்கையின் ஆதிகால வரலாற்றில் சிங்களமொழி அதிகளவாக வளர்ச்சியடைந்து இருக்கவில்லை. இதனால் மன்னர்கள் யாவரும் தமிழ்மொழியை விருத்தி செய்தால்த்தான் தமது நிர்வாகம் சீர் பெறும் எனக்கருதினார்கள்.

இளவரசன் விஜயபாலாவும், இரண்டாவது இராஜசிங்காவும் எழுதிய கடிதங்கள் பலவும் தமிழ் மொழியிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. போர்த்துக்கேய வரலாற்று ஆவணங்கள் தர்மபாலாவைப் பெரிய பண்டாரம் எனக் குறிப்பிடுகின்றனவே தவிர மஹா பண்டாரம் எனக் குறிப்பிடவில்லை.

## வரலாறு பகரும் உண்மைகள்

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் பலருடனும் கொண்ட தொடர்புகள் யாவும் தமிழ் மொழியிலேயே உள்ளன. இக்கடிதங்களின் உண்மைத் தகவல்களை, நுவரெலியாவிலுள்ள நூதனசாலையில் காணலாம். பிரெஞ்சு மன்னன் 16ம் லூயிக்கும் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனுக்கும் இடையே 1777ஆம் ஆண்டில் ஒரு நட்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கை சிங்கள மொழியிலேயோ அல்லது பிரெஞ்சு மொழியிலேயோ எழுதப்பட்டதல்ல. அது தமிழ்மொழியிலேயே எழுதப்பட்டுள்ளது. நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் வரலாற்றினை மூடி மறைப்பது மிகவும் சிரமமானது. இந்த உடன்படிக்கையின் மூலப்பிரதிகள் பாண்டிச்சேரியிலுள்ள தொல்பொருட் காட்சிச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் தமிழ் ஆட்சிமொழியின் இடத்தை வகித்தது என்பதற்கு இதைவிட வேறு வரலாற்று ஆவணங்கள் தேவை என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றே.

சிங்கள மக்களின் கலை இலக்கியத்திற்கு அன்று ஆட்சி மொழியாக இருந்த தமிழ்மொழியிலிருந்தே இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டன என்று வரலாற்று ஆசிரியர் டபிள்யூ.ஏ.டி. சில்வா எழுதியுள்ளார். இராமாயணம், அரிச்சந்திரா போன்ற புராண இதிகாசங்கள் சிங்கள மக்களின் விருப்பத்திற்கு அமையவே சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. கண்ணகியை வழிபாட்டிற்குரிய தெய்வமாக சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழின் உயர்ந்த இலக்கியங்களில் இருந்து உயர்ந்த ஒழுக்கக்கட்டுப்பாடான கற்பு நெறியை அவர்கள் ஏற்கப்பழகியமையே இந்தத் தெய்வ வழிபாட்டின் அடிப்படையாகும். மூன்றாவது பராக்கிரமபாகுவின் அரண்மனை தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்களுக்கு முன்னிலை வழங்கியது. அவருடைய அரண்மைனையில் இருந்த போதிராஜா என்பவரால்தான் சரஜோதி மாலை தமிழில் பாடப்பட்டது. பின்பே அது சிங்கள மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டது.

## பௌத்தமும் தமிழும்

இன்றைய பௌத்தம் இலங்கையில் சிங்கள மொழியை அங்கீகரித்துள்ளது. ஒரு மதத்திற்கு ஒரு மொழியெனச் சொல்வது குறுகிய இனவாதமே. சைவமும் தமிழும் ஒன்று என ஒருகாலத்தில் வாதிக்கப்பட்டது. அது தவறானது என ஆறுமுகநாவலர்கூட வாதாடத் தயங்கவில்லை. பௌத்தம் இலங்கையில் பரப்பப்பட்டமைக்கு அன்று முக்கிய மொழியாக இருந்த தமிழே காரணம். இலங்கையில் லோகர்தீசன் ஆட்சிக் காலத்தில் (கி.பி 169—291) அபயகிரி விகாரையில் தமிழ்மொழியிலேயே மதம் பரப்பும் தொண்டுகள் தொடர்ந்தன. ஆயினும் அடுத்து வந்த கோதாப



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ராச்சியத்தின்
# மாழியே !

யனின் ஆட்சிக்காலத்தில் அங்கிருந்த இலக்கியங்கள் யாவும் எரிக்கப்பட்டு அங்கிருந்த 60 தமிழ் சந்நியாசிகளும் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டனர்.

### தமிழ்த்துறவி சங்கமித்தை

சங்கமித்தை இலங்கைக்கு வந்த காரணம் முதலில் பௌத்தத்தைப் பரப்புவது மட்டுமல்ல, நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட அந்த அறுபது சந்நியாசிகளின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதற்கும்தான். சங்கமித்தை தமிழ் பேசிய ஒரு தமிழ் பௌத்தத் துறவியே (மகாவம்சம் கைகர் மொழி பெயர்ப்பு அத்தியாயம் XXXVIV113)

இலங்கைக்கு வந்த சங்கமித்தை கோதாபயனின் பிள்ளைகளான ஜெகதீசனுக்கும் மகாசேனனுக்கும் ஆசிரியையாக நியமிக்கப்பட்டாள். கோதாபயனின் இறப்பிற்குப் பின்பு (கி.பி.323—333) ஜெகதீசன் அரசாண்டான். அவன் அரசாண்டபோது சங்கமித்தை இருக்கவில்லை. பின்பு மகாசேனன் அரசனானபோது பௌத்தத்தைப் பரப்புவதில் அரசனால் அங்கீகரிக்கப்பட்டாள்.

சங்கமித்தை காலத்தில் போதிமார் என்ற தமிழ்ப் பௌத்த சந்நியாசி வாழ்ந்தார். இவர் கி.பி520 இல் சீனாவிற்கு வந்துசேர்ந்தார். இவர் காட்டிய வழியைப் பின்பற்றியோர் சௌ குழுவினர் என அழைக்கப்பட்டார்கள். ராமோ என்றே இவரைச் சீனர்கள் அழைத்தனர். இன்றும் சீனாவில் முக்கியமாகக் குறிப்பிடப்படும் இருபத்தைந்து சமய குருவானவர்களில் ராமோ எனப்படும் இந்தத் தமிழ்ப் பிரிவும் அடங்கும்.

### நீதிமன்றத்தில் தமிழ்மொழி

வடக்கிற்கும் கிழக்கிற்கும் வெளியே புதைபொருள் ஆராட்சியாளர்களால் தமிழ்மொழியில் பெருந்தொகைக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தமது பாரம்பரியப் பிரதேசங்களுக்கு அப்பால் அம்மொழியில் கல்வெட்டுக்கள் இருப்பின் அம்மொழி நீதித்துறையில் செல்வாக்குப் பெற்றிருக்கவேண்டும். இலங்கையில் காலி, சிலாபம், கம்பொல, குருநாகல், கண்டி, கோட்டை, கோட்டகம, பதவியா, பாலமோட்டை, பொலநறுவை, செங்கடகல ஆகிய இடங்களில் அதிகளவு கல்வெட்டுக்கள் உள்ளன. இவை நீதித்துறையில் தமிழ் மொழியின் செல்வாக்கை நிலை நிறுத்துகின்றன.

இலங்கையின் வரலாற்றில் கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர்களில் தமிழ்க்கலப்பு இல்லாது அரசாண்ட மன்னர்கள் மிக அரிது. அவர்களது தகப்பன் சிங்கள அரசனாக இருந்தால், தாய் கலிங்கத்திலிருந்தோ சோழநாட்டிலிருந்தோ வந்த இளவரசியாகத்தான் இருப்பாள்.

கோட்டையில் அரசாண்ட ஆறாவது பராக்கிரமபாகு தொடங்கி (1412—1468) தர்மபாலா (1551—1597) வரை இந்தக் கலப்பினக் கோட்பாட்டிலிருந்து எவரும் தப்பவில்லை.

ஆறாவது பராக்கிரமபாகு தனக்குப் பின்பு தனது பேரனான தர்மபாலாவுக்குத்தான் அரசுரிமை வழங்கப்படவேண்டும் என நீதிமன்றத்திலிருந்த செல்லப்ப ஆராய்ச்சி என்பவரை ஒரு சிறிய தர்மபாலாச் சிலையுடன் அனுப்பினான். இது தமிழர்களதும், தமிழ்மொழியினதும் மேன்மை நிலையினைப் புலப்படுத்துகின்றது.

பிராமணர்களின் ஆதிக்கமே நீதிமன்றத்தில் அதிகம் காணப்பட்டது. தென்னிந்திய முறையை ஒட்டியே நீதி வழங்கப்பட்டது. இதனால் தமிழ்மொழியிலிருந்து பங்கு, பங்குக்காரர், நிந்தகம், ஊழியம், பட்டம், உழைப்பு ஆகிய தமிழ்ச் சொற்கள் சிறிய மாற்றங்களைக் கண்டு சிங்கள மொழியில் இணைந்தன. இக்காரணத்தால் சிங்களமும் ஒரு திராவிட மொழியே என அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர்.

### குருநாகல் மாவட்டத்தில் தமிழில் உறுதி

17ஆம் நூற்றாண்டில் குருநாகல் மாவட்டத்தில் எழுதப்பட்ட பெரும்பாலான உறுதிகள் தமிழ்மொழியில் எழுதப்பட்டனவாகவே இருக்கின்றன. ஒரு தமிழ் உறுதியில் வாசகங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

எதிர்மொழி மொழிந்து
மறுமொழி பகர்ந்து விற்போம்
என்று விற்பதற்கிசைந்து
விலையறவிற்று பொருளற பற்றி
எம்மில் இசைந்து
எதிர்மொழி மொழிந்து
நம்மில் இருவரும் தாம் சம்மதித்து
விற்பதற்கு இசைந்து
கொள்வதற்கு வந்து
தேன்படு காடு, மீன்படு பள்ளம்
குண்டு, குழி உட்பட கல்லும்
காவேரியும், புல்லும் பூமி சந்திரன்
உள்ளளவும் ஆண்டு அனுபவிக்க
சாட்சியை நான் அறிவேன.

ஒப்பம்

இவ்வாறு இலங்கையில் தமிழ் மக்களின் பூர்வீகம் அமைந்திருக்க இன்றைய சிங்கள வரலாற்று ஆய்வாளர்களான ய.ய. கன்னங்கரா, நளின் டீ சில்வா, காலம் சென்ற பரணவிதான ஆகியோர் உண்மைக்குப் புறம்பான பல ஆய்வுகளை இலங்கை வரலாற்றைக் குறித்து எழுதியுள்ளனர். இவ்விவாதங்களை முறியடிக்கும் விதமாக தமிழ் வரலாற்று ஆய்வாளர்கள் தமிழ் மக்களின் பூர்வீகத்தை மீண்டும் நிலைநிறுத்தப் பல ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நல்லையல்லை நெடுவெண்ணிலவே!



இல்லும் இழந்தனம்; ஊரும் இழந்தனம்
எல்லாம் இழந்தே ஏதிலியர் ஆனோம்
வேற்றூர் தன்னில் வெயிலுக் கொதுங்கல்
போற்றெரு வோரம் புளியோ வேம்போ
ஆலோ அரசோ அருநிழல் தேடி
ஓலை மறைப்பில் உழலும் வாழ்க்கை
ஒழியுநாள் வருமோ?
முன்னாள் எம்மூர் –
உழுது வித்திய பழனச் செந்நெல்
அலைகடற் படுத்த விளைமீன் குழம்பொடு
ஆர உண்டே, மூரல் முறுவலார்
சேர இருந்து
திங்கள் சொரிந்த
பாலொளிப் பரப்பில்
மாலைத் தென்றல்
முல்லை நறுமணம் முகந்து வீச
மேனி சிலிர்ப்ப இன்பில் மிதந்த
எழில் வாழ்வு கழிந்தது மாதோ!
இந்நாள் –
ஏர்க்களம் யாவும் போர்க்களம் ஆன;
வாரி யிடையே வலைஞர் செல்லார்;
குயிலும் கோழியும் கூவல் மறந்தன;
கிள்ளை மழலையும் கேளா; நல்ஆன்
கன்று துள்ளா; கறவை சுரவா
எல்லாம் அழுக்கா றுடையான் உள்ளம்போல்
புல்லென் றாகிப் போன!
யாமே –
கடுவெயில் அருவழி நெடுந்தொலை ஏகி
கான விறகு கட்டி விற்கும்
அல்லல் வாழ்க்கையேம் ஆனோம்!
இங்ஙன் –
சிறுவர் மகிழார்; இளையோர் நயவார்;
பாடுநர் நோக்கார்; பகையறக் களத்தில்
ஆடுநர் வேண்டார் நீடொளி பரப்பி
மெல்ல வானில் வருகுவை
நல்லை அல்லை நெடுவெண் நிலவே!

**பண்டிதர் பரந்தாமன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணையாத தீபங்கள்



வல்வையைப் பிறப்பிடமாகக்கொண்ட கப்டன் லிங்கம் யாழ்.இந்துக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளரானார். 1980ஆம் ஆண்டில் 12ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உதவியாளராக செயற்பட ஆரம்பித்தார். விடுதலைப் போராட்டத்தில் மக்கள் அதிகம் ஈடுபாடு காட்டாத வேளையில், விடுதலைப் புலிகளை வேட்டையாடவென இரகசியப்பொலிசார் மோப்பமிட்டுக் கொண்டிருந்தவேளையில் சுவரொட்டி ஒட்டுதல் போன்ற வேலைகளைக்கூட மிக்க சிரமங்களுக்கிடையில் செய்தார். 1981இல் முழு நேர உறுப்பினராக இணைந்து கொண்டார். அதே ஆண்டில் இராணுவப் பயிற்சியையும் பெற்றுக்கொண்டார்.


1983 யூலை மாத வரலாற்றுப் புகழ் பெற்ற திருநெல்வேலித் தாக்குதல் உட்பட விடுதலைப் புலிகள் அமைப்பின் பல்வேறுதாக்குதல்களிலும் முக்கிய பங்கு வகித்தார்.

1984இல் மதுரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளராகக் கடமையாற்றி அரசியல் பிரச்சாரத்தை திறம்பட நடாத்தி தமிழக மக்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொண்டார். அதன் பின்னர் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமொன்றின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு பல நூறு தீரமிக்க போராளிகளை உருவாக்கினார். தேசியத் தலைவரின் அதிவிருப்பிற்குரிய போராளியாக விளங்கிய கப்டன் லிங்கம் அவரின் உதவியாளராகவும் மெய்பாதுகாவலராகவும் விளங்கினார்.

லிங்கம் சக போராளிகள் ஒவ்வொருவருடனும் சகஜமாகப் பழகியிருந்ததால் எல்லோரும் அவரின் மீது அன்பு கொண்டிருந்தனர். கடமையென்று வருகின்ற வேளைகளில் கண்டிப்பான வராகிவிடுவார்.

29.04.86 அன்று ரெலோ துரோகக்கும்பலினால் கடத்திச் செல்லப்பட்ட இரு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காக புலிகளின் தலைமைப் பீடத்தால் அனுப்பப்பட்டார். சிறீசபாரத்தினமும் அவரது ஆட்களும் தங்கியிருந்த ரெலோ முகாமிற்கு நிராயுதபாணியாகச் சென்ற கப்.லிங்கம், ரெலோ கும்பலால் கண்ணில் சுட்டு படுபாதகமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

சிங்கள இராணுவத்துடன் பொருதச் சென்ற லிங்கம் துரோகிகளால் கோழைத்தனமாக் கொல்லப்பட்டார். தமிழீழ விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு காரணமாக நேற்றிருந்த லிங்கம் இன்றில்லை. நாளையும் அதற்கு அடுத்து வருகின்ற காலங்களிலும் லிங்கம் எமது வரலாற்றோடு வாழப் போகின்றார்.



**கப்டன். லிங்கம்**
(சிங்காரவேல் - செல்வக்குமார்)
வல்வெட்டித்துறை
16.12.1960 - 29.04.1986




அன்னை பூபதி அம்மாவின் 12வது நினைவையெட்டி 15/04/2000 சுவிஸ் - துாண் இல் நடத்தப்பட்ட எழுச்சி விழா. இவ் நிகழ்வில் பல நூற்றுக்கனக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இது போன்ற நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் நடத்தப்பட்டது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய தேசமான கிழக்குத் தீமோரின் பிரதானமான மனிதராக திரு. சனான குஸ்மா உள்ளார் என்பதில் ஐயமில்லை. கிழக்குத் தீமோரின் மிகப் பின்தங்கிய இடங்களுக்கு செல்கின்ற போதெல்லாம் திரளுகின்ற தீமோரிய மக்கள் கூட்டம், தங்களுடைய தேசபிதாவைச் சூழ்ந்து கொண்டு நாங்கள் கிழக்குத் தீமோரியர்கள். இப்பொழுது நாங்கள் சுதந்திர மடைந்து விட்டோம். (viii iva East Timorrrr! Viiiva independencia) என்று உற்சாகமாக கோசமிடுகின்றனர்.

500 வருடப் போத்துக்கேய காலனித்துவத்திலிருந்தும் அதன் பின்னரான 24 வருடத்திய இந்தோனேசிய இராணுவத்தின் கொடுங்கோலாட்சியிலிருந்தும் அல்லல்ப்பட்ட மக்களுக்கு விடுதலைக்கு வழிகாட்டிய சனான குஸ்மாவோ அவர்களே இன்று தங்கள் அபிவிருத்திக்கும் வாழ்விற்கும் வழிகாட்டுவார் என்று காத்திருக்கின்றனர்.

கிழக்குத் தீமோர் மக்கள் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி தமது சுதந்திரத்தினை தீர்மானிப் பதற்கான வாக்களிப்பினை மேற்கொண்டு. அதற்காக பெரும் ஆட்பல பொருளாதார இழப்புக்களையும் சந்தித்தார்கள். எட்டரை லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழும் தீவின் அரைப் பங்கு நிலப்பரப்பில் இன்று எதுவுமேயில்லை. தங்களுடைய சுயநிர்ணய உரிமைக்காக வாக்களித்துவிட்டு திரும்புகின்ற வேளையில் இந்தோனேசிய துருப்புக்கள் மற்றும் இந்தோனேசிய சார்புக்குழுக்களாலும் சுட்டும் வெட்டியும் எரித்தும் அழிக்கப்பட்டனர். இந்தோனேசிய படைகள் கிழக்குத் தீமோரின் அனைத்து பொருளாதார கேந்திரங்களையும் அழித்துவிட்டு, தலைநகரான டிலியை விட்டு விலகியபோது டிலி நகர சுவர்களில் கிழக்குத் தீமோர் மக்கள் கல்லையும் மண்ணையும் மாத்திரமே உண்ணவேண்டும் என்று எழுதி வைத்து விட்டுச் சென்றனர். பல்லாயிரக் கணக்கான கிழக்குத் தீமோரியர்கள் கூலிக்குழுக்களால் படுகொலை செய்யப்பட்டனர். ஏறக்குறைய கிழக்குத் தீமோர் சனத்தொகையின் மூன்றிலொரு பங்கு மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். மொத்தத்தில் விடுதலையடைந்த கிழக்குத் தீமோர் உலநாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் மிக அடிமட்டத்திலேயேயுள்ளது. உலக வங்கியானது கிழக்குத் தீமோரின் சராசரி தனிமனித உற்பத்தி (GDP) 240 டொலர்களாகும் என்று கணிப்பிட்டுள்ளது. இந்நிலையானது ஆபிரிக்க நாடுகளான மொசாம்பிக், எதியோப்பியா ஆகியவற்றை ஒத்திருப்பதாக உள்ளது.

கிழக்குத் தீமோரின் விடுதலைப் போராளிகளின் தலைவரும் நீண்ட காலம் சிறையில் வாடியவருமான 53 வயது சனான குஸ்மாவோ அவர்கள் இன்று தமது மக்களுக்காக, மக்களின் பொருளாதாரப் பசியைப் போக்குவதற்காக உலக வங்கி, சர்வதேச பொருளாதார நிதியம் ஆகியவற்றின் கதவுகளைத் தட்டி உதவிகளைக் கோர ஆரம்பித்துள்ளார். அவரிடம் நெல்சன் மண்டேலாவின் ஆளுமையும், சேகுவேராவின் போர்க்குணமும் நிறைந்து காணப்படுவதாக நோக்கர்கள் கூறுகின்றனர். தீமோரின் ஒவ்வொரு பாகத்திற்கும் சென்று துன்பத்தோடும் துயரச்சுமையோடும் உள்ள மக்களைச் சந்தித்து நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டுகின்றார்.

தீயவர்களால் எமக்கிழைக்கப்பட்ட சகல இன்னல்களையும் தாண்டி நிற்கிறோம், நாம் எமது மண்ணில் நன்றாக வாழ்வோம். வருகின்ற புதுயுகம் எமக்கானது.— என்று கிழக்குத் தீமோருக்கு மீளத்திரும்பியபோது ஆற்றிய உரையில் குறிப் பிட்டிருந்தார். கிழக்குத் தீமோரின் அடையாளமே இவர்தான் என்று 80களிலிருந்து இரகசியமாக விடுதலைப் போராளிகளோடு இயங்கி வருபவரும் டிலி நகர கிறித்துவ பாதிரியாருமான பிலிமினோ ஜேக்கப் அவர்கள் கூறியிருந்தார்.

சுதந்திரத்தைப் பெற்று துளிர்விடும் சிறு தீவில் சனான குஸ்மாவிற்கு எதிர்த்தரப்பென்பதே இல்லை. அவருடன் கிழக்குத் தீமோர் மக்களுக்கான தேசிய சபையின் உறுப்பினர்களாக இருக்கும் முன்னாள் விடுதலைப் போராளிகள் அனைவரும் சுயநிர்ணய உரிமைக்கான தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுத்து இழந்த கிழக்குத் தீமோரின் இறைமையை மீட்டனர். நீண்ட காலமாக வேலை வாய்ப்புகள் இன்றி நிரந்திர வருமானமுமில்லாமல் கொந்தளிப்போடு வாழ்கின்ற கிழக்குத் தீமோர் மக்களை குஸ்மாவோ அவர்களது உணர்வுபூர்வமான



# சுத
# வழி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ந்திர கிழக்குத் தீமோரும் நடாத்தும் சனான குஸ்மாவும்

அணுகு முறைகள் கட்டுப்படுத்தி சீர்படுத்த வல்லவை என்று அவரது சகாக்களே பெருமையோடு கூறுகின்றனர்.

அதற்க்கு ஒரு உதாரண சம்பவம் இந்தோனேசியாவின் புதிய ஜனாதிபதி யான வாகித் அவர்கள் கிழக்குத் தீமோருக்கு கடந்த ஆண்டின் இறுதியில் வருகை தந்திருந்தார். அதன்போது ஆவேசத்தோடு திரண்ட கிழக்குத் தீமோரிய மக்களுக்கிடையில் ஒற்றையாளாக நின்று அவர்களை சமாதானப்படுத்தினார். படிப்படியாக ஒவ்வொருவராக தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கொடுக்கிறார். வருகை தந்த இந்தோனேசிய ஜனாதிபதியிடம் அவரது நாட்டின் படைகள் தீமோர் மக்களுக்கு செய்த கொடுமைகளுக்கு சரியான நீதிவேண்டும் என்று சனான குஸ்மா வலியுறு த்தினார்.

குஸ்மா அவர்கள் துன்பங்களிலிருந்தும் துயரங்களிலிருந்தும் படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டதாக கூறுகின்றார். அவர் 1946 ஆம் ஆண்டு கிழக்குத் தீமோரின் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான மனாருற்றோவில் பிறந்தார். ஆரம்பத்தில் போத்துக்கல் ஆட்சியில் தாம் பட்ட அவலங்களில் இருந்துதான் விடுதலையின் அவசியத்தை உணர்ந்து கொண்டார். பதினாறு வயதிலேயே பாடசாலையை விட்டு வெளியேறினார். பின்னர் ஒரு சீனர்களின் பாடசாலையில் கற்பித்துக் கொண்டே, போத்துக்கேய அரசாங்கத்தில் நில அளவையாளராகக் கடமையாற்றினார். அதன் போது நிறவெவறி பிடித்த போத்துக்கேய மேலதிகாரிகளுடன் முரண்பட்டுக் கொண்டு வெளியேறினார்.

1974இல் சனான குஸ்மா செய்தியாளராகப் பணியாற்றத் தொடங்கினார். அந்த வேளையில்தான் கிழக்குத் தீமோரிலிருந்து போத்துக்கல் வெளியேறியது. மறுவருடமே இந்தோனேசிய இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டது. குஸ்மா தம்மை விடுதலைப் போராளியாக பலன்றில் (FALINTIL) என்ற கிழக்குத் தீமோர் விடுதலை இராணுவத்தில் இணைத்துக் கொண்டார். கிழக்குத் தீமோரின் நிலப்பகுதியெங்கும் காடு மலையெல்லாம் அலைந்து இந்தோனேசிய இராணுவத்தினரோடு போராடினார். 1981 இல் விடுதலைப் போராளிகளின் தலைவருமானார். அதன்பின்னர் இந்தோனேசிய இராணுவத்தால் கிழக்குத்தீமோரில் முதன்மையாகத் தேடப்படுகின்றவரானார். 1992இல் கிழக்குத் தீமோரின் தலைநகர் டிலிக்கு மேற்கொண்ட இரகசியப் பயணத்தின் போது இந்தோனேசியப் படைகளால் கைதுசெய்யப்பட்டார்.




விடுதலைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற வேளைகளில் விடுதலைப் போராளிகளின் தலைவர்கள் சிறையிடப்படுவது வழமையானதே. அதே போன்று குஸ்மா அவர்களும் சிறையிலடைக்கப்பட்டார். அந்தச் சிறைச்சாலையையே பிரச்சார மேடையாக்கினார். இந்தோனேசிய இராணுவ நீதிமன்றில் குற்றவாளியாக நிறுத்தப்பட்ட வேளையில் கிழக்குத் தீமோரின் எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கு தயாரா என்று அறைகூவல் விடுத்தார். உண்மைக்குப் பயப்படுபவர்கள் வாக்கெடுப்பிற்கு பயப்படமாட்டார்கள் என்று முழங்கினார். அவர் உலகின் முக்கியம் வாய்ந்த சிறைக்கைதிகளில் ஒருவரானார். 1997இல் தென்னாபிரிக்கச் செம்மல் நெல்சன் மண்டேலா திரு. குஸ்மா அவர்களை சிறையில் சந்திந்து அவரின் விடுதலைக்கு ஆவன செய்யும்படி கோரினார். இந்தோனேசிய சர்வாதிகாரியான சுகட்டோவின் பின்னர் ஜனாதிபதியாக வந்த ஹபிபி அவர்கள் சர்வதேச அழுத்தங்களுக்கு பணிந்து கிழக்குத் தீமோரியர்கள் தமது சுதந்திரத்தை தாமே தீர்மானிப்பதற்கான தேர்தலை நடத்துவதற்கு தயாரென அறிவித்தார்.

இந்நிலையிலேயே கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் குஸ்மா அவர்கள் விடுதலை செய்யப்பட்டார். அவர்தனது தாயகத்திற்கு சென்றபோது அவர் கண்டதெல்லாம் எரியுண்டு, இடியுண்டு போன வீடுகள், தொழிற்காலைகள், சிதைந்த மனித உடலங்கள் மாத்திரமே. சுதந்திரத்திற்கு தாம் கொடுத்த விலையறிந்து விம்மினார்.

குஸ்மா அவர்கள் ஐ.நாவின் உதவியோடு தமது தீமோரிய மக்களின் வாழ்வை வளம்படுத்த பல்வேறு வழிகளிலும் பாடுபடுகின்றார். எனினும் கிழக்குத் தீமோரிற்கு ஐ.நாவிற்கான உதவிகள் மந்தமாகவே உள்ளதால் மக்கள் விரக்தியையும் ஆபத்தும் உள்ளது. பல்வேறு அடிப்படை வேலைத்திட்டங்கள் செய்யப்படவேண்டியுள்ளது. கிழக்குத் தீமோரின் நாணயம் எதுவென்பதும் பிரகடனப்படுத்தப் படவேண்டும். வங்கி முறைகள் நிறுவப்படுதல் வேண்டும். பன்னிரெண்டு வகையான பிராந்திய மொழிகள் நிலவுகின்றது ஆட்சி மொழியாக ஏதாவது ஒன்று தெரிவு செய்யப் படவேண்டும். காவல்துறை மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் சீர்படுத்தப் படவேண்டும். 80 வீதமான கிழக்குத் தீமோர் மக்கள் வேலைவாய்பற்றுள்ளனர்.

இவற்றையெல்லாம் செய்து கொண்டிருக்கின்ற வேளையில் குஸ்மா தமக்கு ஜனாதிபதியாக வரவிருப்பமில்லை என்று தெரிவித்துள்ளார். வருகின்ற 2001இல் நடைபெற உள்ள தேர்தலிலும் நிற்பதற்கும் மறுத்துள்ளார். எங்களுடைய போராட்டம் எமக்கானதல்ல எமது வருங்காலச் சந்ததியினருக்கானது. ஜனாதிபதியாயிருப்பவருக்கு என்னை விடத் தகுதியிருக்க வேண்டும் என்றே எண்ணுகிறேன், என்று தமது மறுப்பிற்கான காரணத்தைத் தெரிவித்துள்ளார்.

ஆனால் பெரும்பாலான கிழக்குத் தீமோரியமக்களுக்கு தங்கள் தேசத் தந்தைக்கு அந்த தகுதி இருப்பதாகவே கருதுகின்றனர். தங்களது புதிய நாட்டை கட்டியெழுப்புவதற்கு அவர்களுக்கு அவர் தேவையாக உள்ளார்.

சுழல்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத் தமிழ்மாணவர்களின் தேசியப்பற்றும் கல்வியும்

தேசியப்பற்று என்பது தான் பிறந்த நாட்டின் மீது வைத்திருக்கும் அன்பினைக் குறிக்கின்றது. தான் பிறந்த நாட்டின் மீதும் தனது மூதாதையர் வாழ்ந்த நாட்டின்மீதும் அன்பு கொள்ள வேண்டும். இதனை புரட்சிக் கவிஞர் பாரதியார் “எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியதும் இந்நாடே, அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து கழித்ததும் இந்நாடே” எனத் தேசப்பற்றுதலை வெளிப்படுத்துகிறார். கல்வி எனப்படுவது நிலையானதொரு நடத்தைமாற்றத்தை உருவாக்குவதாகும். அதாவது சமூகத்திலே சீரோடும் சிறப்போடும் வாழ்வதற்கு வழிகாட்டியாகஅமைவது இக்கல்வியாகும்.

ஈழத்தமிழரைப் பொறுத்தவரை தேசியப்பற்றும் கல்வியுமே அவர்களின் நிலையான சொத்தாகக்காணப்படுகிறது. ஏனெனில் பரந்துபட்டுக் காணப்படுகின்ற நிலப்பரப்பினைக் கொண்ட இலங்கைத் தீவில் ஒரு புறம் தமிழீழப் பிரதேசமாகும். இத்தமிழீழப் பிரதேசத்தில் யுத்த மேகமென்று திணிக்கப்பட்டுள்ளது. இவ்யுத்தத்தினை இலங்கை அரசாங்கம் தமிழர்மேல் திணித்துள்ளது. அடக்கு முறைக்கும் இனவாதத்திற்கும் இடையில் சிக்குண்டு தவிக்கின்ற தமிழ் மக்கள் உணர்வுபெற்று போராடத்தொங்கியுள்ள இக்காலப்பகுதியில் தமிழரின் தேசியப்பற்றினை முற்றாக அழிப்பதுடன் கல்வியினையும் சீர்குலைக்கும் நோக்குடன் சிங்களஅரசு முனைப்பாக செயலாற்றிவருகிறது. இதனால்தான் தமிழ் மக்களின் கல்வியில் தரப்படுத்தலை அறிமுகப்படுத்தி தமிழரைப் பின்தள்ளி சிங்களவர்களிற்கு கல்விவசதி செய்து கொடுக்கின்றது.

தமிழீழத் தேசியப் போராட்டத்தினதும் தமிழீழத்தினதும் தேசியத் தலைவரான திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் கல்வியைப் போராட்டத்தின் கவசமாகவும் போராட்டத்தை கல்வியின் காப்பரணாகவும் பயன்படுத்தி கல்வியையும் போராட்டத்தினையும் முனைப்புடன் முன்னெடுத்துச் செல்கின்றார். கல்வி வளர்ச்சிக்காக கல்வி வளர்ச்சிக்கழகம், கல்விக் கழகம் எனக்கழகங்களை அமைத்து இலவசக் கல்வியினை மாணவர்களிற்கு வழங்கி கல்வியின் முன்னேற்றத்திற்குப் பெரும்பங்காற்றுகின்றார். அதேவேளை போராட்டத்திற்காக பாசறைகளில் போராளிகளைச் சேர்த்து தமிழீழப்




சி.பத்மகரன்
அ.இராதாகிருஷ்ணன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டத்தினை வலுப்படுத்தி தேசியவிடுதலைக்கும் வழிசமைத்துக் கொடுக்கின்றார். 'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' என்பதற்கமைய தேசியத் தலைவரின் இவ் ஏற்பாடுகளுக்கு அமைய மக்களும் தமது கல்வியினை வளம்படுத்துவதுடன் தேசவிடுதலை உணர்வு பெற்று சுதந்திரத்திற்காக போராடி இலங்கை அரசினையும் படைகளையும் திக்கு முக்காடவைத்து அரசினைப் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு உள்ளாக்கி வருகின்றார்.

இலங்கை அரசானது தமிழின அழிப்புடன் கல்விச் சீரழிவினையும் கலாச்சாரச் சீர்கேட்டினையும் ஏற்படுத்தி வருகின்றது. அதன் அடிப்படையில் பாடசாலைகள் மீது குண்டுகளைவீசி அழித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதனால் தமிழ் மாணவர்களின் சுதந்திரப் போராட்டத்தினை மேற்கொள்வதுடன் கல்வியிலும் பெரும் முன்னேற்றங்களை அடைந்து வருகின்றனர். தேசியப் பற்றுக் குறைவான ஓரளவு சமூக வாழக்கை நிலவுகின்ற இலங்கையின் ஏனையபிரதேசங்களின் கல்வி தமிழீழப் பிரதேசத்தினை விட பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. ஏனெனில் அவ் விடங்களில் சொகுசு வாழ்க்கை வாழ்ந்துவரும் மக்கள் கலாச்சார சீரழிவுகளுக்குள் சிக்குண்டு காணப் படுவதனால் கல்வியின் மகத்துவம் புரியாது வாழ்கின்றனர்.

**கல்வியின் மூலம் தேசியப்பற்றானது வளர வேண்டும். கல்வியும் தேசியப்பற்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து தமிழீழ விடுதலைக்கு வழிகாட்டவேண்டும்.**

கல்வியானது வெறுமனே ஏட்டுக் கல்வியாக இல்லாது மகாத்மா காந்தி கூறியதைப்போல் வாழக் கைக்குப் பயன்படும் கல்விஅறிவு வளரவேண்டும். அதாவது ஒரு நல்ல அந்தஸ்த்தினைப் பெறுவதுடன் சமூகத்தில் பிறரால் மதிக்கத் தக்கவகையில் வாழ்வதற்கும் தேசியப்பற்றினை ஊட்டுவதற்கும் இக் கல்வி பயன்படுத்தப்படல் வேண்டும். கல்வியின் மூலம் தேசியப்பற்றானது வளர வேண்டும். கல்வியும் தேசியப்பற்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து தமிழீழ விடுதலைக்கு வழிகாட்டவேண்டும். கல்வியறிவினைக்கொண்டு உலகளாவிய நாடுகளுடன் தமிழீழ தேசத்தின் நிலையினை வெளிப் படுத்துவதும் தேசியப் போராட்டத்தின் மூலம் அந்நியர் ஆதிக்கத்திலிருந்தும் விடுபட முற்படவேண்டும். மொத்தத்தில் கல்வியின் மூலம் தேசவிடுதலையை உருவாக்கி ஓர் கட்டுக்கோப்பான பொறுப்புடைய சமுதாயத்தை உருவாக்கவேண்டும்.

# சிங்கள அரசின் திட்டமிட்ட பொருண்மிய அழிப்புகள்



சிங்கள அரசு ஆக்கிரமித்த தமிழர் பகுதிகளில் திட்டமிட்ட முறையில் பொருண்மிய அழிவுகளை செய்துவருகின்றது. தமிழருக்கு பயன் தரும் இயற்கை வளங்களான தென்னை, பனை மரங்களை அழித்து வருவது அன்மையில் எடுக்கப்பட்ட சில புள்ளிவிபரங்ளின்படி பளை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடந்த மூன்று மாதங்களில் 20,000 இற்கும் மேற்பட்ட தென்னை, பனை மரங்கள் படையினரால் தறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் இது வரை 15,000 இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களும், 5000 இற்கும் மேற்பட்ட பனை மரங்களும் வெட்டித் தறிக்கப்பட்டு படையினரின் தேவைகளுக்காக கொண்டு செல்லப் பட்டுள்ளன. இவைகள் படையினருக்கு பதுங்கு குழிகள், காப்பரண்கள் ,பாதுகாப்பு வேலிகள் அமைப்பதற்கு பயன்படுத்தப் படுகின்றன.

சேரன்பற்று பகுதியில் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபைக்குச் சொந்தமான கரந்தாய் தோட்டத்திலிருந்த அதிகவிளைச் சலைத் தரக்கூடிய அனைத்து தென்னை மரங்களும் (சுமார் 250) கடந்த வாரம் தறிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்.மாவட்டத் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிகளில் பாதுகாப்புக் காரணங் களுக்காகத் தென்னை மரங்கள் படையி னரால் தறிக்கப்படுவது குறித்து பாலாலி இராணுவ தலைமையகத்திற்கும், கொழும் பிலுள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச் சபைக்கும் அறிவிக்கப்பட்ட போதிலும் எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தற்போது யாழ்.குடாவில் புலிகள் நடாத்தும் தொடர் தாக்குதலையடுத்து தென்னை மரங்களும், பனை மரங்களும் யாழ்.குடாவின் பல பகுதிகளிலும் தினமும் வேகவேகமாக தறிக்கப்பட்டுவருகிறது. குறுகிய காலத் தேவைக்காகவே இம்மரங்கள் வெட்டப் படுகின்றன. இது போன்ற நிகழ்வுகள் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து நடந்தவண்ணம் உள்ளன. இந்நிலை தொடருமானால் யாழ்.குடா தென்னை, பனை மரங்கள் எதுவுமற்ற ஒரு வனாந்தரப் பகுதியாக மிக விரைவில் மாறிவிடும் எனவும் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஹிட்லரின் எச்சம்

ஹிட்லர் இன்னும்
சாகவில்லை!
இதே! சிங்கள தேசத்தில்
சந்திரிகாவாய்!
கோயபல்ஸ் கூட
முனசிங்கேவாய்,
ரத்வத்தேயாய்
ஹிட்லரின் எச்சமாய்
சிங்கள பௌத்தம்.

நாஜிக்கள் கொலைக்கூடம்
ஈழத்தின் செம்மணி!
சிங்கள தேசத்தின்
சிறைக்கூடம் எல்லாம்!
தமிழனின் கறிவிக்கும்
கசாப்புக் கடை!
இங்கு புத்தனுக்கே
குண்டு வைத்து
புலிகள் என்பார்
சந்திரிகா...

உலகத்து மக்களையே
உண்மையென நம்பவைப்பார்!
மடுமாதா ஆலயத்தில்
எரிகுண்டை ஏவிவிட்டு
புலிகளின் குண்டென்று
பொய் சொல்லி புலம்பிடுவார்
மாமா சகுனியோடு
தந்திரமாய் சதிசெய்து
தனக்கே குண்டுவைத்து
தானே வென்றிடுவார்.
ஆனால் ஒன்று மட்டும்
நிச்சயம்...
மில்லரின் கடைசி மூச்சில்
தகர்ந்த நெல்லியடியாய்!
எம் தேசம் விடிவு
பெறும்.

நேற்று
முல்லைத்தீவாய்!
கிளிநொச்சியாய்!
வன்னியாய்!

இன்று
வடமராச்சியாய்!
ஆனையிறவாய்!

நாளை
பலாலியாய்!
திருகோணமலையாய்!
ஓயாத அலையடிக்கும்
அப்பொழுது எம்
மாவீரர் கல்லறையும்
சுதந்திரக் காற்றை
சுவாசிக்கும்...

ஆறுமுகம்
தமிழ்நாடு





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

# சந்தை நிலவரம்!

தலையர் கவிதைகள்

பட்சமுள்ள பெத்தாச்சிக்கு...
பேரம்பலம் எழுதுவது.

நாங்கள் இங்கு சுகம். நீங்கள் அங்கு சுகமா

போனமாதம் ரெலிபோனில் கதைத்ததால்
பில் ஏறிப்போனதில்
பரிமளத்திற்கு ஏத்தம்.
மற்றும்
மங்களமும் நீயும் சென்றிகள் தாண்டி...
சந்திக்கடைக்கு வாறதெண்டால் சிரமம்
தானே.
அதனால் கடதாசி போடுகிறேன்.
கடிதம் கண்டதும் உடன் பதில் போடவும்.

இடிந்த மதிலைத் திருத்திக் கட்டவும்
சரிந்த குசினியை நிமித்தி எடுக்கவும்
காசு காசெண்டு கனநாளாய்
கேட்டுவிட்டாய்
எண்டாலும் எனக்கிங்கு நிமிரேலாச்
சுமையணை.

என்ஒருவன் உழைப்பில் ஐந்து
உருப்படிகள்...
கட்டுபடியாகுதில்லை.
ஊர் விலைபோல் இங்கும்
சாமான் சக்கட்டின் விலை எகிறிச்
செல்லுதணை.

இங்கு...
சந்தையிலே ஆடுகிலோ முப்பது.
முண்டமாய் தொங்கும் முழு ஆடு
முன்னூறு.
பண்டி கிலோ இருபது.
உயிர்க்கோழி ஐம்பது.
மாடாக இருந்தால்...
நாலு கிலோ நூறு.

அரிசி பருப்பு மற்றும்
இலங்கை மரக்கறியின்
விலை சொல்லி வேலையில்லை.

பொய் சொல்லித் தப்பிக்க முனைவதாய்
எண்ணாதே...
இன்னும் நாலிடத்தில் விசாரி.

மற்றும்...
மங்களத்தின் சம்பந்தம்
சரிப்பட்டுவருகுதில்லை.
விசாவுள்ள மாப்பிள்ளை ஒரு இலட்சம்.
வேலையுடன் விசா உண்டாகில் ஒரு... இரண்டு
இலட்சம்.
கார்... வீடு... இன்னபிற வசதிகளும்
உண்டாயின்...
பல இலட்சம்.
வேலையில்லா விடுகாலி அரை இலட்சம்.
குடிதண்ணி உண்டாயின் தரும் விலையில்
அரைவாசி.
தாரம் இழந்ததெண்டால் அதில் சிறு தள்ளுபடி.

எண்டாலும் இங்கு ஒரு பையன் பார்த்துள்ளேன்.
ஆள் சற்று அமைதி.
குடிதண்ணி ஏதும் கிடையாது.
ஆர்ப்பாட்டம் இல்லை... ஸ்ரைல் பண்ணத்
தெரியாது.
உலகவிளக்கம் தெரியாத ஆள்போலும்.
சீதனமாய் ஏதும் வேண்டாமாம்.
மங்களத்தின் ஸ்ரைலுக்கு ஒத்துவருவது
சந்தேகம்.
எண்டாலும் போகப் போகச் சரிவரும்.
எதற்கும் மங்களத்தைக் கேட்டு பதில் போடவும்.
மங்களம் ஓமெண்டால்... ஆளை மடக்கலாம்.
சரியெண்டால்... வரும் ஆடி மாதம்
இந்தியாவில் வைத்து தாலியைக் கட்டலாம்.

உடன் பதில் போடவும்
**என்றும்**
**பாசமுள்ள பேரம்பலம்.**

**குறிப்பு:** விலைகள்
யாவையும் பிரெஞ்சுப்
பிராங்கில் தரப்பட்டுள்ளன.









www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கின்னிக் கொடுத்தாக் காணாது..... அள்ளிக் கொடுக்க வேணும்

நவம் கிழவரை ஆலமரத்தடியில் கண்டவுடன் திகைத்துப் போய் விட்டான்.

கிழவர் செவிவளைந்தானைத் தடவியபடி மரத்தடியில் உட்கார்ந்திருந்தார்.

என்னப்பு! கனடாவுக்குப் போன வேகத்திலை திரும்பீட்டியள்.

வயித்தெரிச்சலைக் கிளப்பாதையடா பொடி...... பதினைஞ்சு வரியத்துக்குப் பிறகு நான் பெத்த செல்வம் என்னைக் கூப்பிடுது எண்டு விழுந்தடிச்சுக் கொண்டு போனன். அவன்ர உருவமும் குணமும் மாறிப்போச்சுதடா.

கிழவரின் குரலில் ஆதங்கம் பொங்கியது. கிழவர் சொன்னதைக் கேட்க அவனால் நம்பமுடியவில்லை.

என்னப்பு சொல்லுறீங்கள்.... நீங்கள் எங்கள் வேலாயுதத்தைப் பற்றித்தானே கதைக்கிறீங்கள்?

அவன் ஒருத்தன் தானே எனக்குக் கொள்ளிவைக்கப் பிறந்தவன்... எத்தினை முருகன் கோயிலுக்கு அலையா அலைஞ்சு நேத்திவைச்சுப் பெத்து வேலாயுதம் எண்டு பேர் வைச்சன்.

நல்ல பேர்தானே அதுக்கேன் ஒரு மாதிரிக் கதைக்கிறீங்கள்? நவம் கிழவரைத் தூண்டினான்.

அதையேன் கேக்கிறாய்? எயாப் போட்டில வேலாயுதத்தைக் கண்டதும், வேலாயுதம் எப்பிடியிருக்கிறாய்... சுகமாய் இருக்கிறியாமோனை எண்டு கேட்டன். பாசத்தில கொஞ்சம் சத்தமாத்தான் கேட்டனான்.

ம்... சொல்லுங்கோவன்... நிப்பாட்டி நிப்பாட்டிச் சொல்ல என்னவோ ஏதோண்டு எனக்கிஞ்சை நெஞ்சிடிக்குது.

அவன் என்ன சொல்லுறான் தெரியுமே... தன்னை வேலாயுதம் எண்டு கூப்பிட்டு பரிசுகெடுக்கவேண்டாமாம்..... வேல்ஸ் எண்டு கூப்பிடட்டாம்.

ஏனப்பு பேரை இங்கிலிசிலை மாத்திப் போட்டானோ?

என்ன கண்றாவியோ தெரியேல்ல.... விசாரிச்சுப் பாத்ததில அவன் மட்டு மெண்டில்ல எங்கட சனம் கனக்க முழுக் காச்சட்டையை வெட்டி அரைக்காச் சட்டையாக்கினது மாதிரி பேரைச் சுருக்கிப் போட்டினம்... ஆனா கிழக்கு ஐரோப்பிய நாட்டில இருந்து வந்தவங்கள்சரி, இந்தியா, சீனா, வியட்நாம் இங்கேயிருந்தெல்லாம் வந்தவங்கடை பேருகளும் நீளம்தானாம். ஆனா.... அதுகளெல்லாம் தங்கட பேருகளை இப்படி வெட்டிக் கொத்தேல்ல. எங்கடையள்தான் பாவம்... ஒண்டு குறைஞ்சுபோய் நிண்டு ஆடுதுகள்.

என்னப்பு அந்த ஒண்டு?

ஆறாம் அறிவடா மோனை

இந்தப் பேர் மாத்திற வேலையை நீங்கள் இப்பதான் அறிஞ்சிருக்கிறியள்... என்னோட படிச்ச பொடியன் ரஞ்சன் எண்டு தெரியும் தானே?

ஓ! கிணத்தடி மணியத்தின்ர பொடி... அவனுக்கென்ன?

அவன் தன்ர மகளுக்கு கனேடி எண்டு பேர்வைச்சிருக்கிறான். மற்ற ஒருத்தன் நிரோசா எண்டு நடிகையின்ர பேர் வைச்சிருக்கிறான். ஏனடாப்பா நல்ல ஒரு தமிழ்ப் பெயரை மகளுக்கு வைச்சிருக்கலாமே எண்டு ரெலிபோனில கதைக்கேக்க கேட்டன். ஏன் இது வடிவான தமிழ்பேர்தானே எண்டு அவன் சொல்லுறான்.

கிழவர் கவலை தோய்ந்த முகத்தில் இகழ்ச்சிச் சிரிப்பொன்றை வழியவிட்டார்.

எங்கடையளுக்கு இந்தியர் வைக்கிற பேரெல்லாம் தமிழ்ப்பேர்தான் எண்டு ஒரு நினைப்பு... அது ஸ்ரயிலான தமிழ்ப் பெயராம்... தமிழ்த்தாய் கேட்டா கொடுப்புக்கை சிரிப்பா எண்டு நினைக்கிறன்...... இந்தியாவில இருக்கிற தமிழர் வைக்கிற பெயருகளிலை அனேகமானதுகள் ஆரியப் பெயருகள்... சுத்த தமிழ்ப் பெயருகளில்லை.

அது சரியப்பு! நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவேயில்லை... ஏன் இவ்வளவு கெதியாக் கனடாவிலை இருந்து வந்திட்டீங்கள்?

அது பெரிய கதையடா பெடி. கிழவர் சுருட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு, நீண்ட விளக்கத்திற்குத் தம்மை ஆயத்தம் செய்தார்.

இவன் வேலாயுதம் என்னை இத்தனை வரிசமா இங்க வரச்சொல்லிக் கூப்பிட்டும் நான் பிறந்த இந்த மண்ணையும் என்ர சனத்தையும் பிரிஞ்சு போறதே இல்லை எண்டு பிடிவாதமா இருந்தன்... அதோட என்ர வயசில எங்கட பெடியங்களுக்கு ஏதோ செய்யக் கூடிய உதவிகளையும் செய்து கொண்டிருந்தன். கொஞ்சக் காலமா வேலாயுதத்தைப் பார்க்கவேணும்போல இருந்தது... எட இவனும் ஆய்க்கினைப் படுத்திறான் போய்த்தான் பார்ப்பமே எண்டு தான் வெளிக்கிட்டன். அங்க போய்ப் பார்க்கத்தான் தெரிஞ்சுது இவன் என்னைப் போட்டிக்குத்தான் கூப்பிட்டவன் எண்டு.

போட்டியோ? கனடாவில ஒலிம்பிக் நடக்க இன்னும் கனகாலம் இருக்கே அப்பு.

நல்ல கதையடா நவம்.... இவன் வேலாயுதத்தின்ர மனுசியின்ர சினேகிதி தன்ரை மகளின்ர முதலாவது பிறந்த நாளுக்கு ஜேர்மனியில இருந்து தாயைக் கூப்பிட்டவளாம். அதோட பெரிய பிறந்தநாள் பார்ட்டி வைச்சு முந்நூறு பேருக்குமேலை சாப்பாடும் குடுத்தவளாம்.

ஓ! பார்ட்டிக்குப் பாட்டி ஜேர்மனில இருந்து வந்திருக்கிறா.

அதைப் பாத்திட்டு என்ர மருமகள் ஒரு சபதம் போட்டவளாம்.

என்னண்டு? நவத்திற்கு இருப்புக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளவில்லை.

அவ முந்நூறு பேருக்குச் சாப்பாடு குடுத்தா நான் ஐந்நூறு பேரைக் கூப்பிட்டுச் சாப்பாடு குடுப்பன். அவ தாயை ஜேர்மனில இருந்து இறக்கினா.... நான் மாமாவை இலங்கையில இருந்து இறக்கிக் காட்டுறன் எண்டு சபதம் எடுத்தவவாம்.

ஐயகோ! தமிழினமே! என்னப்பு உங்கட மருமகள் கனடாப் பாஞ்சாலியோ.

அதென்னடாது தம்பி... பிறந்த நாளா? வெளிச்சங்களென்ன? பாட்டுக்களென்ன... அவயின்ர ஆட்டங்களென்ன... ஒரு ஓரத்திலை உசார் ஏத்துறத்துக்காக ஆம்பிளையள் தண்ணி மாட்டுறதென்ன... பெரிய களியாட்டவிழாவடா தம்பி. நான் வாழ்க்கையிலை சினிமாப் படத்திலகூட அப்பிடி ஒரு காட்சியைக் காணேல்லை.

அதுக்கென்னப்பு.... அவை நல்லா உழைக்கினம். தங்கட காசில செலவழிக்கினம்.

நீ சொல்லுறது உண்மைதானடாப்பா.

கிழவர் நிமிர்ந்து உட்கார்ந்து அடுத்த சுருட்டுக்காக இடுப்பைத் தடவினார். அதிகம் உணர்ச்சி வசப்பட்டு விட்டால் கிழவர் வழக்கமான எண்ணிக்கையைத் தாண்டி புகைவிடத் தொடங்கிவிடுவார். சுருட்டை எடுத்துக் கையில் வைத்து அதை ஆசையோடு பார்த்த கிழவர் சொன்னார்.

அங்கை நான் இந்தச் சுருட்டைக் கூடப்பத்த வைக்க முடியேல்ல... பிறந்த நாள் பார்ட்டி நடந்து கொண்டிருக்கேக்கை குளிருதுஎண்டு ஒரு கனகலிங்கம் சுருட்டை எடுத்துப் பத்தவைச்சு இழுத்துப் புகைவிட்டன்... அவ்வளவுதான் வேலாயுதம் கேக்கை மனிசியின்ர வாய்க்குள்ளை ஒரு இடி இடிச்சுப்போட்டு கிடுகிடெண்டு என்னட்ட வந்து அப்பு உனக்குச் சுருட்டுப் பத்தவைக்க நல்ல இடம் கிடைச்சுது போ எண்டு பேசிப் போட்டான்... அதைப் பாத்துக் கொண்டிருந்த இன்னொரு கிழவர், அவர் கொஞ்ச நாள் முதல் கனடாவுக்குப் போய்ச் சேர்ந்தவர்... ஒரு புதுவிதமான சுருட்டைத்தந்து இதைப்பத்துங்கோ ஐயா எண்டு சொன்னார். அதுகின்ர பெயர் ஏதோ கஸ்ரோ சிகாரோ என்னவோ

அதுகும் மணக்கும்தானே அப்பு... அது கிடக்கட்டும் வேற என்ன அப்பு பார்ட்டியில நடந்தது எனக்கும் கொஞ்சம் சொல்லுங்கோவன்.

நான் பார்ட்டி நடக்கிற மண்டபத்திலை ஒரு மூலைக்கை இருந்து கொண்டு யோசிச்சன். இங்கை இவ்வளவு காசு செலவழிச்சுப் பிறந்தநாள் கொண்டாட்டம் நடக்குது. இஞ்சை பொடியள் கரும்புலியளா பிறந்தநாளை மறந்து, இறக்கிற நாளுக்குத் தேதி வைச்சுக் கொண்டிருக்கிறாங்கள்... அதுகளை நினைக்க... கிழவரின் குரல் தளுதளுத்தது.

உண்மைதானப்பு... அதுக்காக எல்லாரும் கரும்புலியளாப் போறதோ?

நான் அப்பிடிச் சொல்ல வரேல்லை... இது ஒரு நீண்ட காலப் போராட்டம் கண்டியோ... பிறந்தநாள் கொண்டாடுறதோ அல்லது திருமணவிழா கொண்டாடுறதோ நான் தவறெண்டு சொல்ல வரேல்லை... ஆனா... இப்படியான ஒரு போராட்டம் நடந்து மக்களெல்லாம் பசி பட்டினியிலை அலைஞ்சு திரியேக்க இஞ்சத்தைக் கொண்டாட்டங்களைக் கொஞ்சம் ஆடம்பரங்களைச் சுருக்கிச் செய்தா என்னனண்டுதான் கேக்கிறன். தங்களுக்காகச் சாகிற பெடிபெட்டையளை நினைச்செண்டாலும் இதுகளைக் குறைக்கக் கூடாதே... சொல்ல மறந்துபோனன் பிறந்தநாளுக்கு வந்த பரிசுப்பொருளுகளை நீ வாழ்க்கையிலை கண்டிருக்கமாட்டாய்... அஞ்சு வீட்டுப் பிறந்தநாள் காசே காணுமடா ஆனையிறவை அடிக்க... பத்துவீட்டுப் பிறந்தநாள் காசு காணுமடா பத்துச் சனங்களின்ரை உயிரைக்காக்க... கிழவர் படபடவெனப் பொரிந்தார்.

"அப்ப அப்பு எல்லாச் சனமும் நாட்டை மறந்து இப்பிடித்தான் சீவிக்குதுகளோ?"

"சீச்சீ! நான் அப்பிடிச் சொல்லமாட்டன். ஒரு பகுதி சனம் இப்பிடியும்வாழுது. ஒரு பகுதி சனம் செலவைக் குறைச்சு தங்களாலை இயண்டதை நாட்டுக்குக் குடுக்குது... சில சனங்கள் கிள்ளிக் குடுக்கேல்லையடாம்பி...! அள்ளிக்குடுக்குதுகள்... அதையும் சொல்லத்தான் வேணும்"

"பேந்தென்ன அப்பு... அப்ப கெதியாத் தமிழீழந்தான்... அப்படியெண்டா அப்பு வெளிநாட்டுச் சனங்கள் ஆர் மூலம் எப்பிடி உதவி செய்யுதுகள்?"

அப்பு ஏதோ சொல்ல வாயெடுத்தார். அதற்குள் செவிவளைந்தான் அப்புவைச் சுற்றிச் சுற்றி முனகியபடி வந்தது. சூரியன் தலைக்குமேலால் வந்துவிட்டதை யுணர்ந்த செவிவளைந்தான் சாப்பாட்டுக்குத்தான் அந்த வட்டம் போடுகிறது என்பதைக் கிழவர் அறியாரா என்ன...? "எடே நவம்! சாப்பாட்டுக்கு நேரமாயிட்டுது. மகள் பேசப்போறாள். நான் போய்ட்டு வாறன்... சொன்னாப்போலை நீ ஏதோ கேட்டனீ என்ன... ஆ... வெளிநாட்டுச் சனங்கள் ஆர் மூலமா எப்பிடி எங்கடை சனத்துக்கு உதவி செய்யுதுகள்எண்டு கேட்டனீயெல்லே...? அதை நான் அடுத்த முறை உன்னைச் சந்திக்கேக்கை சொல்லுறன்... விலாவாரியாச் சொல்ல நிறையக் கிடக்குது. இப்ப நேரம் போட்டுது. ஆனால்... ஒண்டுமட்டும் இப்ப சொல்லுறன்... உலகத்திலை எல்லா நாட்டிலயும் இருக்கிற எங்கடை சனங்களெல்லாம் ஒரு அணியாத் திரளவேணும். கைகோர்த்து நிண்டு எங்கடை சனத்துக்காகப் பாடுபட வேணும்... தம்பிக்கு... தமிழீழத்துக்கு கிள்ளிக் குடுக்காம எல்லாரும் அள்ளிக்குடுக்க வேணும்... அப்பிடிச்செய்தா... உவள் சந்திரிகா என்ன தந்திரமந்திரம் போட்டாலும் எங்களுக்குக் கெதியா எங்கடை மண்கிடைக்கும் அதை அவவாலை எந்த ஏவுகணையாலையும் நிப்பாட்டேலாது கண்டியோ" உரத்த குரலில் கூறியபடி அப்பு நடையைக் கட்டினார். செவிவளைந்தானும் நிழலாகத் தொடர்ந்தது.



-ஆரமரத்தடி அப்பு-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஹூ... ஹூ... ஹூ... வெண்ணிற நுரையைத் தள்ளியபடி பேரிரைச்சலுடன் கடல் அலைகள் பொங்கிப் பிரவாகித்துக்கொண்டிருந்தன.

கடற்கரையோரமெங்கும் சனக்கூட்டம் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது.

"என்ன சுப்பர்? இண்டைக்கு ஒரே கலகலப்பும், சனக்கூட்டமுமாக இருக்குது நாங்களும் புறப்படுற நேரமாச்சுது.

அந்த வெண்மணற்பரப்பின் அழகில் காற்று வாங்கிக்கொண்டிருந்த பல அறுபதுகளின் வாழ்க்கையான இடம்தான் அந்தக்கடற்கரை. அவர்களில் ஒருவராக இருந்து காற்றுவாங்கிக்கொண்டிருந்த வடிவேலுக்கு வழக்கத்திற்கு மாறாகத் தெரிந்த அந்தக்காட்சி வியப்பைத்தான்கொடுத்தது.

அந்தக் கடலோரக் கிராமத்தின் வீடுகள் ஒன்றோடு ஒன்று நெருக்கமாகவும், முற்றங்கள் இன்றியும் இருப்பதால் வீடுகளுக்குள் நல்லசுத்தமான காற்றைப் பெற்றுக்கொள்வதே அந்த மக்களுக்கு ஒரு போராட்டம்தான்!

வெயிலின் அகோரத்தைத் தாங்க முடியாத பகல் சூரியன் கீழ்வானில் குதிக்கும் நேரம் பார்த்து அந்தக்கடற்கரையில் கூடிவிடுவார்கள்.

ஆறு ஏழு பேர்கொண்ட குழுக்களாக அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கூடியிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஐந்து மணியளவில் கூடத்தொடங்கினால் இரவு எட்டு மணிவரை ஒரேகதை அளப்பாகத்தான் இருக்கும். அந்தச் சங்கப்பலகையில் இருந்து ஊர்க்கதைகளைக் கதைப்பதென்றால் யாருக்குத்தான் சலிப்பு ஏற்படும்? மற்றவர்களுடைய வீட்டு விவகாரங்களைக் கதைப்பது என்றால் நேரம் போவதுகூடத் தெரியாமல் கதைத்துக்கொண்டே இருப்பதால் அவர்களுக்கு ஒரு அலாதியான சந்தோஷம்.

வழமையாக முதியவர்களும் ஒருசில இளவட்டங்களுமே நிரம்பியிருக்கின்ற அந்தக் கடற்கரையில் அன்று அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பெண்கள் கூட்டம் கூட்டமாக நின்று ஏதோவெல்லாம் கதைத்துக்கொண்டிருந்தனர்.

"சுப்பர் என்ன புதினம் எண்டு எப்பன்போய் விசாரிச்சுக்கொண்டுவரட்டே?

ஓம் வடிவேல் எழும்புங்கோ. அதிலை போனால்தான் என்னவிசயமெண்டு விளங்கும்.

வேட்டியில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிக்கொண்டே ஒவ்வொருவராக எழுந்து நடக்கத்தொடங்கினர்.

கடற்கரையுடன் இருந்த அந்த உடைந்த கட்டிடத்திற்கு முன்னால் வந்ததும்தான் அவர்களுக்கும் விசயம் புரியத்தொடங்கியது.

கடற்கரையோடு செல்லும் ஒழுங்கையில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக இரண்டு உழவு இயந்திரங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

சுப்பிரமணியம் சிறிது சீரியசாக முகத்தை வைத்துக்கொண்டு வடிவேலை நெருங்கி இரகசியமாக மற்றவர்களுக்குக் கேட்காத வகையில் குசுகுசுத்ததும் வடிவேலர் வாய்விட்டே சிரித்துவிட்டார்.

"சுப்பர்! ஏன் காணும் இப்பிடிப் பயந்து நடுங்கி, விழுங்கி விழுங்கி கதைக்கிறீர்! பொடியள் ஏதோ சண்டைக்கோ அல்லது ஏதோ ஒரு அலுவலுக்கோ போகப்போறாங்கபோல. அதைச் சொல்லுறதுக்கு ஏன் இப்பிடிப் பயந்து நடுங்கிறீர். உரத்த குரலில் சிரித்துக்கொண்டே கூறினார் வடிவேல்.

"ஐயா! என்ன உதிலை நிக்கிறியள்? இன்னும் வீட்டுக்குப் போகவில்லைப் போல"

அவர்களுக்கு முன்னால் அங்குவந்து நின்ற அந்தப் போராளிகளில் ஒருவன் சிரித்துக்கொண்டே கேட்டான்.

ஆர்தம்பி! வினோத்தோடா?

அருகில் வந்துநின்ற அந்த இளைஞனின் கைகளைப் பற்றிப்பிடித்தபடியே ஆதங்கத்துடன் கேட்ட வடிவேல் சுற்றிவர நின்ற ஒவ்வொருவரையும் பார்த்துச் சிரித்துக்கொண்டார்.

அவனைத் தொடர்ந்து காந்தரூபன்... கொலின்ஸ்... டேவிட்... என்று ஒவ்வொருவராக வந்து நின்றனர்.

தம்பி!... என்ன இப்படித் திடீர்ப் பயணம்...?

இந்த வார்த்தைகளைக் கேட்க நினைத்த வடிவேல் வாய்மூடி மௌனித்தார்.

"ஐயா! நாங்கள் ஒரு அலுவலாப் போறம். பிறகு வந்து சந்திக்கிறம் வீட்டிலை, அன்ரியிட்டைச் சொல்லுங்கோ".

வடிவேலரின் கையைப் பிடித்துக் கூறிவிட்டு, முன்னே நடந்த வினோத்தைத் தொடர்ந்து காந்தரூபன், கொலின்ஸ்



# வானம் சிவக்கும்

சிறுகதை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருவரும் போய்க்கொண்டிருந்தனர். அவர்களுக்கு முன்னே பாய்ந்து சென்ற டேவிட் கடலில் நிறுத்தி வைத்திருந்த ஒரு படகில்போய் ஏறிக்கொண்டான். அதனைத் தொடர்ந்து அருகில் இருந்த படகில் ஏறுவதற்காக வினோத், காந்த ரூபன், கொலின்ஸ் மூவரும் போய்க் கொண்டிருந்தனர். கன்னங்கரேலென்று கடல்முதலைபோல் இருந்த அந்தப் படகில் ஏறுவதற்குமுன் வினோத் அங்கே நின்றவர்களுக்கு இனிப்புக்களை வழங் கினான். வழக்கத்திற்கு மாறாக அன்று அவனுடைய முகம் பிரகாசமாக இருந் தது.

"கடவுளே!... முருகா! இந்தப் பொடியள் சுகமே திருப்பி வர வேணும்..." வடிவேலுவின் இதயம் மானசீகமாகத் துதித்துக்கொண் டிருந்தது.

"சே! இந்தப் பொடியள் இண்டைக்கும் அப்படித் துணிச்ச லோடை போராடுறதாலைதான் நாங்க ளெல்லாம் கோயில், திருவிழாக்கள், கலியாணவீடுகள் களியாட்டம் என்று எல்லாம் சந்தோசமாகக் கொண்டா டுறம்... ஏன்... இந்த நாட்டிலைகூட இப்ப தமிழன் என்று தலை நிமிர்ந்து நிக்கி றதுக்கு இந்தப் பொடியள்தானே கார ணம். நாத்தளதளக்கக் கூறிய சுப்பிர மணியத்தின் கண்கள் குளமாகிக் கொண்டு வந்தன.



கடலைக் கிழிப்பதுபோல் பெருத்த இரைச்சலுடன் டேவிட்டின் படகு முன்னே செல்ல அதற்குப் பின்னே வினோத்தின் படகு பாய்ந்து சென்றது.

கடற்கரையில் இருந்து திரும்பிய கூட்டத்தின் மத்தியில் போய்க்கொண்டி ருந்த இளவட்டங்களின் உள்ளங்கள் ஆர்ப்பரித்தன.

"என்ன வடிவேல்? கற்பனையில் உங்களையே மறந்துபோய் நிற்கி றியள்... சனம் திரும்பிக்கொண்டிருக் குதுகள் நாங்களும் இனிப்போவம்..."

முன்னிருட்டில் படகுகள் போவது தெரியாவிட்டாலும் கடலில் பிரவா கித்துக் கொண்டிருந்த வெண்ணுரை களின் பாய்ச்சலைக்கொண்டு படகுகள் செல்லும் திசையையே பார்த்தபடி நின்ற வடிவேலின் உணர்வுகள் சுப்பிர மணியத்தின் அதட்டலினால் பழைய நிலைக்குத் திரும்பியது.

"சுப்பர்... இப்பத்தானை எட்டுமணி... அங்கை கடற்கரை நீளத்துக்குப் பாரு ங்கோ, அங்குமிங்குமாக சனம் நின்று வேடிக்கை பார்க்குதுகள், என்ன அவ சரப்படுறியள்? இதிலை ஒட்டிலை இருங்கோ... என்னண்டு பார்ப்பம்..."

வழமையாகவே பயத்தினால் நடுங் கிச் சாகிற சுப்பிரமணியத்தின்ரை கையைப்பிடித்துக் கூட்டிக்கொண்டு போய், அருகில் உள்ள சீமெந்துக்கட்டு மேடையில் இருக்கவைத்தார்.

அவர்கள் இருந்த மேடையில் இருந்தும் சற்றுத் தூரத்தில் கடற்கரை யோரமாக உலாவியபடி ஒரு போராளி கையில் 'வாக்கி டோக்கி'யுடன் நின் றான். அவன் கடலையே வெறித்துப் பார்த்தபடியே நின்றான்.

"வினோத்!... வினோத்!..." அந்தப் போராளியின் வாக்கிடோக்கியில் தொடர்ந்து ஒலித்துக்கொண்டிருந்த குரல் திடீரென்று நின்றுவிட்டது. அந்தத் தொலைத்தொடர்பு சாதனத்தில் இருந் தும் எழுந்த இரைச்சல், அவனை நிலைகுலைய வைத்தது.

"வினோத்...!" அங்கே வோக்கியுடன் நின்ற அந்தப் போராளியின் குரல் காதைக் கிழித்தது. அந்த ஒரு வினாடி யினுள் கடலில் பெரும் தீப்பந்தம் போன்ற ஒளிக்கற்றைகள் சுவாலை விட்டு ஒளிர்ந்துகொண்டிருந்தது.

"சரி!... கடலிலை பெரிய அட்டகாசம்செய்த நேவி இண்டைக்குச் சரி..."

'விறுவிறு' என்று திரும்பிப்கொண்டி ருந்தவர்களின் உள்ளங்கள் குதூக லித்துக் கொண்டிருந்தன.

"எங்கடை பொடியங்கள் இப்ப திரும்பி வந்தவுடனை அதுகளைக் கட்டிப்பிடித்துக் கூத்தாடவேணும்" வடி வேலின் மனம் அவர்களின் வரவுக்காக அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

"எடதம்பி! மோனே! நேவி சரி யெண்டு நினைக்கிறன்... எங்கடை பொடியள் நல்ல செமத்தையாப் போட் டிருக்கிறாங்கள்போல தம்பி, அதுகள் இப்ப உதிலைதானை வந்து இறங்கு வினம்...!

கரையில் வோக்கியுடன் நின்ற அந்தப் போராளியின் முன்னால் சென்று மூச்சுவிடாமல் இரைந்துகொண்டிருந்த வடிவேலை அந்தப் போராளி ஒரு மாதிரியாகப் பார்த்தான்.

"அவையள் இனி வரமாட்டினம்..." அவன் நறுக்கென்று கூறிவிட்டுத் தலையைத் தொங்கப்போட்டபடி போய்க்கொண்டிருந்தான்.

"தம்பி!... என்னடாப்பு சொல்லு றாய்... அதுகள் வராதுகளோ...? ஒண் டுமா விளங்கேல்லை..." வடிவேலின் உள்ளம் குமுறிக்கொண்டிருந்தது... அடக்க முடியாத ஒரு ஆவேசத்தில் அந்த இளைஞனைப் பிடித்து உலுப் பினார்...

"ஐயா...! வினோத், காந்தரூபன், கொலின்ஸ் மூன்று பேரும் கடற்படைக் கட்டளைக்கப்பலைத் தாக்கி அழித்து வீரச்சாவடைந்துவிட்டினம்..."

அந்தப் போராளி தன்னுள் எழுந்த துயரத்தை அடக்கியபடியே கூறிவிட்டு சைக்கிளில் ஏறிச்சென்றான்.

"அடக்கடவுளே...! அந்தப்பிள்ளை களின் அழிவிலா நாங்கள் கைதட்டி ஆரவாரம் செய்து சந்தோசப்பட்டோம்...

வடிவேலின் உதடுகள் வாய்விட்டு கதறிக்கொண்டிருந்தன!

**-வல்வை ஆனந்தன்-**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காலமகளின் நினைவாக நாலுவரி

காலச்சக்கரத்துக்கு கடுகதிவேக
செட்டை கட்டிப் பறக்கிறது.
நின்று நிதானிக்க நேரமில்லை
போகும் வழியெங்கும் சிறகுதிர்த்துப் போகிறது.
நினைவுச்சிறகு
எடுத்து முகர்ந்தால்
காலவாசம் காற்றில் பரவுகிறது.
இந்தோ ஒரு இறகு என்கையில்
வாசம் வருகிறது
நேற்றெம் முற்றத்தில் பூவாய் விரிந்த அதிசயம்
பூபதி அம்மா.
மாமாங்கப் பிள்ளையின் தேரோடும் வீதியில்
குடைவிரித்த குருந்தமர நிழலில்
பசிநெருப்புச் சுமந்த பத்தினியம்மா
தன் உயிர்துாக்கிப் பறந்தும் பன்னிரெண்டாண்டாச்சா?
காலச்சக்கரத்துக்கு கடுகதிவேகம்
நின்று நிதானிக்க நேரமில்லை.
அப்போ அகலவிரித்த கால்களால்
பரவியிருந்தது இருள்.
பால்வார்க்கும் என நம்பியகைகள்
கழுத்தை நெரிக்கத் தொடங்கியகாலம்.
விடிவுக்கான அசுமாத்தம் ஏதுமின்றி
அமாவாசையின் ஆட்சி
சாமப்பொழுதில் பேய்கள் கூழுண்டன.
நரபலிக்காரரின் உடுக்கோசையும்
பிள்ளை பிடிகாரரின் காலடிச்சத்தமுமே
ஊர்வீதிகள் உறிஞ்சின.
“பூமாலைக்காரரின்” அரிசிப்பொதியில்
கைச்சிறங்கையள்ளி
எங்கள் வாய்க்கரிசிக்கு வறுத்தெடுத்தகாலம்
இருள்
இருட்டுக்கையாயின எங்கள் வீடும் வளவும்.
காற்றும் அசையவில்லை.
வெளியே எங்கும் வெக்கை
அடங்கிக் கிடந்தன அனைத்தும்
உள்ளே கனன்ற உள்ளத்துடனே எல்லோரும் எனினும்
கேட்க நாதியற்றுக் கிடந்தது தாய்மடி.
மதுரையில் நீதிகேட்டாள் பெண்ணொருத்தி
அவள் கண்ணகி
முடிந்த கதைக்கே முலைதிருகி எறிந்து தீமூட்டினாள்
மதுரை மண்மேடானது.
பின்னாளில் தெய்வமானாள்
இன்று மூலஸ்தானத்தில் சிலையாகிக் கிடக்கிறாள்.
அப்படியல்ல பூபதிஅம்மா.
தனக்கே தீமூட்டினாள்.
பசித்தீ.
ஊனுருக உருக உள்ளே மெழுகாய் உருகினாள்.
பட்டினியை மடியிலே கட்டுவது பாரதப்போரிலும் பெரிது.
ஊருக்காக தன்னை உருக்குவது.
ஞானிகளுக்கே கைவரும்.
பூபதிஅம்மா போட்ட வியூகம் பெரியது.
உடைத்து யாரும் உட்புகமுடியாதது.
நாகாஸ்த்திரமே கண்டஞ்சி நடுங்கியது.


காற்றுக்கு வளையாத கருங்காலிகள் கூட
ஆணிவேர் அறுபடுமோ என்றஞ்சி
கிளைகளைத் தறிக்க ஒப்புக்கொண்டன.
பூபதி புழுதிமகள்தானெனினும்
குருந்தமரநிழலில் கடுந்தவமியற்றினாள்.
காந்திதேசம் படுதாபோர்த்திக் கொண்டு பார்க்கவந்தது.
சீமாட்டி தீயாய் இருந்தாள்
பக்கத்தில் நெருங்க முடியாதவாறு பசித்தீ
பற்றியிருந்தது.
என்னை,
என் உறவை,
என் ஊரை,
என் தேசத்தை தீர்மானிக்க நீயார்?
அட்டதிக்கும் எதிரொலித்தது அவள் குரல்.
தர்மம் தேவதை வடிவில்
தேவதை பூபதி வடிவில்
தோற்கவில்லை தர்மம்
உடலுக்கே அழிவு தர்மத்துக்கல்ல என
விழிமூடியது வீரம்.
தோற்றுப் போனது இமயநாடு.
தாயின் நாமமே எமது தாயகநாமம்
இது பூபதிதேசம்.
காலச்சக்கரத்துக்கு கடுகதி வேகம்
போகும் வழியெங்கும் சிறகுதிர்த்துப் போகிறது.
நினைவுச்சிறகு.
காலவாசம் காற்றில் பரவுகிறது.
இதோ ஒரு இறகு என்கையில்
வாசம் வருகிறது.
அது... பூபதி அம்மா.

– புதுவை இரத்தினதுரை –



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# புத்த நெறியைக் கைவிட்டு யுத்த (வெ)நெறியை நாடும் பௌத்த பிக்குகள்!



போர் வேண்டும் உடன்பாடு வேண்டாம்!
நோர்வே மத்தியஸ்தம் வேண்டாம்!
தமிழீழ விடுதலைப்புலிகளை அழி!

இக்கோசங்கள் சிங்கள காடையர்களினாலோ, சிங்கள இனவாதிகளினாலோ எழுப்பப் பட்டவை அல்ல. கொல்லாமையை போதித்த புத்தரின் வழியைப் பின்பற்றும் பிக்குமாரினாலேயே ஏப்பிரல் 6ம் திகதி இடம்பெற்ற நோர்வே மத்தியஸ்தத்திற்கு எதிரான ஆர்பாட்ட ஊர்வலத்தின் போது மேற்படி கோசங்கள் பிக்குமாரினால் எழுப்பப்பட்டன.

கடந்த 6ம் திகதி நடைபெற்ற ஆர்பாட்ட ஊர்வலத்தின் போது நல்லெண்ண நோக்கில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட நோர்வே நாட்டின் தேசியக்கொடியானது நடு வீதியில் வைத்து பிக்குமாரினால் கொழுத்தப்பட்டது. இதன் மூலம் சிங்கள பௌத்த பேரினவாத முகத்தின் கோர முகத்தை வெளியுலகிற்கு காட்டி பௌத்த மதத்திற்கே களங்கம் ஏற்படுத்தியுள்ளனர். இது மாத்திரமன்றி பி.பி.சி சிங்கள சேவையின் செய்தியாளரும் இச் சம்பவத்தில் பௌத்த பிக்குமாராலும் அவர்களது ஆதரவாளர்களாலும் தாக்கப்பட்டுள்ளார். அறத்தைப் போதித்த புத்தர் இன்றிருந்திருந்தால் தமது சீடர்களின் போக்கையிட்டு அழுதே இருப்பார்.

# ஐ.நா. மனிதர் உரிமை ஆணைக்குழுவில் தடுமாறும் சிறீலங்காப் பிரதிநிதி!

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி தொட்டு நடைபெற்று வரும் ஐ.நா. மனிதர் உரிமை ஆணைக்குழுவின் 56வது கூட்டத்தொடரில், சிறீலங்கா அரசின் தமிழீழ மக்கள் மீதான மனிதர் உரிமைமீறல்கள் பற்றி பதில் கூறமுடியாது தடுமாறுகிறார் சிறீலங்காவின் பிரதிநிதி திரு. பள்ளியகாரா!

இவ் ஆணைக்குழு தொடங்கிய நாள் தொட்டு இன்றுவரை அரச சார்பற்ற நிறுவனங்களான சர்வதேச சமாதான சபை,சர்வ சமய நம்பிக்கை நிறுவனம், சர்வதேச கல்வி நிறுவனம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிரான சமுதாயம், விடுதலைபோன்று பல அமைப்புக்களினால் தொடுக்கப்பட்ட கேள்விக்கணைக்கு பதில் கூறமுடியாது தடுமாறுகிறது சிறீலங்கா அரசு.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக தமிழீழ மக்கள் மீது சிறீலங்கா அரசினால் இழைக்கப்படும் மனிதர் உரிமை மீறல்களான கைது, சித்திரவதை, பாலியல் வன்முறை, கொலை போன்றவற்றுடன் தமிழீழ மக்கள் மீது கடந்த பத்து ஆண்டுகளாக திணிக்கப்பட்டுள்ள பொருளாதார தடை தமிழர் தாயாக பூமியில் சிங்கள குடியேற்றம் ஆகியவற்றை ஆதாரங்களுடன் அறிக்கையை தமிழர் மனிதர் உரிமைகள் மையம் இவ் ஆணைக்குழுவுக்கு சமர்பித்திருந்தது.

மாமனிதர் திரு. குமார் பொன்னம்பலத்தின் கொலை பற்றி மூடிமறைக்க முயன்ற சிறீலங்கா அரசு, இவ் ஆணைக்குழுவில் திரு. குமார் பொன்னம்பலத்தின் மறைவை, ஜனநாயக நீரோட்டத்திற்கு ஏற்பட்டபெரும் இழப்பு என்று முதலைக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியுள்ளார் சிறீலங்கா பிரதிநிதி.

ஐ.நா. புள்ளிவிபரங்களின்படி, இன்னும் சிறீலங்கா அரசு "ஆட்கள் காணாமல்" போவதில் இரண்டாவது இடத்தை வகிப்பது மட்டுமல்லாது, ஐ.நா. ஆட்கள் காணாமல் போவதை விசாரிக்கும் குழு மூன்று தடவை சிறீலங்காவுக்கு விஜயம் செய்துள்ளது. இக்குழு "மூன்று தடவை" விஜயம் செய்த ஒரேஒரு நாடு சிறீலங்கா என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்படியாக சிறீலங்காவில் பல மனிதர் உரிமை மீறல்களுக்கு ஐ.நா. வினுள் பதில்சொல்ல முடியாமல் தடுமாறும் அதேவேளை, ஜெனிவாவில் ஐ.நா.விற்கு வெளியில் தமிழ் மக்களினால் நடாத்தப்பட்ட மாபெரும் ஊர்வலமும் கூட்டமும் சிறீலங்கா அரசை தலைகுனிய வைத்துள்ளது. ஐரோப்பாவில் சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க், இங்கிலாந்து போன்று பலநாடுகளில் வாழும் தமிழீழ மக்கள் ஒன்று கூடி ஜெனிவாவில் ஐ.நா. முன்பு நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இவ் மாபெரும் ஊர்வலத்தில் கலந்துகொண்ட பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தமிழீழ மக்கள் "தமிழீழத்திற்கு ஆன" அங்கீகாரத்தை ஐ.நா.விடம் வேண்டினார்கள். இப்படியாக ஐ.நா.வினுள்ளும், ஐ.நா.விற்கு வெளியிலும் தமக்கு ஏற்பட்ட அவமானத்தை தாங்கமுடியாத சிறீலங்கா ஆரசு, ஐ.நா.மனிதர் உரிமை ஆணைக் குழுவிடம், தமிழீழ மக்கள் ஐ.நா.வுள் தமது மனிதர் உரிமை மிறல் பற்றி பிரச்சாரம் செய்யவோ, அறிக்கைகள் வெளியிடவோ அனுமதிக்க கூடாது என வேண்டிநின்றார்.

சிறீலங்கா பிரதிநிதி, தனது அறிக்கையில் தமிழர் மனித உரிமை மையத்தை கடுமையாக கண்டித்தது மட்டுமல்லாது ஐ.நா வினுள்ளும் தமிழீழ மக்களின் பேச்சு சுதந்திரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முயல்கிறார். இவ்விடயம் மற்றைய அரச பிரதிநிதிகளை ஐ.நா வினுள் திகில் அடையவைத்துள்ளது.

-சுட்டி-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்பகுதியில் தலைகாட்டத் தொடங்கும் சிங்கள இனவாதம்



இது வரைகாலமும் சிங்கள அரசியல்வாதிகளின் தேர்தல் இலாபங்களுக்காகவும் அரசியல் அபிலாசைகளுக்காவும் பயன்படுத்தப்பட்டுவந்த பேரினவாதக் கருத்துக்கள், இன்று சிங்கள அடித்தட்டு மக்களின் உள்ளம் வரை ஆழமாக வேரூன்றியுள்ளன.

தென்னிலங்கையில் சிங்கள மக்களால் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைச் சம்பவங்கள் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. சிறீலங்காவின் தலைநகரான கொழும்பில் தமிழ்மாணவர்கள் கல்விகற்கச் செல்கின்ற வேளையில் தாக்கப்படுகின்றனர். சக சிங்கள மாணவர்களால் மனரீதியான அவஸ்தைக்குள்ளாகின்றனர். இதுதவிர மலையக வாழ் தமிழ் இளைஞர் யுவதிகள் சிங்கள இனவாதிகளால் தாக்கப்பட்டு வரும் சம்பவங்களும் அதிகரித்துக் கொண்டே போகின்றன.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் கல்விகற்றுவரும் மகாலிங்கம் கோபிகிருஸ்ணா என்ற தமிழ் மாணவன் நீர்கொழும்பிலிருந்து தினமும் தனது கல்லூரிக்குத் தொடருந்து மூலம் சென்று வருவது வழக்கம். கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி 7.30 மணிக்கு பாணந்துறை செல்லும் தொடருந்தில் பம்பலப்பிட்டிக்குப் பயணமானார். தனது புத்தகப்பையை மேலுள்ள பொதிதாங்கியில் வைத்துவிட்டு, தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் அதனை எடுக்கும் அவசரத்தில் அவரது பையினுள் இருந்த பாடநூல்கள் கீழே விழுந்துவிட்டன. அந்நூல்களனைத்தும் தமிழ் மொழியில் இருந்த காரணத்தால், சிங்களப் பயணிகளுக்கு இனரோசம் நுனி மூக்கில் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. ஏதுமறியா அப்பாவித் தமிழ் மாணவனை சிங்களவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு நையப்புடைத்திருக்கிறார்கள்.வெளியே இதைச் சொல்ல வேண்டாம் என்றும்மிரட்டி உள்ளார்கள். சிதறிக்கிடந்த புத்தகங்களை எடுத்துக்கொண்டு பம்பலப்பிட்டியில் இறங்க முற்பட்டபோது, அவரை இறங்கவிடாமல் தடுத்துள்ளார்கள். தொடருந்து புறப்பட்டபின் ஆளை வெளியேதள்ளிவிட்டுள்ளார்கள். நல்லவேளை உயிராபத்து ஏதும் ஏற்படவில்லை. சிலவேளை


# தமிழீழ எல்லைப்புறப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்

சிறீலங்காவின் வடபுலத்திலும் கிழக்குப் பிரதேசத்திலும் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக யுத்தம் இடம்பெற்று வரும்வேளை தமிழ் மக்கள் நாதியற்றவர்களாக தாங்கள் வாழ்ந்துவந்த பிரதேசங்களைவிட்டு வெளியேறி அகதி முகாம்களிலும் ஏனைய பகுதிகளிலும் தஞ்சமடைந்து வரும்வேளை, பனையாலை விழுந்தவனைமாடேறி மிதித்த கதையாக இந்தப்பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்ற சிறீலங்கா அரசு முனைந்து வருவதாக நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாநிலத்தின் எல்லைக் கிராமங்களிலும் தமிழ், முஸ்லிம், சிங்கள இனத்தவர் வாழும் பிதேசங்களிலுமே வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோன்று மெல்ல மெல்ல சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதற்கான மந்திராலோசனைகள் இடம்பெற்று இது தொடர்பான நடவடிக்கைகளும் செயல்வடிவம் பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் வவுனியா மாவட்டங்களின் எல்லைப்புறங்களின் பாதுகாப்பு நடவடிக்கை என்ற பெயரில் காடுகளும், பற்றைக்காடுகளும், வீதியோரங்களில் அமைந்துள்ள சிறியகாட்டுப் பிரதேசங்களும் துப்புரவு செய்யப்பட்டு இப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான திட்டமிட்ட நவடிக்கைகளை சிறீலங்கா அரசு மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் பன்குளம் பகுதி இந்த மாவட்டத்தின் நெற்களஞ்சியம் என்றே கூறப்பட்டுவந்துள்ளது. திருகோணமலை நகரிலிருந்து 20 கிலோமீற்றர்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரைப்பிணமாகக் கண்டெடுக்க முடிந்திருந்தால், இதுவரை காலமும் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக சிங்கள இனவாதத்தின் கோரப் பசிக்கு இரையாக்கப்பட்ட அறுபதினாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்களின் பெயர்களோடு இம்மாணவனது பெயரும் சேர்க்கப்பட்டிருக்கும். சிறீலங்கா நீதித்துறையும் தொடருந்திலிருந்து தவறி வீழ்ந்து மரணம் என்று தீர்ப்பை எழுதியிருக்கும்.

சிங்கள இனவாதம் அனைத்துச் சிங்களவரிடமும் வயது, பால், தொழில் வேறுபாடின்றி ஆழமாகப் புரையோடிப் போயுள்ளது என்பதை எடுத்துக்காட்ட இன்னொரு சம்பவம். பெப்ரவரி 25ஆம் திகதி மொரட்டுவையிலிருந்து புறக்கோட்டை நோக்கிச் செல்லும் நோக்கில் தமிழ் இளைஞர் ஒருவர் பேரூந்தில் வந்தார். சிங்கள இனத்தைச் சேர்ந்த பேரூந்து நடத்துனர் அந்த இளைஞர் ஒரு தமிழர் என்பதை அறிந்ததும் தமிழர்களெல்லாம் சிங்களவர் பிரயாணம் செய்யும் பேரூந்தில் பிரயாணம்செய்ய அனுமதியில்லை எனக்கூறி வெள்ளவத்தையில் வைத்து அவரை வெளியே தள்ளிவிட்டார்.


சிங்கள இனவாதம் தமிழர்களிடமிருந்து பொருட்களைப் பறித்து வயிறு வளர்க்கவும் சில சிங்களக் காடையர்களுக்கு உதவுகிறது. கடந்த பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி, அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்து கொட்டாஞ்சேனையில் தங்கியிருக்கும் தமிழ் இளைஞனுக்கு இவ்வனுபவம் ஏற்பட்டது. கொழும்பு ஆமர்வீதிச் சந்தியில் நண்பகல் பன்னிரண்டு மணிக்கு 155ஆம் இலக்க பேரூந்தில் ஏறிய இவ்வாலிபரை பேரூந்திற்குள் வைத்தே அணுகிய இரு சிங்களவர்கள் தம்மை சிங்கள புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டு, அவரை மேலதிக விசாரணைக்கென கொண்டு போவதாகக் கூறி வேறோர் பேரூந்தில் ஏற்றி விகாரமாதேவி பூங்கா வரைகொண்டு சென்று பூங்காவிற்கு அருகில் அவ் இளைஞரை இறக்கி அவரிடமிருந்த காசு நகை என்பனவற்றை பறித்துக் கொண்டு இது சம்மந்தமாக யாரிடமாவது முறைப்பாடு செய்தாயெனில் நீ புலியெனக் கூறி உள்ளே தள்ளுவோம் என்று மிரட்டியதோடு தாக்கிவிட்டும் சென்றுள்ளனர்.



மேற்குறிப்பிட்ட சம்பவங்களைவிட அன்றாடம் தென்னிலங்கையில் வசிக்கின்ற தமிழர்கள் தமது அன்றாடம் ஜீவனோபாய வாழ்க்கையை நடத்துவதற்காக வேலைத் தலங்களுக்கும், கல்லூரிகளுக்கும், வர்த்தக நிலையங்களுக்கும் செல்கின்றபோதெல்லாம் தமதுசகபாடிகளான சிங்களவர்களால் உடல் உள உபாதைகளுக்குள்ளாகின்றனர்.

இது தொடர்பாக சிறீலங்கா காவல்துறையினரிடம் முறையிடச் செல்கின்ற போதெல்லாம் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடக்கும் சிங்களப் பொலிசார் குற்றவாளிகளைத் தண்டிக்காமல் மாறாக தமிழர்களுக்கு எதிராக தூண்டிவிடுகின்றனர்.

இவ்வாறான தமிழர்க்கு எதிரான மனப்போக்கு தொடருமாயின் தமிழர்கள் சிங்களவருடன் சேர்ந்து வாழ்வது என்பது ஒரு போதும் இயலாது போய்விடும். இலங்கைத்தீவில் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு தமக்கென்று ஒரு தாயகத்தை அமைப்பதைத்தவிர வேறுவழியில்லை. இலங்கைத்தீவில் இரு நாடுகள் அமைவதற்கு சிங்களவர்களே காரணம்.



தூரத்தில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தின் ஆயிரக்கணக்கான ஹெக்டர் வயல் நிலங்கள் தமிழ் மக்களுக்குச் சொந்தமானவை.

நீர்வளமும், நிலவளமும் மிக்கதான இந்தப் பிரதேசத்திலிருந்து 1980 களிலிருந்தே தமிழர்கள் படிப்படியாக வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து இந்த விளை நிலங்களில் சிங்களவர்களே விவசாயச் செய்கையினை மேற்கொணடு வருகின்றனர்.

பொன்கொழிக்கும் அந்தப் பிரதேசத்தினைவிட்டு வெளியேறிய மக்களே இன்று பஞ்சைகளாக பராரிகளாக வாழும்போது தமிழ் மக்களின் விவசாய விளைநிலங்களை பலாத்காரமாகவே தமதாக்கிக் கொண்ட சிங்கள விவசாயிகள் இன்று செல்வச் செழிப்பில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு விவசாய விளைநிலங்கள் படிப்படியாக பறிக்கப்பட்டுவரும் வேளை அரச இயந்திரங்களும் இந்தப் பலாத்காரமுயற்சியாளர்கட்குத் தேவையான பொருளாதார உதவிகளையும் ஏனைய உதவிகளையும் வழங்கி வருவதுதான் இந்தப் பிரதேச வாசிகளின் வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டிய விடயமாகும்.

இத்தகைய நிலையே மூதூர்ப் பிரதேசத்தின் சேருவிலைபோன்ற பகுதிகளிலும் நிகழ்ந்துவருகின்றன. இவ்வாறு பலாத்கார முயற்சிகளினால் தமிழர்களின் விளைநிலங்களை அரச படைகளினதும் அரச இயந்திரங்களினதும் ஆதரவுடன் அபகரித்துக்கொள்ளும் நடவடிக்கைகள் ஒருபுறமிருக்க மறுபுறமோ குடியேற்றத்திட்டங்கள் என்ற பெயரில் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை மெல்ல மெல்லப் பறித்தெடுப்பதற்கான நடவடிக்கைகளும் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றது.

தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்கள் இன்று பற்றைக்காடுகளாக மாறிவிட்டன. இந்தப் பிரதேசங்களைத் துப்பரவு செய்து அங்கு சிங்களவர்களைக் குடியேற்றுவது என்பது இன்று இலகுவான காரியமாகவே உள்ளது.

இந்த நிலையில்தான் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பறித்தெடுக்கவும் அங்கு சிங்களவர்களைக் குடியேற்றவுமான திட்டமிட்ட நடவடிக்கைகள் தொடர்கின்றன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## மார்ச்

### 02.03.00
சிறீலங்கா அரசின் அதியுயர் பாதுகாப்பு வலயம் எனக் கருதப்படும் திருமலைநகரின் உட்துறைமுக வீதியில், 221 பிரிகேட்டின் பொறுப்பாளரான கேணல். பியல அபயசேகரவை இலக்கு வைத்து தற்கொடைத் தாக்குதல் ஒன்று இடம்பெற்றது. இச்சம்பவத்தில் சிறீலங்கா இராணுவத்தின் உயர் அதிகாரி மயிரிழையில் காயங்களோடு தப்பிக் கொண்டார். படைவீரர் ஒருவர் இறந்ததோடு மேலும் மூவர் கடுங்காயங்களுக்குள்ளாகினர்.

### 08.03.00
தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கும் சிறீலங்காக் கடற்படைக்கும் புல்மோட்டைக் கடற்பரப்பில் இடம்பெற்ற மோதலில் சிறீலங்காக் கடற்படைக்குச் சொந்தமான டோராப் படகு ஒன்று பலத்த சேதமடைந்தது.

### 16.03.00
மட்டக்களப்பிலிருந்து வெலிகந்த நோக்கிச் சென்ற சிறீலங்கா இராணுவ வாகனத் தொடரணிமீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட 6 சிங்களப் பொலிசார் பலியாகினர். 15ற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இதில் மட்டக்களப்பிற்கு வந்த குற்றத் தடுப்பு புலனாய்வுப் பணியக சிரேஸ்ட இன்ஸ்பெக்டர் சுமித் டி சில்வாவும் கொல்லப்பட்டார். சத்துருக்கொண்டான் திருகோணமலை வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

### 27.03.00
வரலாற்றுப் புகழ்மிக்க ஓயாத அலைகள் மூன்று இராணுவ நடவடிக்கை குடாநாட்டின் வாயிலை ஓங்கித்தாக்க ஆரம்பித்துள்ளது. விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட கடல் தரைத் தாக்குதல்களினால் சிறீலங்காப்படைகளின் நிலைகள் மற்றும், ஆட்டிலறித் தளங்கள் என்பன நிர்மூலமாக்கப்பட்டன.பெருந்தொகையான சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டதோடு படுகாயமடைந்தனர். ஓயாத அலைகள் தாக்குதல் மூலம் வடமராட்சி கிழக்கின் பெரும்பகுதி மீட்கப்பட்டது. பதினொரு ஆட்லறிகளையும் புலிகள் அழித்துள்ளனர்

### 28.03.00
தொடரும் ஓயாத அலைகள் நடவடிக்கையினால் ஆனையிறவு, இயக்கச்சி இராணுவதளங்களின் தரைவழித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. சிறீலங்கா அரசு தொடரும் ஓயாத அலைகள் நடவடிக்கைகளின் போது இரு அதிகாரிகள் உட்பட நூற்றிற்கு மேற்பட்ட படையினர் பலியானதாகவும் 275ற்கு மேற்பட்ட படையினர் காயமடைந்ததாகவும் ஒப்புக்கொண்டது.

### 30.03.00
பலாலியிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட அன்ரனோவ் விமானம் 40 சிங்களப் படையினரோடு அநுராதபுர தலாவைப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியது. இது இம்மாதத்தில் மாத்திரம் சிறீலங்காப் படையிழந்த மூன்றாவது விமானமாகும்

### 04.03.00
நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும்முகமாக மிகப்பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை சிறீலங்காப் பௌத்த பீடங்களான மல்வத்தை பீடம், அமரபுர பீடம், அஸ்கிரிய பீடம், சியாம் பீடம் ஆகிய பீடங்களைச் சேர்ந்த பௌத்த பீடாதிபதிகளும் பிக்குமாரும் நடத்தினர். இதன்போது மகஜர் ஒன்றையும் நோர்வே தூதரிடம் கையளித்தனர்.




### 10.03.00
கொழும்பு புறநகர்ப் பகுதியான பொறளைப் பகுதியிலுள்ள பாராளுமன்றம் நோக்கிச் செல்லும் வீதியில் மாலை ஆறுமணியளவில் சக்திவாய்ந்த குண்டொன்று வெடித்தது. அதனைத் தொடர்ந்து நேரடித் துப்பாக்கிச் சண்டையும் இடம்பெற்றுள்ளது. சிங்கள அரசையும் அதன் பாதுகாப்புத் துறையினரையும் அதிர்ச்சியடையவைத்த இத்துணிகரத் தாக்குதலில் 6 பொலிஸ் உயரதிகாரிகளுட்பட இருபதிற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். முப்பதிற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துமுள்ளனர். இருபதிற்கு மேற்பட்ட வாகனங்களையும் இச்சம்பவத்தில் சிங்களத் தரப்பு இழந்துள்ளது.



### 14.03.00


செம்மணியில் 600ற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கொன்று புதைக்கப்படுவதற்கு காரணமாக இருந்தவர்கள் என்று சிறீலங்கா அரசால் கண்துடைப்பிற்காக இனங்காணப்பட்டவர்களில் ஐந்து படையினர் நீண்ட இழுத்தடிப்புக்களின் பின்னர் யாழ். மாவட்ட நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர்.

### 26.02.00
யாழ் நகரில் மாபெரும் அமைதிப் பேரணியொன்று நடத்தப்பட்டது. சுமார் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்ட இப்பேரணியை அறுபதிற்கு மேற்பட்ட பொது அமைப்புக்கள் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்திருந்தன. நல்லூர் முருகன் ஆலயத்தில் ஆரம்பமான மக்கள் பேரணி துரையப்பா விளையாட்டரங்கில் நிறைவடைந்தது. பேரணியின் இறுதியில் மூன்றாந்தரப்பு நடுவரின் முன்னிலையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சிறீலங்கா அரசினால் தமிழீழ மக்கள் மீது விதிக்கப்படும் அனைத்து அழுத்தங்களும் உடன் நீக்கப்பட வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜர் ஒன்றும் சிறீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது.






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'கண்கள் கூறும் வார்த்தைகள்'

காணும் கண்களே,
கூறும் வார்த்தை என்ன?
அஞ்சல் ஊடாக எரிமலைக்கு.





**எரிமலை**
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*FRANCE.*

குறிப்பு: உங்கள் ஆக்கங்களை பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதவும்.

## எரிமலை பெப்ரவரி



எங்கும் வளமேவும் தங்க மண்ணெங்கள்
தாயின் மண் என்று சொல்வாள் - இவள்
எள்ளி நகையாடும் எதிரி படையோட
எழுந்து களமாடச் செல்வாள்.
கோடித் தமிழ் மாந்தர் ஆள நிலங்காண
ஆவி தரும் ஆசை கொள்வாள் - இவள்
வீறு நடை கொண்ட வேங்கை வழி நின்ற
வீரத் தமிழீழப் பெண்ணாள்.

புறத்து நானூறு புகழும் தமிழ் அன்னை
உறவுகளை மட்டும் தந்தாள்
திறத்தில் இவள் ஒன்றும் அவளில் குறையாது
தன்னைக் கொடையாகத் தந்தாள்
எறியும் கணை கொண்டு எதிரி நம்மண்ணை
எரிக்கும் போது இவள் சடமா?
எரியும் நிலை கண்டு எழுச்சி கொண்ட பெண்மை
எளிதில் எரியாது திடமே!
இது வீரம் விளைகின்ற காலம்
இனி விண்ணும் கை முட்டும் தூரம் - எங்கள்
கனவுத் தமிழீழம் நனவில் உருவாகி
நம்மை அடைகின்ற நேரம்.

**ஞானி**
**ஜேர்மனி**

சமுதாய களை அறுத்து
வீரமுடன் நாம் எழுந்தோம்
புதுயுகம் படைத்தே மடிவோம்.

மண், பெண் விடுதலையை—எம்
இரு கண்களாய் நாம் கொண்டோம்.

பெண்ணை மிதிக்க
இனியும் விடோம்.

தாயக மண் மீட்க
தமிழிச்சிகள் புலிகளாயினர்.

இயலாதென்பது இனி—எம்
அகராதியில் இல்லையடி பெண்ணே.

திட்டமிட்ட எல்லைகள் நோக்கிய நகர்வில்
தொல்லை தகர்க்க துணிவுடன் செல்கின்றோம்.

அங்கயற்கண்ணி காற்றடம் பதித்து
கரிகாலம் சுட்டும் விரல் பார்த்து
பொறுப்புடன் நகர்கின்றோம்.

கருவறுக்க வந்தவனை
புறமுதுகிட்டோடச் செய்து
மீட்டு வந்த ஆயுதத்தை
பத்திரப்படுத்துகிறோம்.

**திருமதி. நளாயினி**
**சியோன்—சுவிஸ்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net